பக்கங்கள் -20

அறிமுக விலை 20/=

# புதியவன்
## PUTHEYAVAN

ஊருக்கு நல்லது சொல்வேன்-உண்மை அறிந்து சொல்வேன்

பாதை 01 | ஒகஸ்ட் 19-ஒகஸ்ட் 26 - 2013 | பயணம் 05









PUBLIC LIBRARY
JAFFNA




முழுப்பக்கம் விளம்பரம் செய்யும் விளம்பரதாரர்களுக்கு
1 மாத இணைய விளம்பரம் இலவசம்

www.putheyavan.com

24X7 மணிநேர முதன்மைச் செய்திகள்

அரசியல்,சினிமா,அழகு,திரைவிமர்சனம்
விநோதம் போன்ற சுவாரசியமான அம்சங்களுடன்

உள்ளதை உள்ளபடி...



இளைய தலைமுறையினரின் இதயக்குரல்..

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அறிவன் பதில்கள்

தே.அமர்நாத் - வவுனியா
**மதவாதி-மிதவாதி இருவரையும் ஒப்பிடுக!**
மதவாதி அரசியலில் வகுப்புவாதி - மிதவாதி அரசியலில் சந்தர்ப்பவாதி.

க.மேகநாதன் - கைதடி
**கவிஞன் - சிற்பி இருவரில் உயர்ந்தவர் யார்?**
பேனாவால் சிற்பம் வடிப்பவன் கவிஞன் உளியால் கவிதை படைப்பவன் சிற்பி.

மு.அமரசிங்கம் - அளவெட்டி
**மிகச் சிறந்த நடிகன் யார்?**
நமது அரசியல் வாதிகள் அனைவருமே ஒருவரை ஒருவர் வென்ற நடிகர்கள் தான்.

ஞானவல்லி - நாயன்மார்கட்டு
**அபிவிருத்தி முக்கியமா? உரிமை முக்கியமா?**
உரிமையற்ற மக்களுக்கு அபிவிருத்தியால் என்ன பயன்?

ம. செல்வகுமார் - கிளிநொச்சி
**தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் நீங்கள் கலந்து கொள்வதில்லையா?**
சமுதாயத்தை ஏமாற்றும் சாரமற்ற பேச்சுக்களால் பயனில்லையே!

க.கலையரசன் - சுதுமலை
**மகாத்மா காந்தி இன்றிருந்தால்....?**
இந்திய அரசியல்வாதிகளின் செயல்களால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டிருப்பார்.

து.ஞானசபேசன் - இயக்கச்சி
**தமிழ்மக்களின் பக்தி உணர்வு எப்படி உள்ளது?**
திருவிழா நாட்களில் வெளிப்படையாகவும், அல்லாத நாட்களில் மௌனமாகவும் இருக்கும்.

தி.அஞ்சனா - புங்குடுதீவு
**அறிவனாரே தமிழ்ப்படம் பார்ப்பதுண்டா?**
அவ்வப்போது தூக்கம் வராத வேளைகளில் அதனை வரவழைத்துப் பார்ப்பதுண்டு.

க.அமுதசுரபி - அல்வாய்
**உங்களுக்கு ஒரு சிலை வைத்தால் எப்படியிருக்கும்?**
சிற்பிக்கு உழைப்பாகவும், பறவைகளுக்கு இருப்பாகவும் இருக்கும்.

த.தவராஜா - சாவகச்சேரி
**லஞ்சம் - ஊழல் அதிகரித்து விட்டதே... இதனை ஒழிக்க முடியாதா?**
லஞ்சம் - ஊழல் பேர்வழிகள் பலரும் அதனை ஒழிக்க வேண்டியவர்கள் பின்னால் ஒழிந்து கொண்டிருக்கிறார்களே....!

த.வெள்ளையன் - அம்பாள்புறம்
**தேர்தலில் வெல்ல வேண்டுமென கடவுளுக்கு நேர்ததி வைப்பவன் எப்படிப்பட்டவன்?**
மக்கள் தனக்கு வாக்களிக்கமாட்டார்கள் என திடமாக நம்புவான்!

ஜெ.ஆம்ஸ்ரோங் - நாவாந்துறை
**உலகின் மிகப் பெரிய பிச்சைக்காரன் யார்?**
மூன்றாம் உலக நாடுகளின் நிதி அமைச்சர்கள் அனைவருமே பரிதாபத்திற்குரிய பிச்சைக்காரர்கள்தான்.

கி.பிறமீளா - மாதகல்
**முன்னாள் நீதிபதி முதலமைச்சரானால்...?**
ஜனாதிபதிக்கே சத்தியப் பிரமாணம் செய்து வைக்கக் கூடிய தகுதியுள்ளவர் இன்னொருவரின் முன்னால் சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டியிருக்கும்.

தி.பாஸ்கரன் - அல்லாரை
**உலகமயமாக்கல் என்ன செய்கிறது?**
உலகை அமெரிக்க மயமாக்கலை நோக்கி இழுத்துச் செல்கிறது.

க.இரத்தின கோபால் - கோப்பாய்
**ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?**
பிரதேச சபைக்கே தேர்வாகாதவர் - மாகாண சபைக்காக தேர்வாகப் போகிறார்.

இ.குமரகுரு - விசுவமடு
**வரவர முதியவர்களை மதிக்கும் பண்பு இளையோர்களிடம் குறைந்து வருகிறதே!**
இளமை தினமும் முதுமையை நோக்கி விரைகின்றது என்பதை உணரும் திறன் அவர்களுக்கு இல்லை அவ்வளவுதான்.

சி.குணபாலன் - உரும்பிராய
**நமது ஆன்மீகக் குருமார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?**
தேசத்தில் அக்கறையின்றி வெறும் உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

க.நீலகண்டன் - நாவற்குழி
**நம் நாட்டில் எப்போது சமதர்மம் உருவாகும்?**
இனவாதம், மதவாதம், சந்தர்ப்பவாதம் இல்லாத மனோதர்மம் மக்களிடம் தோன்றும் போது.

வ.மகாலிங்கம் - மன்னார்
**பெரும்பாலான தமிழ் மக்கள் வாக்களிப்பதில்லையே ஏன்?**
வாக்குறுதி வழங்குவோர் மீது நம்பிக்கையில்லாததால் போலும்

சி.சித்திரகலா - சங்கானை
**சிகலஉறுமய தேரர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**
பற்றற்ற, அரசியல் பங்காளர்கள்.

## அறிவன் பதில்கள்

அறிவன் பதில்களுக்கான உங்கள் கேள்விகளை தபால் மூலமோ, மின்னஞ்சல் மூலமோ வாசகர்கள் அனுப்பி வைக்கலாம்.



**தபால் முகவரி:-**
அறிவன் பதில்கள்
புதியவன், இல. 87, பிரதான வீதி,
மன்னார்.
**மின்னஞ்சல்:-**
puthiyavan2013@gmail.com



# ரென்சன் மணியம்

நல்லூர்த் திருவிழாவெண்டால் சொல்லவா வேணும். அந்த ஊர் மட்டுமல்ல பக்கத்து ஊர்களும் களைகட்டத் தொடங்கும். காலை, மாலை நேர பூசையைப் பார்ப்பதற்கு சனம் முண்டியடிக்கும். இதற்குள்ள வியாபாரிகள் ஒருபக்கம் தமது விற்பனைப் பொருள்களை விற்பதில் மும்முரமாக நிற்பார்கள். கூடுதலாக கச்சான் கடைகள் நிறைந்து வழியும். கோயில் திருவிழாக் காலங்களில் முன்னைய காலங்களில் கச்சான் கடைதான் போடுவார்கள். பின்னர் காலம் மாறிப் போக பல கடைகள் திருவிழா காலங்களில் கோயில் வீதியைச் சுற்றி முளைத்திருக்கும். அதாவது சைக்கிள் பாதுகாப்பு நிலையம் தொடக்கம் செருப்பு பாதுகாப்பு நிலையம் வரை திறக்கப்படும் என்றால் பாருங்களேன்.

நல்லூர் முருகனைக் கும்பிட்டால் அருள் கிடைக்குதோ இல்லையோ நல்ல வருவாய் கிடைக்கும். பணம் கொட்டோ கொட்டென்று கொட்டும். பணக்காரக் கடவுள் முருகன். நல்லூர்த் திருவிழாவுக்கு புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தொடக்கம் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்களும் வருகை தருவார்கள். இவர்களின் வருகையைப் பார்த்து நல்லூர் சுற்றுலா மையாமாக இருக்குமா என்று எண்ணத் தோன்றும். அந்தளவுக்கு பெட்டைகள் காற்சட்டையுடன் வருவார்கள். இந்தியாவில் பிரசித்தி பெற்ற கோயில்கள் இருந்தாலும் நல்லூர்க் கோயிலைப் போல் வருமா. அதன் சுத்தம் அங்கு பேணப்படுமா என்று கேட்கும் அளவுக்கு நல்லூர் ஆலயம் மிளிர்கிறது.

முருகனின் கண்கொள்ளாக் காட்சி மேலும் மெருகேற்றுகிறது. இப்படியான சூழலில் நாம் எப்படி நடக்க வேண்டும். எப்படிச் செல்ல வேண்டும் என்ற பண்பாடு இருக்க வேண்டும். ஆண்கள் வேட்டியுடனும், பெண்கள் சேலையுடனும் ஆலய சூழலில் உலாவ வேண்டும். அப்பொழுது தான் முருகனை வழிபடுகிறீர்களோ இல்லையோ ஒரு ஒழுங்கு பேணப்படும். செருப்புடன் ஆலய வீதியில் உலா வருவார்கள். புனிதமான அந்த இடத்தில் நாங்களும் புனிதமாக இருந்தால் தான் ஆலய சூழல் புனிதம் பேணப்படும்.

முருகனை வழிபடச் செல்பவர்கள் நகைகளை அணிந்து செல்லாதீர்கள். ஏனெனில் சன நெரிசலில் கள்வன் எவன் என்று தெரியாமல் இருக்கும். ஆலய சூழலில் தான் நகைகள் களவாடப்படுகிற சம்பவம் கூடுதலாக இடம்பெறுகிறது. எனவே நல்லூருக்குச் செல்பவர்கள் நகைகளை தவிருங்கள். வீட்டில் ஒருவரும் இல்லாமல் வீட்டில் நகைகளை வைத்து விட்டும் செல்லாதீர்கள். நகைகளை அணியாமல் சென்றால் முருகனை பக்தி பூர்வமாக வழிபட முடியும். மனதை அலைபாய விடாமல் ஒரு நிலைப்படுத்திக் கொள்ள முடியும். மற்றவரைப் பார்த்து நீங்கள் நடக்க வேண்டாம். உங்களைப் பாதுகாத்து நீங்கள் நடவுங்கள். பொழுது போக்கு இடமாக நல்லூரை நினைத்துச் செல்லாதீர்கள். வரம் வேண்டி முருகனை வழிபடச் செல்லுங்கள்.

போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழர்களுக்கு விடிவு இன்னும் ஏற்படவில்லை. தமிழ்க் கடவுளான முருகன் தமிழர்களை கைவிடுவானோ? இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்கும் மீளக் குடியமர முடியாமல் தவிக்கும் மக்களுக்கும் ஒரு விடிவினைக் காட்ட வேண்டும். உன் அடி தேடி வருபவர்களுக்கு முடியினைக் காட்டுவாயா? மூன்று தசாப்தம் போரில் ஈடுபட்ட தமிழ்ச் சனம் போர் தோல்வி கண்ட நிலையில் மீள முடியாமல் தவிக்கிறது. சொல்லொனாத் துயரங்களை அனுபவிக்கிறது. அடுத்த கட்ட வாழ்வை நகர்த்து வதற்கு வழி தெரியாமல் இருக்கிறது. பிழைப்பைத் தேடி தவறான பாதைக்கு செல்லுகிறது. தமிழர்களுக்கு ஒரு பாதையைக் காட்டு. அந்த வழியே எல்லோரும் ஒற்றுமையாக நடக்க விடு. போராட்டத்தில் தோல்வி கண்ட தமிழினம் இப்பொழுது தங்களுக்குள் சண்டை போடத் தொடங்கிவிட்டன. இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன என்று பாத்திராமல் தமிழர்களுக்கு சிறந்த ஒரு தலைமையைக் கொடு. அந்தத் தலைமை தமிழ் மக்களின் பிரச்சினையில் முழுமையாக பங்கெடுக்கும் வகையில் உருவாக்கு. மூன்று தசாப்த போரினை எப்படி பிரபாகரன் வழி நடத்திச் சென்றானோ அதே மாதிரி இனிவரும் காலங்களில் தமிழர்கள் தலை குனிந்து நிற்காத வகையில் வழி நடத்திச் செல்ல ஒரு தலைமையைக் கொடு. வேலோடும் வரும் நீ ஒரு வேலாயுதத்துக்கு மகனைக் கொடுத்தது போல் இன்னொரு மகனுக்கு வேலைக் கொடு. உனது பெயரில் நாமம் சூடடு. உனது வழியில் கொண்டு செல். அடிமை வர்ழ்வு, பண்பாட்டு சிதைவுகள் தமிழர்களுக்கு தீங்கிழைக்கும் எல்லாவற்றையும் உடைத்தெறி. தோளில் உன்னை சுமந்து ஆடுபவர்களுக்கு தோள் கொடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதியவன்
PUTHEYAVAN
# 87 பிரதான வீதி, மன்னார்.
தொலைபேசி.இல. 023 3238444
E.mail: putheyavan2013@gmail.com

## தோழமையின் எதிரிகள்

ஒரு காலத்தில் இந்த நாட்டின் இடது சாரிகளுக்கு ஒரு விதமான மதிப்பிருந்தது.

அதுவும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் அவர்களுக்கு தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு குறைவாக இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அவர்கள் படித்தவர்கள், மக்களின் அடிப்படை உரிமைகள் குறித்து நிதானமாக சிந்திப்பவர்கள், அடித்தள மக்களுக்காக குரல் கொடுப்பவர்கள் என்ற வகையில் தமிழ் மக்களின் மதிப்பை பெற்றவர்களாக இருந்தனர். 1956ஆம் ஆண்டில் பண்டார நாயக்காவின் தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி (MEP) ஆட்சிக்கு வந்த பின்னர் இடது சாரிகள் முதலாளித்துவ சிந்தனைகளுக்கு அடிமையாகி மெல்ல, மெல்ல சிவப்பு சாயமிழந்த வரலாறு நாடறிந்த விடயமே.

என்.எம்.பெரேரா, கொல்வின் ஆர்.டி.சில்வா, எட்மண்ட் சமரக் கொடி போன்றோர் ஒரு காலத்தில் சிறுபான்மை சமூகத்தவருக்காக குரல் கொடுத்த வரலாறும் உண்டு. ஆனால் சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தில், சமசமாஜிஸ்ட்டுகள், கம்யூனிஸ்ட்டுகள் என அனைவரும் பதவிக் கதிரைக்காக தமது சமதர்மக் கொள்கைகளை எவ்வாறு கைவிட்டு பேரினவாத அரசியலுள் ஒன்றிப் போன கதை அவர்கள் தம் தனித்துவத்தை இழந்து போன கதை பரிதாபகரமானது.

சமசமாஜிஸ்ட்டுகள் கொம்யூனிஸ்ட்டுகள் மட்டுமல்லாது அவர்களில் இருந்து பிரிந்து புரட்சி செய்ய முயன்ற ஜே.வி.பியினரும் கூட பேரினவாத-நிறைவேற்று அதிகார அரசியலுள் அமிழ்ந்து சுயமற்று இனவாதிகளாக மாறி நிற்பது, முதலாளித்துவத்தின் பெரும் வெற்றி என்பதில் ஐயமில்லை.

அற்பப் பதவிகளுக்காக மார்க்ஸ்-லெனின்-மாவோ-ட்ரொங்கி போன்றவர்களின் அடிச்சுவட்டில் அரசியல் செய்ய வந்தவர்கள் பண்டார நாயக்கா முதல் மகிந்த ராஜபக்ஷ வரையிலானோரில் சிந்தனைகளுக்கு அடிமையாகிப் போனதை வரலாறு அழுத்தமாகவே பதிவு செய்துள்ளது.

அண்மையில் அமைச்சர் திஸ்ஸவிதாரண (இவரும் ஒரு இடது சாரிக்காரராம்)- வடமாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் தான் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்று 'புரட்சிகரமான சிந்தனையில் உருவான கருத்தொன்றை கூறியிருக்கிறார்.

வெட்கம்! புரட்சி பேசிய வாய், சமதர்மம் சொன்ன 'நா' இனவாதம் பேசுகிறது.

குற்றுயிராய் கிடக்கும் இலங்கையின் இடது சாரித்துவத்திற்கு இறுதிக் கிரியை செய்யும் முயற்சியில் அரசில் ஒட்டியுள்ள இடது சாரிகள் எனத் தம்மை கூறிக் கொள்வோர் இறங்கியுள்ளார்கள் என்பது.

உண்மையாக இடதுசாரிக் கோட்பாட்டில் அர்ப்பணிப்புடன் செயற்படுவோர் ஒரு சிலர் இருந்தாலும் அவர்களின் கருத்துக்கள் 'ஏழை சொல் அம்பலம் ஏறாது' என்ற நிலையிலே உள்ளது தான் யதார்த்தம்.

இனவாதிகள் ஒரு போதும் மனித நேயம் கொண்டவர்களாக இருக்க முடியாது.

மனித நேயத்தை மறந்து இனவாதம் பேசுவோர் இடது சாரிகளும் அல்ல.

இடது சாரிச் சித்தாந்திகள் இனவாதச் சேற்றுள் இடறி விழுந்தது அரசியல் சந்தர்ப்பவாதத்தால் அன்றி வேறொன்றினாலும் அல்ல.



## காதோரமாக.... லைன் பொடியன்....

உலகெங்கும் செய்திகளை திரட்டி எந்தவொரு புதினப் பத்திரிகை, வெளிவந்தாலும் அப் புதினப் பத்திரிகைகளை வாசகர்களிடம் எடுத்துச் செல்பவன் "லைன் பொடியன்கள்" எனப்படும் விநியோகப்பணியாளனே. அண்மையில் குடா நாட்டு நாளிதழ்களை முடக்க, அத்தகைய விநியோகப் பணியாளர்கள் இலக்கு வைத்து தாக்கப்பட்டது அனைவரும் அறிந்ததே.
உள்ளேயும் வெளியேயும் புதினங்கள் பலவற்றை அறிந்தவர்களாக, இந்த லைன் பொடியன்கள் இருந்து விடுகிறார்கள். சுவையான பல செய்திக் கதைகளின் பின்னணினில் பலர் அவ்வாறு இருந்து விடுகின்றனர்.

### இனி உங்களுடன் லைன் பொடியன்

➢ தமிழ்த் தேசியத்தை காப்பதாகக் கூறி கல்லா கட்டும் அந்த யாழ்ப்பாண நாளிதழது ஆசிரியரும் திருமண பந்தத்தினுள் புகுந்து விட்டார். மனதார வாழ்த்துக்கள், மணப்பெண்ணும் வன்னியில் ஓடியாடி சேவையாற்றியவரென்பதால் இரட்டிப்பு வாழ்த்துக்கள். ஆனாலும் பாருங்கோ திருமணத்தில் முக்கிய விருந்தினர் எங்கடை கே.பி ஐயாதான். யார் பக்கம் அழைச்சு வந்தாரோ தெரியவில்லை. நல்ல காலம் எங்கள மாதிரி ஆக்களின்ரக்கு வந்திருந்தா துரோகியள் எண்டு பட்டம் சூட்டிப் போடுவினம். ஆனால் அந்தப் பக்க தொண்டரடிப் பொடியன் இது பற்றி மூச் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே.

➢ கூட்டுக்குள்ள இருந்த தியேட்டர் தம்பி முன்னாள் மனித உரிமை (?) சட்டத்தரணிதானாம் பிணையில எடுத்து விட்டவர். பொடியன வைச்சு ஜென்டில்மேன் பட சாயலில வீடுகளில் ஆட்டையப் போட்டுட்டு ஆள் நல்ல சோக்காத்தான் இருந்தவர். காரை விட்டு தம்பி கீழே இறங்கவே மாட்டார். பிணையெடுத்த சட்டத்தரணி ஐயா தனக்கு ஆயிரம் வோட்டு திரட்டி தரவேணுமெண்டு டீல் போட்டுத்தானாம் வெளியில எடுத்துவிட்டவர் டீலா நோ டீலா?

➢ ஆளும் பக்கம் சேர்ந்து மாகாணத்தில நிற்கிற கல்வி அதிகாரி ஐயா இப்பவும் மலரும் நினைவுகளில் தானாம் நிக்கிறார். பழைய தொழிலிடத்தில உறவுகளை அவர் நல்லாத்தான் பேணிவாறாராம். இப்பவும் காரில வந்து கௌவிக் கொண்டு போறதில மனுசன் குதிரை வேகமாகத்தான் இருக்குதாம். தற்செயலா உவங்கள் வெண்டு, அமைச்சரானால் அது கல்வி அமைச்சோ, கலவி அமைச்சோ எண்டு ஒரு பகுதி குசுகுசுக்குது.

➢ ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம் எண்டமாதிரி கிளிநொச்சியில இப்ப கூட்டமைப்புக்கு இரண்டு கட்சி அலுவலகமாம். ஏற்கனவே பலரும் படிச்சு படிச்சு சொல்ல, தமிழரசுக் கட்சி அலுவலகம் தான் நடத்துவனெண்டு நிண்ட எம்பி இப்ப சுதாகரிச்சுக்கொண்டு தானும் கூட்டமைப்பு அலுவலகமெண்டு புது விளம்பர பலகை நட்டு திறந்து வைச்சிருக்கிறார். எல்லாம் ஆனந்தமானவர் புதிசா போட்டிக்கு கடை திறந்து வியாபாரம் நடத்தினதின் எதிர் வினைதானாம்.

➢ ஜனாதிபதிக்கு புதிய தமிழ் ஊடக இணைப்பாளர் இப்ப இருக்கிறார். ஆள் விண்ணன் போல கிடக்குது. இப்பவோ, எப்பவோ ஊத்தி மூடப்போற பேப்பரில இருக்கிறதிலயும் பார்க்க, ஒதுங்கி பிழைச்சுக் கொள்ளுறது கெட்டித்தனமெண்டு ஆள் நினைச்சிட்டுது போல. ஒனர் சத்தமில்லாமல் ஜனாதிபதியின்ர காலில விழுந்து சரணாகதி அடைந்திட்டார். ஜனாதிபதியே கூட்டமைப்பிலிருந்தும் வந்து சேர பலரும் தன்னோட பேசுறதா போட்டுடைச்சுப் போட்டார். அதுக்குப் பிறகும் மூழ்கிற படகில் பயணிக்க என்ன அந்த ஆள் என்ன பிழைக்கத் தெரியாத ஆளே.

➢ சொந்தச் செலவில சூனியம் வைக்கிறதில, கூட்டமைப்பிற்கு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புகாரர் கொஞ்சமும் குறைஞ்ச ஆக்களில்லை. பத்திரிகையாளர் மாநாடு வைக்கிறம். நேரடி அஞ்சல் செய்யிறமெண்டு சொல்லி, யாழ்ப்பாணத்தில நல்லா மூக்குடைபட்டுப் போயிருக்கினம். எங்கட பேப்பர்காரப் பொடியன் சுத்தி நிண்டு விளாசியிருக்கிறாங்கள். கனகரத்தினத்தார் பின்னால் குந்தியே இருந்திட்டாராம். எங்கட ஜனாதிபதி ஊனத்தையும் உயிரையும் தவற எல்லாவற்றையும் திருப்பித்தருவாரெண்டு கீதாஞ்சலி அம்மா சொல்ல அப்ப காணாமல் போன உங்கட கணவரை கண்டு பிடிச்சு தந்திட்டாரோவெண்ட மறு கேள்வியை பேப்பர்காரர் போட்டாங்கள். மனுசி பேச்சு மூச்சில்லை.
ஆனாலும் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தினான் எண்டு சனாதிபதிக்கு கணக்கு காட்டினால் சரியெண்டு ஏசியன் ரிடியூன் இராஜசிங்கம் சொன்னது விழுந்தும் மண் படாத கதைதான்.

➢ கடைசி வரை நம்ப வைச்சு கழுத்தறுத்ததால, முடங்கிக் கிடந்த பேச்சாளர் வாத்தி பழையபடி வெளிக்கிட்டிட்டாராம். சுதந்திரக் கட்சியில நிக்கிறவையை வெல்ல வைப்பனெண்டு மனுசன் முழு வீச்சில நிக்குதாம். தமிழ்த் தேசியத்தின்ர பக்கம் ஆரேனும் நிண்டு கதைச்சாலும் மனுசன், முறைச்சுக் கொண்டு வருகுதாம். உதுக்குப் பிறகும் தன்ரை விசுவாசத்தை காட்ட நிக்கிறவரை நினைச்சு சகபாடிகள் தலையில அடிச்சுக்கொள்ளுகினமாம்.

➢ கூட்டமைப்பில, பெரும்பாலான வேட்பாளர்கள் பிரச்சாரங்களுக்கு இறங்க கையில காசில்லாமல் சிங்கி அடிச்சுக் கொண்டிருக்க பின் கதவால சீட்ட பிடிச்ச, வாத்தியார் வேட்பாளர் பிரச்சாரத்தில சுத்திச் சுழலுகிறாராம். எங்காலை கையில காசு எண்டு பலரும் வாயை பிளந்து கொண்டு பார்க்கினம். அண்ணை எங்களுக்கு உண்மை தெரியும். போட்டுடைக்கேக்கை போட்டுடைப்பமெண்டு கொஞ்சப் பொடியள் கண்ணை சிமிட்டுறாங்கள். பார்ப்பம் என்ன நடக்குதெண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செ. வவுனியன்

# தமிழர் பிரதேசத்தை இலக்கு வைக்கும்
# சிங்கள குடியேற்றங்கள்

'**தா**ய் இல்லா பிள்ளையை தவிக்க விட்ட தாய்' போல அமைந்துள்ளது யுத்தத்தின் பின்னரான தமிழர் வாழ்வு.

ஆண்டாண்டு காலமாக் தமிழர் தம் பூமியில் இருத்தல் எனும் செயற்பாட்டை செயற்படுத்துவதற்கு பெரும் பிரயத்தனங்களை கைக்கொள்ளவேண்டிய நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இந் நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் இனவிகிதாசார குழப்பத்தை ஏற்படுத்துவதன் நோக்கோடு அவர்களின் தாயகபூமி எனப்படும் பிரதேசங்களில் வலிந்த குடியேற்றங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் அரங்கேறி வருகின்றன.

சிங்களக் குடியேற்றமானது இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. வடக்கு கிழக்கை வியாபித்து பரவலாக 1900ம்களில் ஆரம்பித்து விட்டன. அதன் தொடர்ச்சியே தற்போது அரங்கேறி வருகின்றது.

1941 ஆம் ஆண்டு காணி அமைச்சராக இருந்த D.S.சேனநாயக்க மட்டக்களப்பின் பட்டிப்பளை என்ற பிரதேசத்தை கல்லோயா என்ற பெயர்மாற்றத்துடன் முதலாவது குடியேற்றத்திட்டத்தை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன் தொடர்ச்சியாக திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல குடியேற்றத்திட்டங்கள் நீண்டகால இலக்கினை அடிப்படையாக வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் திருகோணமலை மாவட்டமே. அதிகளவில் பாதிப்புக்குள்ளாகிய மாவட்டமாகும்

திருமலை மற்றும் முல்லை மாவட்டங்களின் இணைப்பாக காணப்பட்ட மணலாறுப் பகுதியையும் சிங்களக்குடியேற்றமாக்குவதன் அடிப்படையில் தமிழர் தாயக பிரதேசம் என கூறப்படுகின்ற வடக்கையும் கிழக்கையும் புவியியல் ரீதியில் பிரித்து விடுவதற்கு அப்போதைய ஆட்சியாளர்கள் திட்டம் தீட்டியுள்ளனர்.

தேசியப்பிரச்சனை இடம்பெறும் பல நாடுகளிலும் சுயநிர்ணய உரிமைக்கான தாயகப்பிரதேசம் என்ற பிரதான உரிமையை மறைப்பதற்காக குடியேற்றங்களையே கையாண்டு வந்துள்ளதை அவதானிக்கலாம். அந்த வகையில் தான் பாலஸ்தீனத்தில் யூதர்களின் குடியேற்றமும் அயர்லாந்தில் புரட்டஸ்தாந்தினரின் குடியேற்றமும் கோசோவாவில் சேபியர்களின் குடியேற்றமும் இடம்பெற்றன. எனினும் அயர்லாந்திலும் கோசேவாவிலும் நிலைமை சுமுகமாக காணப்பட்டாலும் பாலஸ்தீனத்திலும் இலங்கையிலும் அதன் தொடர்ச்சி இடம்பெற்ற வண்ணமே உள்ளது.

அல்லைத்திட்டம், கந்தளாத்திட்டம், பதவியாத்திட்டம், மொறவெவாத்திட்டம், மகாதிவுள்வெலத்திட்டம், பாவக்குளம் திட்டம் என பல்வேறு திட்டங்களின் மூலம் விவசாய நடவடிக்கையை மேம்படுத்துவதாக கூறி குடியேற்றங்களை நிறுவியதுடன் அயலில் உள்ள தமிழர்களை விரட்டியடித்து அவர்களின் உடமைகளை அபகரித்தும் கொன்றும் குவித்தனர்.

தற்போதும் கூட அரசாங்கத்தின் பிரதான அங்கம் வகிக்கும் கட்சியான கெல உறுமய யாழ்ப்பாணப்பிரதேசத்தில் 80களிற்கு முன்னர் வாழ்ந்த 21ஆயிரம் சிங்களவர்கள் மீள்குடியேற்றப்பட வேண்டுமென்கின்றது. அந்தவகையில் நாவற்குழி பிரதேசத்தில் சிலர் குடியேற்றம் செய்யப்பட்டும் விட்டனர். 80க்கு முன்னர் வாழ்ந்த சிங்களவர்கள் அப்போது எங்குள்ளனர் என்றால் யாருக்கும் தெரியாத புதிராகவேயுள்ளது. அதற்கான தரவுகளும் பெறப்படவுமில்லை அந்தவகையிலேயே இனவாத அரசியலாளர்களின் வார்த்தைகள் அமைந்துள்ளன.

அத்துடன் மீள்குடியேற்ற அமைச்சராக இருக்கும் மில்ரோய் பெர்ணாண்டோவும் முல்லைத்தீவில் வாழ்ந்த சிங்களவர்கள் மீளக்குடியேற்றப்பட வேண்டுமென்ற கருத்தை தனது பதவியேற்பின் போது பகிரங்கமாக கூறியிருந்தார்.

முன்னைய காலங்களில் விவசாயத் திட்டங்களின் பெயரில் குடியேற்றப்பட்ட நிலையில் தற்போது பகிரங்கமாகவே இவ்வாறான கருத்தை தெரிவித்து குடியேற்றம் செய்யப்படவுள்ளமை "உடையவன் இல்லாவிட்டால் ஒரு முழம் கட்டை" என்பதைப்போன்றுள்ளது.

1941 இன் பின்னர் தொடர்ச்சியாக இடம்பெற்ற சிங்களக்குடியேற்றங்களின் படி நிலையில் அல்லைத்திட்டமானது திருகோணமலை மாவட்டத்தின் முதலாவது விவசாய குடியேற்றத்திட்டமாகும். இது 1949 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. ஆனாலும் 1953ஆம் ஆண்டு முதலே அங்கு மக்கள் குடியேறத் தொடங்கினர். மகாவலி கங்கை ஆற்றினை மறித்து வாய்க்கால் மூலம் திருப்பி அல்லைக் குளத்தை நிரப்பி அதனோடு சூழவுள்ள கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுப்பதற்காகவே இத்திட்டம் தொடங்கப்பட்டதாகும்.

அத்திட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் திருமலையை பிரதிநிதிப்படுத்தி தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவபாலனும் ஐ.தே.காவின் A.R.A.M. அபூபக்கரும் இருந்த போதிலும் இவர்கள் இப்பிரச்சனை தொடர்பில் பாராளுமன்றில் வாதிடவில்லை என மூத்த அரசியல்வாதி ஒருவர் தெரிவித்திருந்தார்.

1949 வரை தனித்தமிழ்ப்பிரதேசமாக காணப்பட்ட கந்தளாய்ப்பிரதேசம் குளத்தினை அடிப்படையாகக் கொண்டு குடியேற்றப்பட்டதாகும். இப்பிரதேசத்தின் நிலப்பரப்பில் 24 750 ஏக்கர் காணி பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான சான்றுகள் காணப்படுகின்றன. எனினும் இவற்றில் பெரும்பான்மையானவை சிங்கள மக்களுக்கும், 20% மட்டுமே தமிழர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

1950 ஆண்டுப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட கந்தளாய்திட்டமும் அல்லைத்திட்டம் போலவே மக்கள் சில ஆண்டுகளின் பின்னர் குடியேறத் தொடங்கியிருந்தனர். அல்லைத்திட்டத்திலும் கந்தளாய் திட்டத்திலும் நெருக்கமான காலப்பகுதியில் மக்கள் குடியேறியிருந்தமைக்கு பல்வேறான காரணங்கள் இருந்திருக்கலாம். தமிழ் பிரதேசமாக இருந்தமையினால் அப்பகுதி மக்களின் எதிர்ப்பு ஏற்படலாம் என்ற பயமும் குடியேற்றத்திட்டங்கள் அமைந்திருந்த பகுதியானது காட்டுப்பகுதியாக இருந்தமையினால் சூழல் சார்ந்த பிரச்சினைகளும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கலாம்.




அக்காலப்பகுதியிலேயே சிங்கவர்கள் உடன் குடியேற தயங்கிய நிலையில் தமிழர் போராட்டத்தின் பின்னரான குடியேற்றத்திட்டத்தில் உள்வாங்கப்படப் போகும் சிங்கள மக்கள் எவ்வாறான நிலையினை எதிர் கொள்ளவுள்ளனர் என்பதை பொறுத்திருந்து பார்த்தாலும். தற்போது சிங்களவர்களை குடியேற்ற நினைப்பது காட்டுப்பகுதியோ அல்லது மக்களின் வாழ்விடத்திற்கு அப்பாற்பட்ட பகுதியாகவோ இருக்க வாய்ப்பில்லை ஏனெனில் திருமுறிகண்டிப்பகுதியில் கூட 2000 ஏக்கர் நிலப்பரப்பினை அரசு சுவீகரித்துள்ளமையானது. மக்கள் வாழ்விடமாக காணப்படும் பகுதியாகும். இவ்விடயத்தில் இன்னுமொரு விடயத்தைப் பார்க்கவேண்டும் அதாவது முன்னர் மாகாண ரீதியில் பிரிவினை ஏற்படுத்திய குடியேற்றங்கள் தற்போது மாவட்ட ரீதியில் ஊடறுத்து குடியேற்றங்கள் இடம்பெறவுள்ளன. திருமுறிகண்டித் திட்டமும் இதனையே சுட்டிக்காட்டுகின்றது.

அதற்குமப்பால் தற்போதைய திட்டங்கள் விவசாயத்திட்டமாக அமையாமல் இராணுவ வீரர்களுக்கான வீட்டுத்திட்டமாக அமையவுள்ளமை தமிழர்களின் ஒவ்வொரு வீட்டையும் வேவு பார்ப்பதற்கான செயற்பாடாக அமையும்.

பதவியாத்திட்டமானதும் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டமானது பார்வதி கிராமம் என்ற அழகிய செழிப்பு மிகு கிராமமாகும். அக்கிராமத்திற்கே பதவியா எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு குடியேற்றம் இடம்பெற்றது. இங்கும் மக்கள் 1956 ஆம் ஆண்டு படிப்படியாக குடியேறத் தொடங்கியதாக நூல்கள் கூறுகின்றன. திருகோணமலையையும் முல்லைத்தீவையும் துண்டாடும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட திட்டம் இதுவாகும். 1958 ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரத்தைத் தொடர்ந்து முல்லைத்தீவின் தென்னமரவடித் தமிழர்களும் விரட்டியடிக்கப்பட்டு இப்பிரதேசம் முழுமையாக சிங்களப் பிரதேசமாகியிருக்கின்றது.

இவ்வாறான ஒரு நடைமுறையையே தற்போதும் கொண்டு வர நினைக்கும் சிங்கள பேரினவாத அரசு தமிழர்களுக்கான அரசியல் தீர்வு வழங்குவது தொடர்பிலான முனைப்பில் ஈடுபடுவதாகவோ அல்லது அதற்கான நகர்வை மேற்கொள்வதாகவோ தெரியவில்லை.

சிங்களத்தின் குறியாக காணப்படுவது இலங்கைத் தமிழர்களுக்கு எவ்வடிப்படையிலும் உரிமம் இல்லாதது என்பதை சர்வதேசத்திற்கு நிரூபிப்பதே. அதற்காகவே முனைப்புடன் செயற்படுகின்றது.

அதற்கு இசைந்தால் போலவே தமிழர் தரப்பில் அரசியல்வாதியாக காட்டிக்கொள்ளும் சிலரும் நடந்து கொள்வது தான் வேதனையான விடயம். தூரநோக்குடன் சிந்திக்கப்பட வேண்டிய சிங்களக் குடியேற்றங்களின் தாக்கத்தை இன்றைய சிறு பிள்ளைத்தனமான விளையாட்டுக்களால் எதிர்காலத்தினருக்கான இருப்பை கேள்விக் குறியாக்கிவிடும் நிலைக்கு தள்ளிவிடும். இதனை தமிழர் தரப்பு ஆழ்ந்து சிந்திக்கவேண்டும்.

"நக்கப்போற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கம் என்ன" என்று இருப்பதும் "இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டாலென்ன" என அசட்டை செய்வதுவும், நாம் எவ்வாறு அன்று எமது தமிழ்த்தலைவர்கள் பிழை விட்டனர் என தூசிக்கிறோமோ அதைப் போலவே இன்றைய தலைவர்களையும் எதிர்காலத்தினர் தூசிப்பர் என்பதை நினைவில் வைத்திருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அதிகரிக்கும் அவநம்பிக்கை



இலங்கையில் அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் வழமையற்ற ஒரு சில சம்பவங்களின் விளைவாக அங்கு வாழும் சிறுபான்மைச் சமூகங்களின் மத்தியில் தமக்குத் தீங்கு ஏதாவது நேரிடக் கூடும் என்ற அச்சத்துடனான அவநம்பிக்கை அதிகரித்து வருவதாகப் புலம்பெயர் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 'உலகத் தமிழர் பேரவை' எனும் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப் பேரவையானது கடந்த சில வருடங்களாக இலங்கையிலுள்ள தமிழர்களின் விவகாரம் குறித்து பல வெளிநாட்டு அரசாங்கங்களின் முக்கியஸ்தர்களுடனும், அரசியல் பிரமுகர்களுடனும் பல சந்திப்புக்களை மேற் கொண்டு வந்துள்ளது.

2009இல் ஆயுதப் போர் முடிவுற்றதன் பின்னர் தமிழர்கள் அதிகளவில் புலம்பெயர்ந்து வாழும் பல வெளி நாடுகளில் உள்ள தமிழ் அமைப்புகளுடன் நேரடியாகவே சுதந்திரமான ஜனநாயக ரீதியான இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து ஓர் பொதுசன வாக்கெடுப்பினை நடத்தியது.

நீண்ட காலமாகவே இலங்கையில் நிலவும் தமிழர்களின் இன்னல்களுக்கும், மனக் குறைகளுக்கும் இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளக் கூடியதும் ஆக்கபூர்வமானதுமான ஓர் அரசியல் தீர்வினைக் கண்டு கொள்ளாது விடின் தனியரசுக்கான 1976ஆம் ஆண்டிலான வட்டுக் கோட்டைத் தீர்மானம் போன்ற கோரிக்கை நாளாந்தம் மக்களிடையே வலுவடைவது தவிர்க்க முடியாததொன்றாகும் என உலகத் தமிழர் பேரவையின் பேச்சாளரான சுரேன் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் வாழும் தமிழர்கள் பேச்சுச் சுதந்திரமுள்ளவர்களாகவும் தமது பிள்ளைகளைப் பாதுகாப்புடன் பயமின்றி வளர்ப்பதற்கும் உரிய இயல்பான சூழ்நிலையில் இருப்பதாக அவர்கள் உணரக்கூடிய சூழலை ஏற்படுத்துதல் வேண்டும். அவர்களுடைய அடிப்படை ஜனநாயக உரிமைகள் அவர்களுக்கு எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி வழங்கப்படல் வேண்டும். வடக்கு மற்றும் கிழக்கில் நிலவும் அரச படைகளின் அதீத பிரசன்னத்திற்கு ஓர் முடிவு காணப்படல் வேண்டும். பயங்கரவாதத் தடைச்சட்டம் ரத்துச் செய்யப்படல் வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அடுத்தடுத்து ஒன்றின் பின் ஒன்றாக ஆட்சிக்கு வந்த பேரினவாத இலங்கை அரசாங்கங்களினால் இலங்கையிலுள்ள தமிழர்கள் 64 ஆண்டுகளாகப் பல விடயங்களிலும் பாரபட்சம் காட்டப்பட்டு பெரும்பான்மையினத்தவருக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தையும், உரிமைகளையும் அவர்களுக்கு வழங்காது நேர்மையற்ற அத்துடன் இரக்கமற்ற முறையில் நடத்தி அடக்கி ஒடுக்கியமையால் அளவற்ற சொல்லொணாத் துன்பங்களை அவர்கள் அனுபவித்துள்ளனர். அரசியல் தீர்வு ஒன்றினை அடைவதற்கு நல்ல சிறந்த தலைமைத்துவமும், அரசியல் ரீதியான மனஉறுதி மற்றும் துணிவு என்பவற்றை அடிப்படை யாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

யுத்தம் முடிவுற்று மூன்றாண்டுகளுக்கும் மேலாக கழிந்துவிட்ட நிலையிலும், ஓர், அரசியல் தீர்வினைக் காண்பதற்கு ராஜபக்ஷ ஆட்சியினரால் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுத்ததாகத் தென்படவில்லை.

சுதந்திரமடைந்த காலந்தொட்டு ஜனாதிபதி ராஜபக்ஷ போன்ற அடுத்தடுத்து வந்த சிங்களத் தலைவர்களினாலோ அன்றி அரசுகளினாலோ தமிழர்களின் 64 வருட கால கேள்விகளுக்குத் தேசிய ரீதியில் செயல் விளக்கம் அளிக்கப்படவில்லை. தவறான வழியில் எண்ணம் கொள்ள வைப்பதிலும், திரித்துக் கூறிச் சமாளிப்பதிலுமே காலத்தைச் செலவிட்டுள்ளன. தமிழர்களின் நியாயபூர்வமான மனக்குறைகளுக்கு ஓர் செயல்முறை வடிவிலானதும், நிறைவேற்றக் கூடியதும், ஏற்றுக் கொள்ளக்கூடியதுமான தீர்வு ஒன்றினைக் காண்பதென்பது, நாட்டில் அனைவரும் சீரும் சிறப்புடனும் செழித்தோங்கி சமாதானமாகவும், தோழமையான நட்புறவுடனும் வாழ்வதற்கான ஓர் கௌரவமான சந்தர்ப்பத்திற்கான நன்மையை அளிக்கும் என்பதைத் தெளிவுபடுத்திக் கூறக் கூடிய துணிச்சலையும், விவேகத்தையும் கடந்த காலத் தலைவர்கள் ஒரு போதுமே கொண்டிருக்கவில்லை.

அதற்கு மாறாக சுதந்திரம் பெற்ற காலந் தொட்டு ஒவ்வொரு தலைவரும் மற்றும் அரசாங்கமும் நிலைமைகளையும், சூழ்நிலைகளையும் தத்தமது சொந்த நலன்களுக்காகத் தவறான வழியில் பயன்படுத்தினர்.

பொறுப்புடன் இன்னும் காலம் தாழ்த்தாது செயற்படுவதற்கு இதுவே தக்க தருணமாகும். யுதத்தின் போதும், யுத்தம் முடிவடைந்த பின்னரும் அவசரகால விதிமுறைகளின் கீழ் கைது செய்யப்பட்டு இதுவரையிலும் பொருத்தமான சட்ட நடவடிக்கை எதுவும் அவர்கள் மீது எடுக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பலரின் பெயர் விபரங்களை வெளியிட வேண்டுமெனவும் அத்துடன் அவர்களுக்குச் சட்ட ஆலோசனைகளைப் பெறும் வசதிகளையும், அவர்களின் உறவினர்கள், குடும்பத்தவர்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புகள் ஆகியோர் அவர்களைப் பார்வையிடும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்குமாறும் இப் பேரவை அரசிடம் கோரியிருந்தது. அது பலனளித்ததாகத் தோன்றவில்லை.

மேலும் அவர்கள் யாவரும் நாட்டின் சட்டங்களுக்கமைவாக சட்ட நடவடிக்கைகளுக்குள்ளாக்கப்படல் வேண்டும். இல்லையெனில் விடுவிக்கப்படல் வேண்டும். அதுமட்டுமன்றி வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வலிந்து நடைபெறும் நில அபகரிப்புக்களையும், சிங்களக் குடியேற்றங்களையும் அரசாங்கம் கட்டாயம் நிறுத்தியாக வேண்டும்.

அத்துடன் துணையாதரவுக் குழுக்களிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட்டு நாட்டில் சட்டமும், ஒழுங்கும் ஒரு நிலைக்குக் கொண்டு வரப்படுதல் வேண்டும். தமிழ் மக்களின் காணிகளும், வதிவிடங்களும் அவர்களுக்கு மீளவும் கிடைக்க வேண்டும். பாதிப்படைந்த பகுதிகளில் அரசியல் தலையீடு மற்றும் சீர்கேடுகள் அற்ற விதத்தில் புனரமைப்புத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

அபிவிருத்திப் பணியில் நாட்டின் பிராந்தியங்களுக்கிடையில் ஏற்றத் தாழ்வுகள் பார்ப்பது கூடிய அளவில் குறைக்கப்படல் வேண்டும். சகல மக்களினதும் அடிப்படை முன்னுரிமைத் தேவைகளான கல்வி, சுகாதாரம், தொழில்வசதி என்பன ஊழலற்ற வகையில் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும். பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட தவறுகளுக்கு நீதி வழங்கப்படல் வேண்டும்.

ஆயுதச் சமரில் ஈடுபட்ட இரு தரப்பினருக்கும் எதிராக அவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றங்களுக்காக ஓர் சுதந்திரமான சர்வதேச அமைப்பொன்றினால் துல்லியமான விசாரணை நடத்தப்படல் வேண்டும்.

வெளிநாட்டு அழுத்தங்கள் தலைமேல் குவியும் தருணங்களில் மாத்திரம் அரசாங்கம் காலத்துக்குக் காலம் சாக்குப் போக்காக அறிமுகம் செய்து வைக்கும் நடைமுறைகளைப் போலல்லாது தமிழ் மக்களும் நாட்டின் ஏனைய மக்களும் நலிவுறாது நீடித்து நிலைக்கக் கூடிய அரசியல் தீர்வொன்றினைப் பெறும் விதத்தில் சர்வதேச அனுசரனையுடன் ஓர் நம்பத் தகுந்த நியாயபூர்வமான அரசியல் நடைமுறை துவக்கி வைக்கப்படல் வேண்டும்.

அரசியலிலும், இராணுவத்திலும் ஒரு சிலர் விட்ட தவறுகள் மற்றும் பிழையான செயல்களினூடாகச் சிங்கள மக்களைத் தமிழ் மக்கள் ஒதுக்கி வைக்கவுமில்லை. வெறுக்கவுமில்லை என்பதை உணர்த்துதல் வேண்டும். எனவும் சுரேன் சுரேந்திரன் அறிக்கையில் தெளிவாகக் கூறியுள்ளார்.


அத்துடன் உலகத் தமிழர் பேரவை அரசாங்கத்திற்கெதிரான குற்றச்சாட்டுகளின் மீதே ஒரே பக்கமாக முழுக்கவனத்தையும் செலுத்துகின்றது என்ற குற்றச்சாட்டினையும் சுரேந்திரன் நிராகரித்துள்ளார்.

அதே வேளையில் எந்த ஒரு ஊடகத்துக் காயினும் அல்லது சர்வதேச அமைப்புகளுக்காயினும் சரி உலகத் தமிழர் பேரவை விடுக்கும் எந்த ஒரு தனி அறிக்கையிலும் இருதரப்பினரும் மேற்கொண்ட யுத்த மீறல்கள் மற்றும் மனித உரிமை மீறல் குற்றங்கள் தொடர்பில் ஓர் சர்வதேச சுயாதீன விசாரணை பேணப்படல் வேண்டுமென்றேஅழைப்பு விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட அவர் யுத்தக் குற்றங்களை எவர் புரிந்திருப்பினும் அவர்களே சர்வதேச சமூகத்திற்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்களாக உள்ளனர் எனவும் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலங்க வைக்கும் நவநீதம்பிள்ளை



அடுத்த வார இறுதியில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், வெலிவேரியாவிலும், கிரான்ஸ்ட்பாசிலும் நடந்தேறிய சம்பவங்கள் அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுப்பதாக அமைந்துள்ளன.

வெலிவேரியாவில், சுத்தமான குடிநீருக்காகப் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது, பிரிகேடியர் தேசப்பிரிய குணவர்த்தனவின் தலைமையில் சென்ற 58வது டிவிசன் படையினர் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

குறைந்தது மூன்று பேர் கொல்லப்படவும், 50 பேர் வரை காயமடையவும் காரணமாக இருந்த, இந்தத் தாக்குதல் தென்பகுதியில் இலங்கை இராணுவத்திற்கு இருந்த நற்பெயரையும் நம்பிக்கையையும் சிதைத்து விட்டது.

அதுமட்டுமன்றி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கோட்டையாக உள்ள கம்பகாவில், ஆளும்கட்சியினது பெயரையும் இது கெடுத்து விட்டது.

அதேவேளை, இந்தத் தாக்குதல் சர்வதேச அரங்கில் இலங்கை அரசாங்கத்துக்கு மோசமான பெயரையும் தேடிக் கொடுத்துள்ளது.

இந்தச் சம்பவத்தின் அதிர்வுகள் ஆற முன்னர், கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

வெலிவேரியா தாக்குதல் சம்பவம், கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்கப்பட்ட சம்பவங்களுக்கு, சர்வதேச அளவில் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

சர்வதேச ஊடகங்களிலும் இந்தச் செய்திகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன.

அமெரிக்காவும், பிரித்தானியாவும், ஐரோப்பிய ஒன்றியமும் வெளிப்படையாகவே கண்டன அறிக்கைகளை வெளியிட்டன.

இந்த இரண்டு சம்பவங்களும், இலங்கையில், அமைதியாக எதிர்ப்புத் தெரிவிக்கும் உரிமை மறுக்கப்படுகிறது என்ற உண்மையையும், பௌத்தம் அல்லாத பிற மதங்களைப் பின்பற்றுவோரின் உரிமைகள் மீறப்படுகின்றன என்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

போருக்குப் பிந்திய இலங்கையில், பொதுமக்களின் எல்லா உரிமைகளும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றே, அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா உள்ளிட்ட எல்லா நாடுகளுமே எதிர்பார்க்கின்றன.

இலங்கை அரசு நெருக்கம் கொண்டாடும் சீனா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளின் கருத்துகள் இதில் வேறுபட்டிருக்கலாம்.

ஆனால் பெரும்பாலான நாடுகள், குறிப்பாக ஒட்டு மொத்த மேற்குலகமும் இதையே தான் எதிர்பார்க்கிறது.

ஆனால், போருக்குப் பிந்திய இலங்கையின் நிலை அந்த எதிர்பார்ப்பை ஈடேற்றும் வகையில் இருக்கவில்லை.

இன்றும் கூட, தமிழர்களுக்கு என்று மட்டுமல்லாது, ஒட்டு மொத்த இலங்கையிலுமே, மனித உரிமைகள் என்பது, மதிப்புக் குறைந்த ஒன்றாகவே இருக்கிறது என்பதற்கு, வெலிவேரியா, கிராண்ட்பாஸ் சம்பவங்கள் எடுத்துக் காட்டாக உள்ளன.

இத்தகைய பின்னணியில், ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் இலங்கைப் பயணத்தை அரசாங்கத்தினால் அவ்வளவு இலகுவாக எடுத்துக் கொண்டு விட முடியாது.

ஏனென்றால், நவநீதம்பிள்ளை இலங்கைக்கு மேற்கொள்ளும் பயணம் ஒன்றும் சுற்றுலாப் பயணம் அல்ல.

அவர் திருகோணமலை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவுக்கு வரப் போவது, இடங்களைப் பார்ப்பதற்காக அல்ல.

அவர் இலங்கையின் மனித உரிமைகள் நிலையை ஆராயும் - கடந்த கால மீறல்கள் பற்றி அறிந்து கொள்ளும் பயணத்தையே மேற்கொள்ளப் போகிறார்.

அதுமட்டுமல்லாமல், அவரது இந்தப் பயணம் தொடர்பாக, இலங்கையில் உள்ள நிலைமைகள் தொடர்பாக, ஐ.நா மனிதஉரிமைகள் பேரவையில் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்கப் போகிறார்.

எனவே அரசாங்கத்தினால், அவரது பயணம் குறித்து .எந்த கலக்கமும் இன்றி இருக்க முடியாது.

இந்த விடயத்தில், முன்னெச்சரிக்கையுடன் அரசாங்கம், எடுத்து வருகின்ற சில நடவடிக்கைகளை வைத்தே, அதன் கலக்கத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

திருகோணமலையில், 5 மாணவர்களின் படுகொலைகள் தொடர்பாக, 12 விசேட அதிரடிப்படையினர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர், காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்க, ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதான அறிவிப்பு ஆகியவை, நவநீதம்பிள்ளையின் வருகையை ஒட்டிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தான்.

வெலிவேரிய பிரச்சினையைத் தணிக்கவும், கிராண்ட்பாஸ் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்கவும், அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளும், நவநீதம்பிள்ளையின் வருகை, கொமன்வெல்த் உச்சி மாநாடு போன்றவற்றை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தான்.

இறுதிப்போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை மட்டும் தான், குறிவைத்து, நவநீதம்பிள்ளையின் பயணம் இடம்பெறப் போகிறது என்ற நிலை இப்போது மாறி விட்டது.

ஏனென்றால், வடக்கு கிழக்கு மட்டுமன்றி, ஒட்டுமொத்த இலங்கையிலும், போர்க்காலத்தில் மட்டுமன்றி, போரின் பின்னரும் கூட மனித உரிமைகள் நிலை மோசமாகவே உள்ளது என்பது வெளிப்படையாகி விட்டது.

இதனால், நவநீதம்பிள்ளை இறுதிப் போர்க்கால மீறல்கள் குறித்து மட்டுமன்றி, அண்மைக்கால மீறல்கள் குறித்தும் கவனம் செலுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது, இலங்கை அரசாங்கத்தை சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், கண்டிக்கும் அமெரிக்கா போன்ற மேற்குலகிற்கு இன்னும் வாய்ப்பாக மாறியுள்ளது.

இலங்கை மீதான அழுத்தங்களை மேற்குலகம் அதிகரிப்பதற்கு ஏற்றவாறே இலங்கை நடந்து கொள்கிறது அல்லது இலங்கையில் நடக்கின்ற சம்பவங்கள் அவ்வாறே அமைந்து விடுகின்றன.

நவநீதம்பிள்ளையின் பயணத்தின் போது, இலங்கை பன்முக நெருக்கடியை எதிர்கொள்ளப் போகிறது.

குறிப்பாக, இலங்கை இராணுவத்தின் இரண்டு அறிக்கைகளை அவர் முக்கியமாக எதிர்பார்ப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன.

முதலாவது, போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்க, 2012ம் ஆண்டு தொடக்கத்தில் அமைக்கப்பட்ட இராணுவ விசாரணைக் குழுவின் அறிக்கை.

மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா தலைமையிலான இந்த விசாரணைக் குழு, இந்த ஆண்டின் தொடக்கத்தில் சமர்ப்பித்த முதற்கட்ட அறிக்கையில், போரின் போது இராணுவத்தினர் பொதுமக்களை இலக்கு வைத்து தாக்கியதான குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று நிராகரிக்கப்பட்டிருந்தது.

அந்த அறிக்கையை முழுமையாக - பகிரங்கமாக வெளியிட வேண்டும் என்று அமெரிக்காவும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் வேண்டுகோள் விடுத்திருந்தன.

ஆனால், இராணுவ நீதிமன்ற அறிக்கையை பகிரங்கப்படுத்துவதற்கு இராணுவச் சட்டத்தில் இடமில்லை என்று அரசாங்கம் அதை நிராகரித்து விட்டது.

இந்த இராணுவ நீதிமன்றத்தின் இரண்டாம் கட்ட விசாரணை அறிக்கை இன்னமும் சமர்ப்பிக்கப்படவில்லை.

அதற்கு என்னவாயிற்று என்றும் தெரியவில்லை.

போர்க்கால மீறல்கள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து உள்ளக விசாரணை நடத்துவதாக உறுதியளித்த அரசாங்கத்திடம், அதுபற்றி அமைக்கப்பட்ட ஒரே விசாரணைக் குழுவான, இராணுவ நீதிமன்ற அறிக்கையை, நவநீதம்பிள்ளை கோரக் கூடும்.

அடுத்து, அண்மையில் வெலிவேரியாவில் இடம்பெற்ற தாக்குதல் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட இராணுவ விசாரணைக்குழுவும் 15 நாட்களில், அறிக்கையை சமர்ப்பிக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிக்கை இந்த வாரம் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், அதனையும் அதன் மீதான நடவடிக்கையையும், நவநீதம்பிள்ளை கோரலாம்.

மனிதஉரிமை மீறல்கள் குறித்த மற்றெல்லா கேள்விகளுக்கும் அப்பால், இராணுவ விசாரணைகள் மற்றும் அதன் மீதான நடவடிக்கைகள் குறித்து, கேள்வி எழுப்பப்பட்டால், அரசாங்கம் நிச்சயம் நெளிய வேண்டிய நிலை ஏற்படும்.

ஏனென்றால், இவை ஒன்றும் நவநீதம்பிள்ளையினதோ, ஐ.நா.வினதோ அல்லது சர்வதேச சமூகத்தினதோ எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் அளவுக்கு வெளிப்படைத் தன்மையையோ, நம்பகத்தன்மையையோ கொண்டிருக்கவில்லை.

இதனால், நவநீதம்பிள்ளையை அரசாங்கம் வெவ்வேறு விடயங்களின் மூலம் திருப்திப்படுத்த முனைந்தாலும், இராணுவம் தொடர்புபட்ட விவகாரங்களில், அவரை திருப்திப்படுத்துவது சாத்தியமற்றதொன்றாகவே இருக்கும்.

அவ்வாறு அவர் திருப்தி கொள்வதானால், இந்தளவுக்கும் அரசாங்கம் சட்டரீதியான பல நடவடிக்கைகளை முன்னெடுத்திருக்க வேண்டும்.

அவை எதுவும் நிகழாத சூழலில், நவநீதம்பிள்ளை இங்கு வந்து திரும்பிச் சென்று, அறிக்கை சமர்ப்பிக்கும் வரை, வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டே அரசாங்கம் இருக்க வேண்டியிருக்கும்.

-நவரத்தினம் கண்ணன்-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜீவன் ஓயும் முன்னே...



## சிறுகதை

அன்று சனிக்கிழமை. மெல்லிய காற்று காலைக் கதிரவனோடு கதை பேசி இதமாக வருடிச் செல்லும் இன்பமயமான காலைப் பொழுது. கடிகாரம் நேரம் ஆறுமணியைக் காட்டியது.

"றிங்... ஙங்ங்...றிங்..."

அலாரம் ஒலியை நிறுத்திய படி நித்திரை விட்டெழும்பினான் உமாசங்கர்.

"அம்மா அம்மா"

"இண்டைக்கு ஏழு மணிக்கு ரியூசனுக்குப் போகோணும். வீட்ட வர ஒம்பது மணியாகும். கெதியண்டு சமயுங்கோ"

என்றபடி பாயைச் சுருட்டி வைத்து விட்டு தயாராவதற்குச் சென்றான்.

சமையலறையில் உமாசங்கரின் அம்மா தேவி சமைத்துக் கொண்டிருந்தாள்.

"டக் டக் டக் டக்...."

பிட்டுக் குத்தும் ஓசையோடு தேவியின் மூளை நரம்புகள் வாழ்வின் கடந்து போன நாட்களைத் தேடிப் பயணமாகின.

ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்று மூன்றாம் ஆண்டில் சிவநாதனைக் கரம்பிடித்தாள் தேவி. அவர்களது இல்லற வாழ்வின் தவப்பயனாக பிறந்தவன் தான் உமாசங்கர். கடவுளுக்கு நெஞ்சில் ஈரமில்லையோ... தெரியவில்லை. ஆசை ஆசையாக தன் குழந்தையைப் பார்க்க வந்த சிவநாதனை காலன் பேரூந்தாக வந்து தன்னோடு அழைத்துச் சென்றுவிட்டான். பிஞ்சுக் குழந்தை பிறந்தவுடன் அழுதது இதற்குத்தானோ என நினைத்தாலும் அதில் தப்பில்லை.

தன் உதிரத்தை உடலாக்கி உயிரைக் கருவாக்கி ஈரைந்து மாதம் சுமந்து பெற்றெடுத்த உமாசங்கருக்காகத் தான் தேவி இற்றை வரை உயிரோடு இருக்கிறாள்... உமாசங்கரை ஒரு வைத்தியனாக்கிப் பார்க்க வேண்டும் என்பது தான் தேவியின் பேரவா. உமாசங்கரும் அதனையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்கிறான். மிகவும் சிரமப்பட்டு உறவினர்களின் பண உதவியுடன் படித்து இப்போது க.பொ.த. உயர்தர உயிரியல் பிரிவில் கற்கிறான். இந்த ஆண்டு உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளான். எதிர்காலக் கனவுகளோடு,

"அம்மா அம்மா அம்மா.."

உமாசங்கர் சமையலறைக்குள் சென்று

"அம்மா இஞ்ச பாருங்கோ"

என தேவியை உலுப்பினான். சட்டென்று சுயநினைவு வந்தவளாய்,

"என்ன என்னப்பன்"

"அம்மா என்னம்மா யோசிக்கிறியள் ஏன் ஒரு பதட்டமா இருக்கிறியள் காச்சலே??"

உமாசங்கரின் குரலில் பரிவு தொனித்தது.

"ம்ம்ம் எனக்கொண்டுமில்லயடா நீ நல்லாப் படிச்சு டொக்டரா வரோணும், அதான் என்ர ஆச செய்வியே?"

"என்னம்மா. என்ர ஆசயும் அதானேம்மா. நீங்கள் ஒண்டுக்கும் பயப்பிடாதேங்கோ. நான் கட்டாயம் டொக்டரா வருவன்"

"சரி என்ர செல்லம்.... இந்தா சாப்பிடு"

படபடவென்று உணவருந்தி விட்டு அருகிலிருந்த கல்வி நிறுவனத்திற்குப் புறப்பட்டான்.

"டேய் பவித்திரன். குட் மோனிங்"

"ஆ... குட்மோனிங்டா சங்கர்"

"கெதியண்டு வா வகுப்பில முன் வாங்கப் பிடிப்பம். ஓல்றெடி கெமிஸ்ட்ரி யெண்டா சுத்த சூனியம். இதில் பின்னுக்கு இருந்தா நல்லா"

"உனக்கு விளங்கும் தானேடா. எனக்குத்தானே இருந்தாலும் வா பாஸ்ரா போவம்"

என்றபடி வகுப்புக்குச் சென்று முன் நிரையில் இடம் பிடித்தனர். நேரம் சரியாக ஏழுமணி. ஆசிரியர் வகுப்புக்குள் நுழைந்தார்.

"குட்மோனிங் சேர்"

"குட்மோனிங் சிற் டவுண் சரி நாங்க பாப்பம் எல்லாரும் கணக்குச் செய்தாச் சோ?"

"தெரியும். செய்திருக்கமாட்டீங்கள் நானே விளங்"

"சேர் நான் செய்தனான்"

என்றவாறு எழும்பி நின்றான் உமாசங்கர். அவனது பயிற்சிக் கொப்பியை வாங்கிப் பார்த்தார் ஆசிரியர்.

"ம்! வெறிகுட். சரியடா. நீ சுவர் டொக்டர் தான்டா. சிற்டவுண்"

என்றபடி கொப்பியைக் கொடுத்து விட்டு ஏனைய மாணவர்களுக்கு விளங்கப் படுத்திவிட்டுத் தொடர்ந்தார். இரண்டு மணித்தியாலங்கள் நிறைவடைந்தது: வகுப்பும் நிறைவடைந்தது.

உமாசங்கர் வீட்டை நோக்கி நடந்தான்.

"அம்மா"

உமாசங்கருக்காக வாசலில் காத்திருந்த தேவி "வாடா செல்லம். என்ன மாதிரி. படிப்பிச்சது விளங்கினதோ?"

என உமாசங்கரை அணைத்து தலையை வருடியபடி வினாவினாள்.

"ஓம் விளங்கீட்டுது.

இண்டைக்கு சேர் நான் சுவரா டொக்டர் தானாம் எண்டு சொன்வர் எப்பிடி"

"அப்பிடியே! சந்தோசமா இருக்கு. எனக்கு நல்ல நம்பிக்க இருக்கு நீ கட்டாயம் டொக்டரா வருவாய் நல்லா உழச்சு நாங்க பட்ட கடனெல்லாம் அடச்சிடு வாயடா அதுக்குப் பிறகு நாங்க"

"சந்தோசமா இருப்பம் ஒரு கஷ்ட மும் வராது"

இருவரது விழிகளிலும் ஒரு கணம் நீர்த் துளி துளிர்த்து மறைந்தது.

சிறிது நேரம் மௌனம் பேசியது.

"ம்ம்ம். சரி நான் வயலுக்குப் போட்டு வாறன். நீ கதவப் பூட்டிட்ட இரன் என்ன..."

"ஏனம்மா உங்களுக்கு கால்நோ எண்டெல்லோ சொன்னீங்கள். என்ன வேலையெண்டு சொல்லுங்கோ நான் போட்டு வாறன்.

"நீ இப்பதான் வந்தனி. உனக்கு கஷ்டம்"

தாயின் பேச்சை இடை நிறுத்தி விட்டு,

"வேண்டாம். நான் போட்டு வாறன். இந்தாங்கோ கொப்பியப் பிடியுங்கோ பையத் தாங்கோ என்ன வேல"

"இதுக்க சாப்பாடு இருக்கு. எங்கட வயல்ல மாமா நிற்பார். குடுத்துட்டு வரோணும். பாத்துக் கவனம்...."

"சரி.... போட்டு வாறன்"

என்றபடி வயலுக்குள் சென்றான். சிறிது நேர நடைப் பயணத்தின் பின் வயலை அடைந்தான்.

"மாமா இந்தாங்கோ சாப்பாடு "

"யாரடா அது அட என்ன இந்தப் பக்கம்."

"அம்மாவுக்கு வருத்தம். அதான் நான் வந்தனான். ஏதாச்சும் கெல்ப் பண்ணுறதே?"

"சாச்சா வேண்டாம். அக்கா உன்னத் தேடுவா. நீ போட்டு வா. போகேக்க பாத்துப் போ. குளம் நிரம்பியிருக்கு வரம் பும் கொஞ்சம் குழறுபடியா இருக்கு அவதானமாப் போ சரியே??"

"சரி.சரி.வாறன்"

என்றவாறு வரம்பிலேறி நடக்கலானான். பச்சைப் பசேலென்ற வயல் வெளிகள் பச்சைக் கம்பளம் விரித்தது போல் இருந்த அழகை இரசித்துக் கொண்டு, இதமான குளிர் காற்று உடலை வருட, இயற்கையின் அழகை வியந்தபடி, இசையுணர்வை மனம் தட்டியெழுப்ப உமாசங்கரின் உதடுகள்..



"நிற்பதுவே, நடப்பதுவே,பறப்பதுவே இவையெல்லாம் சொப்பனம் தானோ? வெறும் தோற்ற மயக்ககங்களோ?"

என்ற பாரதியின் பாடல்வரிகளை முணுமுணுக்கத் தொடங்கியது.

"ஸ்ஸ்ஸ் ஸ்ஸ்ஸ்"

"ஆ அம்மா"

நாகபாம்பின் சீறலில் திடுக்கிற்றுப் பயந்த உமாசங்கர் தடுமாற வரம்பில் கால் சறுக்கி..

"நல்லவேள. சொட்டெண்டா குளத்துக்க விழுந்திருப்பன்."

அவனது நெஞ்சு படபடத்தது. அப்போது அவனுக்கு அவனது உயிரைப் பற்றிக் கவலையில்லை. எல்லாம் தனது தாயைப் பற்றியதும், தன் இலட்சியத் தாகத்தைப் பற்றியதும்தான். சிறிது தூரம் நடந்து செல்லச் சட்டென்று,

"மியாவ்."

என்றபடி கறுப்புப் பூனை குறுக்காகப் பாய்ந்தது. ஆனால் கால் சறுக்கவில்லை. உமாசங்கரின் மனம் சறுக்கியது. ஒரு நாள் "கறுப்புப் பூனை குறுக்கால போனாக் கூடாது. ஆக்கள் சாவினம் எண்டு சொல்லுறவ. உன்ர அப்பா இறக்க கொஞ்ச நேரத்துக்கு முதல்ல கறுப்புக் கலர்ப்பூனை குறுக்கால பாஞ்சது எண்டு தேவி கூறியது உமாசங்கருக்கு ஞாபகம் வந்தது. அதே இடத்தில் அசைவற்று உறைந்து போய் நின்றான். அவனது மனதில் ஆயிரமாயிரம் எண்ண மின்னல்கள்.

"ஐயோ என்ன செய்யிறது. எனக்குப் பயமா இருக்கே பேசாம மாமாட்ட போவமோ எப்பிடியெண்டாலும் வரம்பக் கடக்கத்தானே வேணும் கத்தினாலும் ஒருத்தருக்கும் கேளாது."

வீட்டுக்குச் செல்ல மனம் மறுத்தது. ஆனால் அங்கு செல்லுமாறு தூண்டியது அவனது மூளையா? இதயமா? தெரியவில்லை. சரியாக இரண்டாவது அடி எடுத்து வைத்தான்.

"சறக் அம்மா தொப்"

அவலக் குரலோடு விழுந்த உமாசங்கரை அரக்கக்கரம் கொண்டு அணைத்தது குளத்திற்குள்ளே இருந்த ஒரு பாறை இடுக்கு. அவனது கால்களை இறுகப் பற்றியது.

அவனால் மேலெழும்ப முடியவில்லை. வாயிலிருந்து வரவிருந்த வார்த்தைகளை குளத்து நீர் சிறைப் பிடித்தது. அவனது மனதில் மலிந்து கிடந்த கனவுகளும் கஷ்டங்களும் மனதில் சுமந்த பிரசவித்த சிசுவானது அவனது ஜீவன் ஓயும் முன்னர்,

"அம்மா டொக்டரா வருவன் வரோணும். ஆனா... என்ர நம்பிக்க சொட்டுச் சொட்டா தண்ணியில கரயுது உங்கள இப்ப காப்பாத்து கடவுளே என்ர அம்மா என்ர கனவு"

அசுர வேகத்தில் காற்று வீச குளத்தில் அகோரமாக அலைகள் மேலேழும்பி தனக்கு நல்ல இரை கிடைத்த விட்டதென மகிழ்ந்ததா? இல்லையென்றால் என்னால் ஒரு உயிர் துடிக்கிறதே என வருந்தியதா? எனத் தெரியவில்லை. ஆனால் .... நீருக்கடியில் சங்கமமாயிருந்த உமாசங்கரின் மனம் தன் இலட்சியத்தை நோக்கிப் பறக்க எத்தனித்து, அங்கு அவனது வாயிலிருந்து இப்போது'

"பளுக் பளுக் பளுக்"

உமாசங்கரின் ஜீவன் எழுப்பிய ஓசை மட்டும் தான்.

அதே கணத்தில் எங்கிருந்தோ பறந்து வந்த தாய்க்குருவி ஒன்று தேவியின் காதோடு இரகசியம் பேசியது. அந்தக் குருவிமொழி அந்தத் தாய்க்கு மட்டும் தான் விளங்கியது. உயிருள்ள சடமாய் ஊமையாகி மண்ணில் சரிந்தாள். உமாசங்கரின் ஜீவனுக்கு என்ன நடந்ததென்று புரியவில்லை. இனி என்ன நடக்குமோ. தெரியவில்லை.

அவனது ஜீவன் ஓயும் முன்னே நீருக்கடியிலேயே அவனது தாகம் கல்லறை கட்டப்பட்டு விடுமா! இல்லையென்றால் தணியுமா?

ஸ்ரீ.வேதிகா
யா/அருணோதயாக் கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாநிதி - அகளங்கன்

பகுதி:-03

# பாரதியாரும் பாவையரும்



"ஊருக்கு நல்லது சொல்வேன்.- எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்"

(முரசு-1)

எனத் தொடங்கிப் பெண் கல்வி பற்றிப் பின்வருமாறு பாடுகின்றார்.

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.

(முரசு-9)

ஈசன் பெண்ணுக்குள்ளே ஞானத்தை வைத்துப் படைத்து விட்டான். ஆனால் மண்ணுக்குள்ளே சில மூடர் மாதர் அறிவைக்கெடுத்து விட்டார் என்று குமுறும் பாரதி

கண்கள் இரண்டிலும் ஒன்றைக் - குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ
பெண்கள் அறிவை வளர்த்தால் - வையம்
பேதைமை அற்றிடும் காணீர்.

(முரசு-10)

என்று சாந்தமாக ஆண்களுக்கு அறிவுரையும் வழங்குகிறார். இரண்டு கண்களிலே ஒன்றைக் குத்திக் காட்சியைக் கெடுத்து விடுவது போன்ற செய்கையே பெண்கல்வி மறுப்பு என்று விளக்கி, பெண்களின் அறிவையும் வளர்த்தால் இவ் வையகம் பேதைமை நீங்கி விடும் என்று வலியுறுத்துகின்றார்.
உலக வாழ்க்கையின் நுட்பங்களைத் தேர்ந்து கொள்வதற்காகவும், சொல்லப்படுகின்ற பல வகையான நூல் வகைகளைக் கற்றுக் கொள்வதற்காகவும் நாற்திசை நாடுகள் எல்லாவற்றிற்கும் சென்று புதுமைகளைக் கொண்டு வந்து பாரத தேசம் ஓங்குவதற்குப் பெண்கள் உழைத்திட வேண்டும்.
இவற்றினின்றும் விலகி வீட்டிலே ஓர் பொந்திலே வாழ்வது போன்ற வாழ்க்கையை வீரப் பெண்கள் விரைவிலே ஒழித்து விடுவார்கள் என்று நம்பிக்கையோடு பெண் கல்வி பற்றிப் பாடுகிறார் பாரதியார். இது அவரது புதுமைப் பெண் என்ற தொடரில் இடம் பெற்ற பாடல்.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார் நங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்.
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பாராம்.

(புதுமைப்பெண்-8)

பெண்கள் பல சாத்திரங்களையும் கற்று ஆண்கள் போற்றும்படி வாழ்வார்கள் என ஆரூடமும் கூறுகிறான் பாரதி.

சாத்திரங்கள் பலபல கற்பராம்
சவுரியங்கள் பலபல செய்வராம்
மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்
மூடக் கட்டுக்கள் யாவுந் தகர்ப்பராம்
காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க்கினி தாகச் சமைப்பாராம்
ஏத்தி ஆண்மக்கள் போற்றிட வாழ்வாராம்
இளைய நங்கையின் எண்ணங்கள் கேட்டிரோ.

(புதுமைப்பெண் -9)

பெண்களின் கல்வி பற்றிக் கூறும் பாரதி "மூத்த பொய்ம்மைகள்யாவும்அழிப்பாராம்' என்று கூறுவது இனிமையாக இருக்கிறது.
நல்ல கல்வி கற்று அடிமை நிலையை அறுத் தெறிந்த மகிழ்ச்சயிலே பெண்கள் விடுதலைக் கும்மி பாடுவதாகச் சித்திரிக்கும் பாரதியார், பல அழகான உவமைகளையும் கையாள்கிறார். மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தை அப்படியே மனையாளிலும் காட்டும் அடக்கு முறையை அடக்கி விட்டதாக ஆனந்தக் கும்மி பாடுகிறாள் பாரதியின் புதுமைப் பெண்.

மாட்டை யடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே
வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார் அதை
வெட்டி விட்டோமென்று கும்மியடி.

(பெண்கள் விடுதலைக் கும்மி-3)

பெண்கள் ஏட்டைத் தொடக் கூடாது, அது தீமையானது எனறு எண்ணியிருந்தவர்கள் மாய்ந்து விட்டார்கள். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற விந்தையான மனிதர்கள் தலை கவிழ்ந்து விட்டார்கள் என்று ஆடிப்பாடிக் கும்மியடிக்கும் புதுமைப் பெண்களை இங்கே காட்டுகிறான்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்.
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்.

(பெண்கள் விடுதலைக் கும்மி-2)

பாரிலே பட்டங்கள், சட்டங்கள் எல்லாவற்றிலும் ஆணுக்குப் பெண் இளைத்தவளில்லை என்று கூறிக் கை கொட்டிக் கும்மியடிக்கும் புதுமைப் பெண்களையும் காட்டுகிறார் பாரதியார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்
இளைப்பில்லைக் காணென்று கும்மியடி.

(பெண்கள் விடுதலைக் கும்மி -6)

## பெண்களின் திருமணம்.

நாய்களை விற்போர் நாயிடம் யோசனை கேட்பதில்லை. அதேபோலப் பெண்களையும் நல்ல விலைக்கு ஆண்களிடம் விற்கும் வழக்கத்தைக் கண்டு கொதித்திருக்கிறார் பாரதியார். பெண்ணை இப்படித் திருமணம் என்ற பெயரில் விற்பதை விடக் கொன்று விடுவது மேலானது. ஆனால் கொல்வதற்குத் துணிவில்லாத ஆண்கள் பெண்களிடம் அபிப்பிராயம் கேட்காமலேயே ஒரு ஆணுக்குத் திருமணம் என்ற பெயரால் விற்று விடுகிறார்கள், என்று கூறுகிறார் பாரதியார்.

நல்ல விலை கொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்ப துண்டோ
கொல்லத் துணிவின்றி நம்மையும் அந்நிலை
கூட்டி வைத்தார் பழி கூட்டி விட்டார்.

(பெண்களின் விடுதலைக் கும்மி -4)

இன்று இந்த நிலை மாறி ஆண்களை விற்கும் நிலை வந்து விட்டதை எண்ணிப் பார்க்கலாம். சில இடங்களில் ஆணிடம் அபிப்பிராயம் கேட்காமலேயே சீதனம் என்ற விலைக்கு விற்கும் வழக்கம் வந்து விட்டது. பாரதியின் இப்பாடல் இன்று ஆண்களுக்கே பொருந்துகிறது.
பால்யத் திருமணத்தைப் பாரதியார் சாடும் விதம் மிகவும் உருக்கமானது. மிகவும் கோபத்தோடு அந்தக் கொடுமையைச் சித்தரிக்கின்றார் பாரதியார்.

தொடரும்.....



# நண்பா உனக்கொரு வெண்பா

ஊரைக் குடிக்கும் உயிர்க்கொல்லி நோயொன்று
பாரைக் குடித்துவிடப் பார்க்கிறதே - பாரடா
வையத்தில் மானுடம் வாழுமோ என்னுமோர்
அய்யத்தில் உள்ளோம் அடா!

போதை மருந்தில் பொருந்தாத இன்பத்தில்
பாதை வழுவிய பாலுறவில் - காதைக்
கழுவாத ஊசி கழிவுரத் தத்தில்
நுழையும் உயிர்க்கொல்லி நோய்!

இடைகாட்டி மெல்ல இளைய தனத்தின்
எடைகாட்டி இன்பம் இழைப்பாள் - மடையா
கொலைமகள் ஆகியே கொல்லுவாள் உன்னை
விலைமகள் ஆசை விடு!

கண்ணுக்குத் தோன்றாத காமக் கிருமிகளோ
புண்ணுக்குள் சென்று புலன்கொல்லும் - கண்ணா
முறையோடு சேராத மோகம் பிறந்தால்
உறையோடு போர்செய்தே உய்!

கரைமீறிச் சேர்ந்தாடும் காமக் கலப்பில்
உறைமீறி நோய்சேர்வ துண்டே - உறைநம்பிக்
கம்மாக் கரையோ கடற்கரையோ தேடாமல்
சும்மா இருத்தல் சுகம்!

தோகைமார் தந்த சுகநோயோ உன்கட்டை
வேகையிலும் விட்டு விலகாதே - ஆகையினால்
விற்பனைப் பெண்டிரொடு வேண்டாம் விளையாட்டு
கற்பனையை வீட்டுக்குள் காட்டு!

கலவிக்குப் போய்வந்த காமத்து நோயைத்
தலைவிக்கும் ஈவான் தலைவன் - கலங்காதே
காவலனாய் வாய்த்தவனே கண்ணகிக்கு நோய் தந்தால்
கோவலனைக் கூசாமல் கொல்!

ஓரினச் சேர்க்கை உறவாலே மானுடத்துப்
பேரினச் சேர்க்கையே பிய்ந்துவிடும் - பாரில்
இயற்கை உறவென்னும் இன்பம் இருக்கச்
செயற்கை உறவென்ன சீ!

தேன்குடிக்கப் போன திருவிடத்தில் உன்னுடைய
ஊன்குடிக்க ஓட்டும் உயிர்க்கொல்லி - ஆண்மகனே!
உல்லாச நோய்சிறிய ஓட்டையிலும் உட்புகுமே
சல்லாப வாசலைச் சாத்து!

மோகக் கிறுக்கில் முறைதவறிப் போனவர்கள்
தேகம் இளைத்தபடி தேய்கின்றார் - ஆகப்
பொறுப்பற்ற வாழ்வில் புகுந்தபலர் இங்கே
உறுப்பற்றுப் போவார் உணர்!

பெண்ணின் சதைமட்டும் பேணுகின்ற ஏடுகளைக்
கண்ணைக் கெடுக்கும் கலைகளை - இன்றே
எரியூட்ட வேண்டும் இளைய குலம்வாழ
அறிவூட்ட வேண்டும் அறி!

துணையோடு மட்டும் தொடர்கின்ற வாழ்வுக்(கு)
இணையாக வேறுமருந்தில்லை - மனைவியெனும்
மானிடத்து மட்டுமே மையல் வளர்த்திந்த
மானுடத்தை வாழ்விப்போம் வா!

கவிஞர்: வைரமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்காபுரம்

05

# அடங்காப்பற்றும் இராவணனும்

ஓர் ஆய்வுத்தொடர்

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய திருக்கேதீச்சர பதிகம், மற்றும் திருக்கோணேஸ்வர பதிகம் ஆகியவற்றில் இராவணனுடைய வரலாற்றையும் குறிப்பிடத் தவறவில்லை. திருஞான சம்பந்தர் தென்னிந்தியாவின் தெற்கு முனையிலுள்ள இராமேஸ்வரத்திற்கு வருகை தந்தபோது அங்கிருந்து, இந்தத் தலங்கள் இருந்த தென் திசை நோக்கி பதிகங்களைப் பாடினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

"திருஞானசம்பந்தர் இராமேஸ்வரம் பணிந்து பாடி, அவ்வூரிலே நின்ற சீர் நெடுமாறர், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் என்னும் அன்பர்களோடு எழுந்தருளியிருந்த காலத்தில், இலங்கையிலுள்ள திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் என்னும் சிவத்தலங்களை நினைந்து பணிந்து திருப்பதிகம் பாடி ஏத்தியருளினார். பின்வருவது அங்கனம் அவர் 'திருக்கேதீச்சரத்தண்ணல் செய்ய பாதம் உன்னி மிகப்பணிந்து ஏத்தி அருளியது" என்று விளக்கவுரையாளர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையிலுள்ள சிவதலத்தின் சிறப்பு, அதன் இயற்கை வளங்கள், ஆகியவற்றை சிறப்புறப் பாடியுள்ளமையாலும், இலங்காபுரம் கட்டுரையின் முக்கிய தளமாக மாந்தை மாதோட்டம் இருப்பதினாலும் திருக்கேதீச்சரப் பதிகம் முழுமையாகத் தரப்படுகின்றது.

**திருக்கேதீச்சரப் பதிகம்:**

தலம்: திருக்கேதீச்சரம் (1158)
பண்: நட்டராகம்

விருது குன்றமா மேருவில் நாண்அரவா அனல்எரி அம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றி நின்று
உறைபதி எந்நாளும்
கருது கின்றவூர் கனைகடல் கடிகமழ் பொழிலணி மாதோட்டம்
கருத நின்றகே தீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே

**தெளிவுரை:** மலைபோன்ற வெற்றிச் சின்னமாக விளங்கும் மகாமேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பினை நாணாகவும், அக்கினியை எரிகின்ற அம்பாகவும் கொண்டு மூன்று புரங்களையும் எரித்துச் சாம்பலாக்கிய ஈசன் உறைகின்ற பதியானது, கடலலைகள் ஒலிசெய்யவும், மணம் கமழும் பொழில் மிக்கதும் ஆகிய மாதோட்டம் தன்னுள் உள்ள கேதீச்சரமாகும். அங்கு எந்நாளும் ஈசனைக் கைதொழுது போற்ற, கடுமையான வினை அணுகாது.

(1159)

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருது கைத்து அருநட்டம்
ஆடல் பேணுவர் அமரர்கள்



- அருணா செல்லத்துரை -

வேண்டநஞ்சு
உண்டிருள் கண்டத்தர்
ஈடமாவது இருங்கடற் கரையினில்
எழில்திகழ் மாதோட்டம்
கேடி லாதகே தீச்சரந் தொழுது எழக்
கெடுமிடர் வினைதானே



**தெளிவுரை:** ஈசன், வீணை மீட்டிப் பாடும் பாங்குடையவர்: பலவகைப்பட்ட நெறிமுறைகளை உடையவர்: இடப வாகனத்தைச் செலுத்தி வீற்றிருந்து நடம் புரிபவர்: தேவர்கள் துதித்து வணங்கி நிற்க நஞ்சினை உட்கொண்டு கரிய கண்டத்தினராய்க் காட்சி நல்கியவர். அப் பெருமானுக்குரிய இடமாவது, பெரிய கடற்கரையில் எழில் திகழ மேவும், மாதோட்ட நகரில் சிறப்புடன் விளங்குகின்ற கேதீச்சரம் ஆகும். அதனைத் தொழுது எழ, துன்பத்தைச் செய்யும் தீய வினைகள் கெடும். (1160)

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையினர் அறைகழல் சிலம்பு ஆர்க்கச் சுண்ணம் ஆதரித்து ஆடுவர் பாடுவ
அகந்தொறும் இடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதோர் இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணுகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே

**தெளிவுரை:** ஈசன் உமாதேவியை ஒரு பாகமாகக் கொண்டு திகழ்பவர்: பிறைச் சந்திரன் தவழும் சடை முடியுடையவர்: ஒலிக்கும் கழலும் சிலம்பும் விளங்கத் திரு வெண்ணீற்றினைத் திருமேனியில் திகழப் பூசுபவர்: இல்லந்தோறும் இடுகின்ற பிச்சைகொண்டு உண்ணும் விருப்பத்தில் உழல்பவர். அப்பெருமான் உயர்ந்த மாண்பில் விளங்கும் மாதோட்டத்தின் அண்ணலாய் நண்ணும் கேதீச்சரத்தை அடைபவர்களுக்குத் துன்பம் தரும் வினை சாராது.

(1161)

பொடிகொள் மேனியர் புலியதள் அரையினர் விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர் மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித்து இருந்த கேசீச்சரம் பரிந்தசிந் தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார் தம்மேல் மொய்த்தெழும் வினைபோமே

**தெளிவுரை:** விபூதியை அணிந்த திருமேனியை உடையவரும், புலித்தோலை உடுத்த அரையை உடையவரும், விரிந்த கையிலேந்துகின்ற கூரிய இச்சை, ஞானம், கிரியை என்னும் முத்தலைச் சூலத்தையுடையவரும், உபவீதத்தை உடையவருமாகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருந்த திரைபொருகின்ற கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரத்திலே அன்பு கொண்ட மனத்தையுடையராகித் தலைகளைச் சாய்த்து அப்பெருமானுடைய பாதங்களை வணங்கவல்ல தொண்டர் மேலே, திரண்டெழுகின்ற தீவினைகள் கெடும்.

(1162)

நல்லர் ஆற்றவு(ம்) ஞானநன்கு உடையர்தம் அடைந்தவர்க்கு அருள்ஈய
வல்லர் பார்மிசை வான்பிறப்பு இறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லையில் புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைந் தேத்தி
அல்லல் ஆசுஅறுத்து அரனடி இணைதொழும்
அன்பராம் அடியாரே

**தெளிவுரை:** மிகவும் நன்மையை உடையவரும், ஞானத்தை மிகவுடையவரும், தம்மையடைந்த அன்பர்களுக்கு அருளைச் செய்ய வல்லவரும், உலகத்திலுள்ள பெரிய பிறப்பு இறப்பு இல்லாதவருமாகிய அளவிறந்த புகழுடைய சிவபெருமானது வளங்கள் நிறைந்த கடல் சூழ்ந்த மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சரமென்னும் தலத்தை இரவும் பகலும் சிந்தித்துத் துதித்துத் துக்கத்தை முழுதுங்கெடுத்து அப்பெருமானது இரு பாதங்களையும் வணங்கும் அன்பர்களே சிவனடியார் என்று சொல்லப்படுவர். (ஏனையவர் அன்பராகாதென்பதாம்.)

(1163)

பேழை வார்சடைப் பெருந்திரு மகள் தனைப்
பொருந்தவைத்து ஒருபாகம்
மாழை அங்கயற் கண்ணிபால் அருளிய பொருளினர் குடிவாழ்க்கை
வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப்பு அணிந்தநீள் மார்பர் கேதீச்சரம் பிரியாரே

**தெளிவுரை:** பரந்த உயர்ந்த பெட்டி போன்ற சடாமுடியிலே பெரிய கங்கையைப் பொருந்தும்படி வைத்து, ஒரு பாகத்தை அருட்சக்திக்கு கொடுத்த கொள்கையை உடையவரும், விஷ்ணுவாகிய பன்றியினது எயிற்றை (கொம்பு) அணிந்த மார்புடையவருமாகிய சிவபெருமான், தமது இருப்பிடமாகிய வாழைச் சோலைகளிலே மந்திகள் மகிழ்ச்சிபெருக இருக்கின்ற மாதோட்டத்திலுள்ள திருக்கேதீச்சர மென்னும் தலத்தை ஒரு காலத்தும் பிரியார்.

மன்னார் பிரதேசத்திலுள்ள திருக்கேதீச்சரம், பாலாவி, மாதோட்டம், மாந்தை வங்காலை போன்ற இடங்கள், இராவணனுடைய வரலாற்றிற்கும், தலைநகராகிய இலங்காபுரத்திற்கும் மிகவும் முக்கிய தொடர்புள்ள இடங்களாகத் திகழ்கின்றன. இந்தப் பிரதேசத்திலுள்ள மேலும் பல இடங்களின் பெயர்களும் இதற்குச் சான்று பகருகின்றன.

### இலங்கையில் மனித பரிணாம வளர்ச்சி பற்றிய ஒரு ஆய்வு

இலங்கையில் ஆதிக்குடிகளான கற்கால மனிதர்கள் வாழ்ந்ததிற்கான மலைக்குகைகள், ஈமத்தாழிகள், பெருங்கற்றூண்கள், போன்றன அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தில் உள்ளன. இவை தொல்லியல் வரலாற்று ஆசிரியர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டியவையாகும். இலங்கையின் ஒருபகுதியில் வேடர்கள் வாழ்ந்தபோது, அசுரர்கள் மற்றும் இயக்கர்களோடு கோவில்களைக் கட்டும் நாகர் குல ஒவியர் பரம்பரையினரும், வாழ்ந்துள்ளனர். நாகர் பரம்பரையைச் சேர்ந்த ஒவியர் (நாகர்) என்ற பிரிவினர் இயக்கர்களோடு சேர்ந்து இலங்கையில் பல கோவில்களையும் குளங்களையும் கட்டியதோடு அவர்களே அப்பிரதேசத்தை பரிபாலித்து வந்ததை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது. அதன் பின்னர் தனியாக நாகர்கள் இருந்ததாக தொல்லியல் வரலாறுகள் தெரிவிக்கின்றன. இதற்கான ஆதாரங்களாக இலங்கையில் உள்ள புராதன கோயில்களைக் கூறலாம். இந்தக் கோயில்களைக் கட்டியவர்கள் யார்? என்ற கேள்வியை முன் வைத்தால் அதற்கான பதிலே இதற்கான சான்றாகும்.

இலங்கை வரலாற்றில் இராவணனுடைய ஆட்சி முக்கிய இடம் பிடிக்கின்றது. இராவணா என்ற சொல்லுக்கு "சூரியக் கதிர்" என்று விளக்கம் கூறப்படுகிறது. "இரா" என்றால் "சூரியன்" "வணா" என்றால் "கதிர்" என்றும் பொருள்படும்.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளிடம் சொல்லக்கூடாதவை



பெற்றோர் குழந்தைக்கு கொடுக்கக் கூடிய மிக முக்கியமான விஷயம் என்னவென்றால் அன்பு என்ற உணர்வு ஒன்று தான். பெற்றோர்களுக்கு குழந்தையின் பாதுகாப்பு நலன் மிகவும் முக்கியமானது. பொறுப்பான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை, வாழ்க்கையில் கடினமாக வேலை செய்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியை ஊக்குவிக்கிறார்கள். பெருமைக்குரிய குழந்தையாக வளர்வது கடினமர்னதாக இருப்பது போலவே ஒரு குழந்தைக்கு நல்ல பெற்றோராக இருப்பதும் கடினமானதாகும். கோபத்தின் வடிகாலாக பயன்படுத்தப்படும் கடுமையான வார்த்தைகளை மனிதர்களால் மட்டுமே கூற முடியும். இருப்பினும் இந்த கோபத்திற்கு ஆளாவது குழந்தைகள் மட்டுமே. இதனால் ஒரு நிலையற்ற, சமாளிக்க முடியாத விளைவுகள் குழந்தைகளிடையே ஏற்படுகிறது. ஆகவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளிடம் எப்போதும் சொல்லக்கூடாதவைகளை கீழே கொடுத்துள்ளோம். அதைப்படித்து அவற்றைகுழந்தைகளிடம் சொல்வதை தவிர்த்திடுங்கள்.

நான் உங்கள் வயதில் இருந்த போது, மிகவும் பொறுப்பாக இருந்தேன்! - மேற்கூறியுவற்றையே பெரும்பாலான பெற்றோர்கள் சொல்வது இவ்வாறு குழந்தையின் திறமையை தங்களுடன் ஒப்பிட்டு சொல்வது பெற்றோர்கள் செய்யும் முதல் தவறு ஆகும். பெற்றோர்களின் இந்த எதிர்பார்ப்புகளினால் குழந்தைக்கு முதலில் வருவது எரிச்சல் மட்டும் தான். ஆகவே அப்போது நீங்கள் குழந்தையாக இருக்கும் போது செய்த தவறுகளை எல்லாம் நினைவுப்படுத்தி பார்த்து, அப்பொழுது உங்கள் பெற்றோர்களுக்கு உண்டான தொந்தரவுகளை நினைவுப்படுத்தி



பார்க்க வேண்டும். மேலும் குழந்தையிடம், வீட்டில் நீ தான் மூத்தவனாக இருப்பதால் எப்படி உறவுமுறைகளிடம் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற வார்த்தைகளால், குழந்தையின் நம்பிக்கை உடைந்துவிடுகிறது.

நீ எப்போதுமே தவறான முடிவுகளை-யே எடுப்பாய்! - முதலில் இவ்வாறு கூறி குழந்தையின் பக்குவப்படாத வயதில் தண்டனை அளிக்கக்கூடாது. உண்மையில் கற்கின்ற போது எல்லோருமே தவறு செய்வது சகஜமான ஒன்று தான். ஒரு வேளை குழந்தைகள் வேலை செய்ய எடுத்துக் கொண்ட கல்வித்துறை ஆர்வமூட்டுவதாக இல்லாமல் இருக்கலாம் அல்லது அவர்கள் எடுத்துக் கொண்ட கல்வித் துறையின் கம்பெனி மிகவும் பிர-பலமானதாக இல்லாமல் இருக்கலாம். அதனால் அவர்கள் எடுத்துள்ள தீர்மானத்தில், அவர்களை குற்றம் சொல்ல வேண்டுமென்பது இல்லை. ஒரு பெற்றோர் என்ற முறையில் குழந்தைகளுக்கு வழிக்காட்டியாக இருக்க வேண்டுமே ஒழிய, உங்களின் கருத்துக்களை ஏற்க கட்டாயப்படுத்தக்கூடாது.

ஏன் நீங்கள் ஒரு சகோதரன் அல்லது சகோதரி போன்று இருக்க முடியாது? இது மீண்டும் ஒரு நியாயமற்ற ஒப்பீடாகும் மற்றும் இதுவும் பொதுவாக வழக்கத்தில் உள்ள ஒன்றாகும். நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கிடையே அவர்களின் திறன்களை, மற்றவர்களுடன் ஒப்பிட்டு பேசுவதன் மூலம் அவர்களுக்குள் விரோதத்தை வளர்க்கும். ஆகவே அதைத் தவிர்க்க வேண்டும். மேலும் இவ்வாறு செய்வதால் உடன்பிறப்புகளுக்கிடையே பிளவு உருவாக்கலாம். ஆகவே குழந்தைகளுக்கு இடையிலான மதிப்பிடுதலை தவிர்த்தால், குழந்தைகளுக்கு உங்கள் மீது ஏற்படும் வெறுப்புணர்வுகளைத் தவிர்க்கலாம்.

என்னைத் தனியாக இருக்கவிடுங்கள்! - குழந்தைகள் கவலை மற்றும் பொறுப்புகள் இல்லாமல் அப்பாவித்தனமாக இருப்பார்கள், அதனால், பெரியவர்களுக்கு குழந்தைகளைப் பார்த்துக் கொள்ள வேண்டிய பொறுப்புகள் உண்டு. அதே சமயம், சிலநேரத்தில் நாம் தனிமையை விரும்பக்கூடும். அப்பொழுது குழந்தைகள் இது போன்ற சூழல்களை புரிந்து கொள்ளும் திறனற்று இருப்பார்கள். இந்த நேரத்தில் பொறுமையிழந்து அவசரப்பட்டு, 'என்னை தனியாக இருக்கவிடு', என்று எரிச்சல்பட்டு சொல்வது, குழந்தைக்கு புறக்கணிக்கப்பட்ட மற்றும் தேவையற்ற மன அழுத்தத்தையே உண்டாக்கும்.

ஆகவே இது போன்ற சமயத்தில் சிறிது பொறுமையாக இருந்து குழந்தையிடம் கோபமாக பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

நீங்கள் உங்களை கண்டு வெட்கப்பட வேண்டும்! - இது மாதிரி வெளிப்படையாக மிகக் கடுமையாக மற்றும் மோசமாகப் பேசுவது, சாதாரணமாக எந்த ஒரு குழந்தைக்கும் தவறாகத் தான் தோன்றும். ஆம், சில குறும்புக்கார குழந்தைகளிடம் நச்சரித்து துளைத்தெடுக்கும் சுபாவம் மிக சாதாரண-மாகக் காணப்படும். அதற்காக உங்களின் எதிர்ப்பை காண்பிக்க வேண்டுமென்பதில்லை. இந்நேரத்தில் குழந்தைக்கு நல்லது மற்றும் கெட்டது என இரண்டிற்கும் இடையேயான வித்தியாசத்தை புரிய வைக்க சிறந்த மற்றும் பொறுமையான வழிகள் பல உள்ளன.

நீங்கள் உங்களது தந்தை அல்லது தாய் போலவே தான் இருக்கிறீர்கள்... - திருமணமான அனைத்து தம்பதிகளும் ஒன்றாக சேர்ந்து சந்தோஷமாக வாழ்கிறார்கள் என்பதில்லை. பெரும்பாலானோர் வெறுப்பினால் அவர்களது உறவுகளுக்கிடையே ஒருவருக்கொருவர் எதிராக கொடூரமாக வார்த்தைகளால் பேசிக் கொள்கின்றனர். இதனால் சில உறவுகள் இறுதியில் பிரிந்தும் விடுகின்றன. எவ்வாறு பார்த்தாலும், குழந்தைகள் இந்த பரஸ்பர விரோத போக்குக்கு மற்றும் விமர்சனங்களுக்கு ஒரு சாட்சியாகின்றனர். அதனால் உங்களுக்கு இடையேயான விரோதத்தை, உங்கள் குழந்தை மீது காண்பித்தால், அது உங்கள் மீதான மரியாதையை இழக்கச் செய்யும்.

நீங்கள் எப்போது என்னை காயப்படுத்தலாம் என்ற நேரத்தை நோக்கியிருக்கிறீர்கள்! - குழந்தைகள், பெற்றோர்களை புண்படுத்தும் வகையில், அவர்களின் விருப்பத்திற்கு எதிராக செய்வதன் மூலம், பெற்றோர்களின் உணர்வுகளை காயப்படுத்தும் நேரங்கள் இருக்கின்றன. பெரும்பாலான நேரங்களில் இது எதிர்பாரா விதமாக நடந்தாலும், சில சமயத்தில் குழந்தைகள் வேண்டுமென்றே செய்கின்றன. எனினும், மேலே கூறப்பட்ட வார்த்தைகளைப் போன்று குழந்தைகளிடம் சொல்வதன் மூலம், அவர்களுடைய மனத்தில் குற்ற உணர்வு கொள்ளச் செய்து விடுகிறது. இதனால் அவர்கள் உங்களது கோரிக்கைகளுக்கு இணங்கி உங்களை மகிழச் செய்வார்கள். ஆனால் நீங்கள் அவர்களுடைய உரிமைக்கான மகிழ்ச்சியை நீண்ட காலமாக பறித்துக் கொண்டிருப்பீர்கள். அதனால் குழந்தைகளை தங்களுடைய சொந்த எண்ணத்தின் படி வாழ விட்டு, அவர்களை குற்றமற்ற வாழ்க்கை வாழ விடுங்கள்.

உங்களைப் போன்ற ஒரு குழந்தை இருப்பதை விட குழந்தையில்லாமல் இருப்பதே மேல்... - மேலே சொல்லப்பட்டது போல் அவசரப்பட்டு சொல்லுகின்ற வார்த்தைகளால், குழந்தைகள் பெரும்பாலும் தீவிர உணர்ச்சி வசப்படுகின்றனர். மேலும் இது அவர்கள் மீது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும். சந்தேகத்திற்கு இடமில்லாமல், அப்படிச் சொல்வது மனம் மிகவும் புண்படுத்தும் விதமாக இருப்பதால், குழந்தைகளிடம் இதுபோல் ஒருபோதுமே சொல்லக்கூடாது. எந்தவிதமான நெருக்கடியாக இருந்தாலும், இப்படி ஏதாவது சொல்வதன் மூலம், இறுதியில் அது உங்கள் வாழ்க்கை முழுவதும் வருத்தப்படச் செய்துவிடும்.

கெட்ட நண்பர்களின் சகவாசத்தை விட்டுவிடவும்! - பெற்றோர்களும் ஒரு-வரை நண்பராக்குவதற்கு முன்பு யோ-சனை செய்வதில்லை. அதுபோலவே குழந்தைகளும் செய்கின்றனர். ஆனால் ஒரே ஒரு வேறுபாடு என்னவென்றால், நமக்கு ஏற்படும் கெட்ட நண்பர்களின் சகவாசத்திலிருந்து எப்படி விட்டு விலக வேண்டுமென்று நமக்கு தெரியும். ஆனால் குழந்தைகளுக்கு தெரிவதில்லை.

அவர்களுக்கு நண்பர்களே உலகம், எனவே நீங்கள் வெறும் அதிகாரத்தினால் 'நல்ல' நண்பர்களைத் திரும்பவும் பெற வேண்டும் என்று அவர்களிடம் கூற முடியாது.

# சிக்கலைத் தீர்ப்போம்

பல உறவுகளில் சிக்கல் எழுவதற்கு காரணம் சரியான கருத்து பரிமாற்றம் இல்லாதது மட்டுமே. பொதுவாக பிரச்சினைகளை சரிவரப் பேசி தீர்த்துக் கொள்ளாமல், மனதி-லேயே வைத்துக் கொள்வதால், பிற்காலத்தில் அது வெடித்து பிரிவுக்குக் காரணமாக அமைகி றது. எனவே எந்த சிக்கல்களையும் பேசி த் தீர்த்துக் கொண்டால், சுலபமாக தீர்ந்துவிடும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அனை வருக்கும் உறவுகள் எவ்வளவு முக்கியம் என்பது ஆபத்து காலத்தில் தான் உணர்ந்து கொள்ள முடியும். அத்தகைய உறவை பலப்படுத்த பேச்சுத் தொடர்பு மிக வும் அவசியம் என்பதை மறந்து விடக்கூடாது. இவ்வுலகில் யாராலும் தனித்து வாழ முடியாது. ஆகவே இயன்ற அளவு வாழ்க்கைத் துணையுடன் நெருக்கமாக வரழ முயற்சிக்க வேண்டும். கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழி ஒரு தடையாக இருக்கின்றது என்பதையும் கண்டிப்பாக மறுக்க முடியாது. வாழ்க்கைத் துணையோ அல்லது உடன் பணிபுரிபவரோ, வேற்று மொழி யைச் சேர்ந்தவராக இருந்தால், கருத்தைத் தெளிவாகப் பரிமாற்ற முடியாது. இதனால் மனமு-றிவு ஏற்படலாம். அத்தகைய முறிவைத் தடுக்க சில யோச னைகளை கொடுத்துள்ளோம். அதை முயற்சித்துப் பாருங்கள்.

பேசத் தவிர்க்க வேண்டியவை - தேவையற்ற விஷயங்கள் மற்றும் எதிர்மறையாக நடந்த செயல்கள் போன்றவற்றைப் பற்றி துணையுடன் பேச வேண்டாம். மேலும் பேச-னால், அது சிக்கலில் தான் முடியும்.

குறைகளைப் பார்க்க வேண்டாம் - எப்போதும் குறைகளைப் பார்க்காமல், துணையின் நல்ல விஷயங்களைப் பற்றிப் பேசி, அவர்களை மதித்து நடந்தால் பல சிக்கல்களை எளிதில் தீர்த்து விட முடியும்.

மூன்றாம் நபர் - துணையுடன் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லையென்றாலும், மூன்றாம் நபரை இடையில் இழுக்க வேண்டாம். ஏனெனில் அது மேலும் சிக்கலைக் கொண்டு வரும். ஆகவே இருவரும் சரியாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் உங்களுடைய பிரிவிற்கு நீங்களே காரணம் ஆகிவிடுவீர்கள்.

கருத்துப் பரிமாற்றம் - வாழ்க்கைத் துணையிடம், உங்களுக்கு எது தேவை என்பதை குழப்பமின்றித் தெளிவாக விளக்க வேண்டும். ஏனெனில் தெளிவான பரிமாற்றமே உறவைப் பலப்படுத்தும். மதித்து நடத்தல் - உங்களில் இருந்து உங்கள் துணையின் வளர்ப்பில் மாறுபாடு இருந்தால், நிச்சயம் முரண்பாடு ஏற்படும். எனவே அதைச் சரிசெய்ய நினைக்காமல், அவற்றை மதித்து நடந்தாலே நிம்மதியை பெற்று விடுவோம்.

புரிந்துகொள்ளுதல் - எவ்வளவு தான் விட்டுக் கொடுத்து நடந்தாலும், சில நேரங்களில் வாழ்க்கைத்துணை சரியாக நடந்து கொள்ளவில்லை என்றால், அவரிடம் ஏதோ பிரச்சினை இருக்கின்றது என்பதை யோசித்து விலகுவது நல்லது. ஒளிவு மறைவற்ற வாழ்க்கையை வாழ்வதன் மூலம், தேவையற்ற சிக்கலை தீர்த்து பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இசையாளர்களுக்கு இளையராஜா சவால்

இசைஞானி இளையராஜா முதன் முறையாக லண்டனில் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்துகிறார். இதில் 19 பிரசித்திபெற்ற பாடகர், பாடகிகளும், 75 இசைக் கலைஞர்களும் கலந்து கொள்கிறார்கள். இதற்கான ஒத்திகை பிரசாத் ஒலிப்பதிவு ஸ்டூடியோவில் தீவிரமாக நடந்து வருகிறது. ஜங்கரன் நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

லண்டனிலேயே மிகப்பெரிய உள்ளரங்கான ஓ2 வில் இந்த நிகழ்ச்சி நடக்கவுள்ளது. இது தொடர்பாக சென்னையில் இளையராஜா பேட்டி அளித்தபோது உலக இசை அமைப்பாளர்களுக்கு ஒரு சவால் விடுத்தார்.

அதாவது, "நான் இசை அமைத்த ப்ரியா படத்தில் ஹீரோவும் ஹீரோயினும் சிங்கப்பூரை சுற்றி பார்ப்பது போன்று பத்து நிமிடங்களுக்கு காட்சி வைத்திருப்பார்கள். தெருவில் நடப்பது, ஷொப்பிங் செய்வது, டொல்பின் ஷோ பார்ப்பது, இப்படி அந்த காட்சிகள் இருக்கும். இதற்கு பத்து நிமிடம் தொடர்ந்து பின்னணி இசை அமைக்க வேண்டும். ஒவ்வொரு காட்சிக்கும் இசை தனித்தனியாக இருக்க வேண்டும். அதற்கு நான் ஒரு மணி நேரத்தில் இசை அமைத்தேன்.

இப்போதுள்ள இசை அமைப்பாளர்கள் ஏன் உலகதில் உள்ள எந்த இசை அமைப்பாளரிடமும் இந்தக் காட்சியை கொடுங்கள் குறைந்தது ஒரு மாதம், இரண்டு மாதம் எடுத்துக் கொள்வார்கள். நான் எந்தப் படத்திற்கும் மூன்று நாட்களுக்கு மேல் இசை அமைத்தது கிடையாது. 750 படங்களுக்கு இசையை அப்படித்தான் அமைத்திருக்கிறேன்.

இப்போது இசைக்குள் கணினி வந்து விட்டது. கணினி கொண்டு புத்திசாலித்தனமாக அமைக்கப்படும் இசை மூளைக்குத்தான் செல்லுமே தவிர மனசுக்குள் தங்காது. இசை அமைப்பின் வேலைகளை கணினி செய்து விடுவதால் இசை அமைப்பாளர்கள் சோர்ந்து விடுகிறார்கள். அன்று நான் அரை மணிநேரத்தில் நோட்ஸ் எழுதி இரண்டு மணி நேரத்தில் ஒலிப்பதிவு செய்த பாடலை இன்று மீள்பதிவு செய்ய இரண்டு நாட்கள் ஆகிறது.

இப்போதுள்ளவர்கள் எப்படி அன்று உங்களால் செய்ய முடிந்தது என்று ஆச்சரியப்படுகிறார்கள். அதுவாக வந்தது. நான் உங்களுக்குத் தந்தேன். இது இறைவன் தந்தது வேறென்ன சொல்ல" என்றார்.




ஆங்கிலப் படங்களை தமிழகத்தில் வெளியிடும் ஸ்ரீ தேனாண்டாள் பிக்சர்ஸ் நிறுவனம் ருத்ரநகரம் என்று தமிழிலும் 'பசிபிக்ரிம்' என்று ஆங்கிலத்திலும் படத்தை வெளியிட்டுள்ளது. இயக்குநர் இராம.நாராயணனின் மகன் என்.ராமசாமி, இப்படத்தை தமிழகம் முழுவதும் வெளியிட்டுள்ளார்.

பசிபிக் பெருங்கடலில் இருந்து மிகப்பெரிய வினோத மிருகம் கைஜு வருகிறது. கரைக்கு வரும் அந்த வினோத மிருகம் மனித உயிரினத்தை அழிக்கிறது. அந்த வித்தியாசமான மிருகத்தை அழிக்க விஞ்ஞானிகள் ஒரு இயந்திர மனிதனை உருவாக்குகிறார்கள். அந்த இயந்திர மனிதனை இயக்குவதற்கு திறமைவாய்ந்த இரண்டு பைலட்டுகள் பொறுப்பேற்கிறார்கள்.

இயந்திரமனிதனுக்கும் அந்த வினோத மிருகத்திற்கும் நடைபெறும் அரக்கத் தனமான சண்டையில் வென்றது யார்? என்பது தான் இப்படத்தின் கதை.

இந்த கொடூர மிருகத்தினால், கரையை ஒட்டியுள்ள அந்த நகரமே ரணகளமாகிறது. மக்கள் காப்பாற்றப்பட்டார்களா? அடுத்தடுத்து நடைபெறும் மயிர்க் கூச்செரியும் சண்டைக் காட்சிகள் இதுவரை எந்தப் படத்திலும் பார்த்திராத வகையில் படமாக்கப்பட்டுள்ளது.

ஹரிபொட்டர், 2012, ஜோர்னி-2, கோஸ்ட் ரைடர், சூப்பர் மன் (மன் ஆஃப் ஸ்டீல்) ஆகிய வெற்றிபெற்ற ஆங்கிலப் படங்களை வெளியிட்ட ஸ்ரீ தேனாண்டாள் பிக்சர்ஸ் நிறுவனம் 3டி தொழில்நுட்பத்தில் இந்தப் படத்தை வெளியிட்டுள்ளது.

இந்தப் படம் 1600 கோடி ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் இடம்பெறும் இயந்திர மனிதன் ஏறக்குறைய 300 அடி உயரம் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்படத்தில் வரும் அந்த கொடிய மிருகத்திற்கு 'கைஜு' என்று பெயர் வைத்துள்ளனர். ரேமின் டிஜாவதி இசையமைத்துள்ள இப்படத்திற்கு, கில்லவர்மோ நவாரோ ஒளிப்பதிவு செய்துள்ளார். பீட்டர் அமுன்சன் படத்தொகுப்பு செய்ய, டிராவீஸ் பீச்சம் மற் றும் கில்லவர்மோ டோரோ ஆகியோர் இணைந்து இப்படத்திற்கு திரைக்கதை அமைத் துள்ளனர். ஜுராசிக் பார்க், காட்சிலா உள்ளிட்ட வெற்றிப் படங்களின் வரிசையில், 'ருத்ரநகரம்' படமும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் கண்டும் விதத்தில், இயக்குநர் கில்லவர்மோ டோரோ இயக்கியுள்ளா.






## புலிகளுக்கு எதிரானதல்ல மெட்ராஸ் கபே

### நடிகர் ஜான் அபிரகாம் தெரிவிப்பு

ஜான் அபிரகாம் கதாநாயகனாக நடித்துள்ள மெட்ராஸ் கபே படம் தமிழ், இந்தி மொழிகளில் வெளிவரவுள்ளது. இந்தப் படத்தில் விடுதலைப்புலிகளை தீவிரவாதிகளாக சித்தரித்துள்ளதாக எதிர்ப்பு கிளம்பியுள்ளது. தமிழகத்தில் படத்தை வெளியீடு செய்யக்கூடாது என்று தமிழ் அமைப்புகள் வற்புறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் மெட்ராஸ் கபே படத்தின் தமிழ் ஒரு சில காட்சிகளை வெளியிடுவதற்காக ஜான் அபிரகாம் சென்னை சத்யம் தியேட்டருக்கு சென்றவேளை அவருக்கு பாதுகாப்பு அளிக்க தியேட்டரை சுற்றி பொலிஸார் குவிக்கப்படடிருந்தனர்.

ஒரு சில காட்சிகளை வெளியீடு செய்துவிட்டு ஜான் அபிரகாம் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது மெட்ராஸ் கபே விடுதலைப்புலிகளுக்கு எதிரான படமா என நிருபர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு ஜான் அபிரகாம் கூறியதாவது.

மெட்ராஸ் கபே படத்தில் யாரையும் புண்படுத்தவில்லை. இலங்கையில் 1980 மற்றும் 90களில் நடந்த ஒரு நிகழ்வை வைத்து படம் எடுத்துள்ளோம். அதை ஆதரிப்பதாகவோ எதிர்ப்பதாகவோ எந்த கருத்தையும் சொல்லவில்லை. நடுநிலையான கருத்தை பதிவு செய்துள்ளோம். படத்தை பார்க்காமலேயே எதிர்ப்பது சரியல்ல. எதிர்ப்பவர்களுக்கு படத்தை திரையிட்டு காட்ட தயார்.

இப்படத்தில் நாயகியாக நர்சிஸ் பக்ரி நடித்துள்ளார். சூஜித் சர்க்கார் இயக்கியுள்ளார். கற்பனை கலந்த கொமர்சியல் படமாக தயாராகியுள்ளது. இலங்கை, லண்டன், தாய்லாந்தில் படப்பிடிப்பு இடம்பெற்றுள்ளது.

இந்தப் படத்தை எடுக்க இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பணம் கொடுத்தாரா?


## மீண்டும் வருகிறது நினைத்தாலே இனிக்கும்

25 ஆண்டுகளுக்கு முன், பெல்பாட்டம் ஜீன்சுகளுடன் வலம் வந்து, தற்போது, காதோ ரம் நரைத்து, தொப்பைகளுடன் வலம் வரும் நடுத்தர வயது நபர்களிடம்,"நினைத்தாலே இனிக்கும் என்ற வார்த்தையைக் கூறிப் பாருங்கள். சிறிதுநேரம் கண்களை மூடி, அப்படியே மலரும் நினைவுகளில், மூழ்கிப் போவர். ஆம், 1979ல் வெளியான, "நினைத்தாலே இனிக்கும் படத்தின் பாதிப்பு தான், இது. பாலசந்தர் இயக்கத்தில், ரஜினி, கமல், ஜெயப்பிரதா, கீதா நடித்த இந்த படம்,அந்த கால இளைஞர்களிடையே, பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது.

"யாதும் ஊரேயாவரும் கேளிர், சம்போ சிவசம்போ, நம்மஊரு சிங்காரி போன்ற, எம்.எஸ்.வி.,யின் மெல்லிசையால், ரசிகர்களை வசியம்செய்தது அந்த படம். இப்போது, மீண்டும் இந்த படத்தை புத்தம் புது பொலிவுடன்,மெருகேற்றி, புதிய தொழில்நுட்பத்தில் வெளி யிடப் போகின்றனராம். பெல்பாட்டம் இளைஞர்களுக்கு இனி கொண்டாட்டம் தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகைப்படங்களைப் பாதுகாக்கும் இணையத்தளம்



தற்போதைய சூழலில் கைபேசி மற்றும் டிஜிட்டல் கமெராக்களின் பயன்பாடு அதிகமாக இருப்பதால், புகைப்படங்கள் எடுப்பதும் அதிகமாகி வருகிறது.

மேலும் இதனை கணனியில் பதிந்து வைப்பதால், Hard Disk அதிகமான இடத்தை எடுத்துக் கொள்கிறது.

இந்நிலையில் திடீரென Hard Disk இயங்காமல் போனால், இந்த புகைப்படங்கள் கிடைக்காது.

இதற்கு மாற்றுதீர்வாக புகைப்படங்களை Cloud Computing முறையில் சேமிக்க பல்வேறு இணையத்தளங்கள் செயல்படுகின்றன. குறித்த இணையத்தளத்தில் நுழைந்த உடன், உங்களுக்கான கணக்கு ஒன்றை தொடங்கவும்.


உடனே லொக்கின் செய்தவுடன், Start Backing Up Your Photographs என்ற பட்டனை நீங்கள் கிளிக் செய்தவுடன், Setup File தரவிறக்கம் செய்யப்படும்.

இதனை இயக்கி, படங்களை ஒருங்கிணைக்கும் Picturelife Sync அப்ளிகேஷனை இன்ஸ்டால் செய்திட வேண்டும்.

இந்த தளத்தின் மூலம் இலவசமாக 5 ஜிபி வரையிலான புகைப்படங்களை பதிவேற்றம் செய்யலாம்.

அனைத்தும் முடிந்தவுடன், உங்களது புகைப்படங்களை ஆல்பங்களாக பிரிக்கலாம். எந்தநிலையில் நீங்களும் பதிவேற்றம் செய்த புகைப்படங்களை மீண்டும் எடுத்துப் பார்க்க முடியும்.

## வைரஸ்களிடமிருந்து கணனிகளை பாதுகாக்க..



கணனி உலகை ஆட்டிப்படைக்கும் வைரஸ்களை நீக்குவதற்கு பல்வேறு அன்ரிவைரஸ் மென்பொருட்கள் அறிமுகமாகிய வண்ணம் இருக்கின்றன.

இவற்றில் சில இலவசமாக கிடைப்பதுடன், சில பணத்திற்கும் கொள்வனவு செய்ய வேண்டி இருக்கும்.

வைரஸ்களிலிருந்து பாதுகாப்பு தருவதற்கு தற்போது NANO AntiVirus எனும் புதிய மென்பொருளானது முற்றிலும் இலவசமாக கிடைப்பதுடன் உயர் வினைத்திறன் உடையதாகவும் காணப்படுகின்றது.

விண்டோஸ் இயங்குதளத்தில் செயற்படக்கூடிய இந்த மென்பொருளானது எந்த விதமான வைரஸ்களிலிருந்தும் கணினியைப் பாதுகாப்பதுடன் உடனுக்கு உடன் கணினியை ஸ்கான் செய்து பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்கின்றது.


## பேஸ்புக் Embed வசதியை பயன்படுத்துவதற்கு

பேஸ்புக் சமூக வலைத்தளமானது அண்மையில் போஸ்ட்களிற்கான (Posts) Embed எனும் புத்தம் புதிய வசதியினை அறிமுகப்படுத்தியிருந்தது.

புகைப்படம், வீடியோ போன்றன உட்பட பேஸ்புக் தளத்தில் பகிரப்படும் எந்தவிதமான போஸ்ட்டிலிருந்தும் Embed செய்துகொள்ள முடியும். அத்துடன் இதற்கான அனுமதியினை பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாதிருப்பதுடன், யார் வேண்டுமானாலும் பயன்படுத்த முடியும். இதனைப் பெற்றுக்கொள்வதற்கு போஸ்ட் ஒன்றினை தெரிவு செய்து அதன் வலது மேல் மூலையில் காணப்படும் அம்புக்குறி போன்ற பொத்தானை அழுத்தவும்.

அதன்போது தோன்றும் மெனுவில் Embed Post என்பதனை தெரிவு செய்யவும்.

இப்போது குறித்த போஸ்ட்டிற்கான Embed தோன்றும், அதனை பிரதி செய்து வேண்டிய இடங்களில் பயன்படுத்த முடியும்.




## புதியவன் தொழில்நுட்பம்

## புதிய OLED ரி.வி அறிமுகம்



முதற்தர இலத்திரனியல் சாதன உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான சம்சுங் ஆனது விலை உயர்ந்த OLED தொழில்நுட்பத்தினைக் கொண்ட தொலைக்காட்சியை நியூயோர்க்கில் அறிமுகம் செய்து வைத்துள்ளது.

55 அங்குல அளவுடையதும் வளை மேற்பரப்பினைக் கொண்டதுமான Samsung KN55S9C எனப்படும் இந்த தொலைக்காட்சியின் விலையானது 9,000 அமெரிக்க டொலர்களாகும்.

பன்முக பார்வை (Multi-View) உடைய இத்தொலைக்காட்சியுடன் முப்பரிமாண காட்சிகளை பார்க்கக்கூடிய கண்ணாடி ஒன்றும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## தவறிய ஸ்மார்ட் கைபேசிகளை இலகுவாக கண்டுபிடிக்க

Android Device Manager எனப்படும் இந்த மென்பொருளானது வீட்டிலோ அல்லது அலுவலகங்களிலோ தவறிய ஸ்மார்ட் கைபேசியினை உரத்த சத்தத்தில் ஒலி எழுப்பச் செய்கின்றது.

இது Silent -இல் வைக்கப்பட்டுள்ள கைபேசியினையும் உரத்த சத்தத்தில் ஒலியெழுப்பச் செய்யும். அவ்வாறில்லாவிடில் Map வசதி யினைப் பயன்படுத்த முடியும்.

சில சந்தர்ப்பங்களில் கைபேசியினைக் கண்டுபிடிக்க முடியவில்லையாயின் இந்த மென்பொருளினைப் பயன்படுத்தி கைபேசியில் உள்ள அனைத்து முக்கியமான தரவுகளையும் அழித்துவிட முடியும். இது Android 2.2 இயங்குதளம் மற்றும் அதற்கு பிந்திய இயங்குதளங்களில் செயற்படக்கூடிய தாகக் காணப்படுவதுடன் இதனை பயன்படுத்துவதற்கு கூகுள் கணக்கு அவசியமானதாக இருக்கின்றது.

## நீர் மற்றும் ஏனைய திரவங்களிலிருந்து ஸ்மார்ட் கைபேசியைப் பாதுகாக்க



பொதுவாக இலத்திரனியல் சாதனங்கள் நீர் போன்ற திரவங்களினால் செயலிழக்கும் சாத்தியம் அதிகமாகவே காணப்படுகின்றது.

அதேபோன்று விலை உயர்ந்த ஸ்மார்ட் கைபேசிகளும் இதற்கு விதிவிலக்கு அல்ல. எனவே ஸ்மார்ட் கைபேசிகளை பாதுகாக்கும் வகையில் Liquipel எனும் உறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

நனோ படையினால் உருவாக்கப்பட்ட இந்த உறையானது நான்கு படையினைக் கொண்டதாகவும் அதிர்வை உறுஞ்சக்கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

## புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய BlackBerry 9720 விரைவில் அறிமுகம்

தற்போது தொடுதிரை வசதியுடன் கைபேசி உலகை ஆக்கிரமித்து வரும் ஸ்மார்ட் கைபேசிகளுக்கு இடையில் மீண்டும் சாதாரண கீபோர்ட்டினை உடைய கைபேசி ஒன்றினை BlackBerry அறிமுகப்படுத்துகின்றது.

BlackBerry 9720 எனும் தொடரிலக்கத்தைக் கொண்ட இக்கைபேசியானது 2.8 அங்குல அளவு, 480 x 360 Pixel Resolution உடைய திரையைக் கொண்டுள்ளது.

இவற்றுடன் 5 மெகாபிக்சல்களை உடைய கமெரா, பிரதான நினைவகமாக 512MB RAM போன்றவற்றினையும் கொண்டுள்ள இக்கைபேசியானது ஆசியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அடுத்தவாரம் அறிமுகமாகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அங்கீகரிக்கப்படாத பெண்மை

இந்த உலகம் தாய்மையை கொண்டாடு கிற அளவுக்கு பெண்மையை கொண் டாடு வது இல்லை என்பது வருத்தமானதொரு விஷயமே! தாய்மை அடைகிறபோது தான் அவளைக் கொண்டாட ஆரம்பிக்க வேண் டுமா? ஏன் அப்போது மட்டும் அவளை கொண்டாட வேண்டும்? அப்படி கொண்டா டாமல்விட்டால், இந்த உலகம் பழிக்குமே. அதனால் தானோ என்னவோ ஒருவன் தாய்மையை மட்டுமாவது மதிக்கிறான்.

ஆனால் ஒரு பெண்ணுக்குள் ஆரம்பம் முதலே தாய்மை நிரம்பி வழிந்துகொண்டு தான் இருக்கிறது. ஒரு பெண் குழந்தை பொம்மையை குழந்தை போல பாவித்து அதற்கு உணவு அளிப்பதும், தாலாட்டி உறங்க வைப்பதில் இருந்தே நாம் புரிந்து கொள்ளலாம். ஆனால் போகப் போக அதற் குள்ளும் ஆணாதிக்கத்தின் பாதிப்புக்கள் வந்து விடுகின்றன.

காலையில் செய்தித்தாளை அப்பாவிட மும், பாலை அம்மாவிடமும் யாரும் கற்பிக்கா மலே ஒரு குழந்தை எப்படிக் கொடுக்கிறது?

பெண்களின் பெருந்தன்மையால் தான் இங்கே பல ஆண்கள் தண்டிக்கப்படாமல் நிம்மதியாக வாழ முடிகிறது. ஒரு பெண் ணோட தியாகத்துக்கு முன்னாடி, ஆண் களோட வலிமை எல்லாம் ஒண்ணுமே இல்லாமல் போய் விடுகிறது.

ஆணாதிக்கம் என்பது ஒரு பிறவிக் குணமா? இயற்கை ஆணுக்கு அளித்த ஆயு-தமா? இல்லை இயற்கையை வென்ற ஆணின் குணாதிசயமா? இப்படி என்னுள் விடை கிடைக்காத கேள்விகள் ஏராளம். யோசித்துக் கொண்டிருக்கையிலேயே நம் இதிகாசங்கள் நினைவுக்கு வந்தன. ஆண்களோட பழி சுமத்துகிற மனோபாவத்துக்கு விடை தேடி பயணிக்க வேண்டும் என்றால் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிச் செல்ல வேண்டும். அசுரன் கிட்ட சிக்கிய மனைவியைப் பார்த்ததும் மகிழ்ச்சி கொள்ளாமல் சந்தேகப்பட்ட ராமனும், ஆண்கள் சூதாடிய போது ஏதோ மண்ணை வைத்து விளையாடியதோடு மட்டுமல்லாமல் மனைவியையும் வைத்து விளையாடிய பாண்டவர்களும் தானே நம் முன்னோர்கள்? விபச்சாரம் செய்ததாக ஒரு பெண்ணை கல்லெறிந்து அடித்துக் கொல்ல முயற்சிக்கும் போது யேசுநாதர் வந்து தடுத்தாரே .. அப்போ அவர், " உங்களில் தவறு செய்யாதவர்கள் கல் எறியுங்கள்" என்றதும் ஆண்கள் எல்லாம் மௌனமானார்களே. ஆணின் பங்கு இல்லாமல் இங்கே விபச்சாரம் நடக்காது என்கிற உண்மை தெரியாத வர்கள் எவரும் இல்லை. அன்னை தெரெசா கொல்கத்தாவில் அறக்கட்டளை தொடங்கிய போது அதை அவதூறாகப் பேசியவர்கள் தானே நம் பாட்டனார்கள்.

".......மவனே", எல்லா மொழிகளிலும் உள்ள உச்சபச்ச கெட்டவார்த்தை ஒருவ-னின்/ஒருவளின் தாயை மற்றும் சகோதரியை பழிப்பதாகவே உள்ளது. "இப்பேர்பட்ட பிள்ளையைப் பெத்ததுக்கு அவன் பெத்தவளை திட்டாம வேற என்ன செய்யிறது?" என்று நியாயம் வேறு! அவனைப் பெற்று எடுப்பதில் ஆணுக்கும் சரி பாதி பங்கு இருக்கிறதே. ஏன் அவனைத் திட்ட வார்த்தைகள் ஏதும் இல்லாமல் போயிற்று?

"அயலவர் ஒருவர் உறவினர் ஆனார். உறவினர்கள் எல்லாம் அயலவர் ஆனார்கள்". ஒரு பெண்ணின் திருமணத்தையும் அவளின் வலிகளையும் நறுக்கென்று பதிவு செய்யும் வரிகள். திருமணத்திற்குப் பின் தங்களின் தோழிகளுடன் பேசக் கூட அனுமதி பெறும் அவலம் இன்னும் நீடிப்பது கேவலமே. அந்த வீட்டில் இரவு சாப்பாட்டாக ரொட்டி செய்வதாக வைத்துக் கொள்வோம். அந்த பெண்ணுக்கு பிடித்தது ஆனால் அந்த குடும்பத்தில் அது செய்யும் வழக்கம் இல்லை என்றால், முடிவு அவள் அதை தியா கம் செய்வது தான். இந்த உலகம் பெரிதும் புரிந்து கொள்ளப்படாமல் போன விஷயம் திருமணமாகி பத்து, பதினைந்து வருடங்கள் கழித்து ஒரு பெண்ணிற்கு ஏற்படும் தனி மையும், வெறுமையுமே. ஒரு பெண்ணால் எந்த ஒரு பிரச்சனையையும் சுலபமாக சமா ளித்து விட முடியும். ஆண்களையே சமாளிப்பவர்கள் ஆயிற்றே!

ஐந்து வருடங்களுக்கு முன் நான் படித்த ஒரு கதை. ஒரு பெண்ணின் தினசரி வாழ்க்கையை மையமாகக் கொண்டது. அவன் பிரபல தனியார் துறையில் மேல் பதவி யில் இருப்பவன். தான் மட்டும் இந்தக் குடும்பத்தைக் காப்பாற்ற சிரமப்படுகிறோமே தன் மனைவி மட்டும் வீட்டில் சுகமாக இருக்கிறாளே என்று கடுப்பாகிறான். அன்றிரவு," சாமி! தயவு செஞ்சு என்ன என் மனைவியாகவும், அவளை நானாகவும் மாற்றிவிடேன்.." என்று வேண்டுகிறான். கடவுளும் அவ்வண்ணமே அருள் புரிகிறார். மகிழ்ச்சியில் நிம்மதியாக உறங்குகிறான். மறுநாள், "ஏய்! என்ன இன்னும் தூங்கிக் கொண்டு இருக் கிறாய்? எழுந்திரு. வேலையைப் பார்." என்கிறாள் கணவனாக மாறிய மனைவி. பல் தேய்த்து, வீடு வாசல் கூட்டி, உணவு சமைத்து, அனைவருக்கும் மதிய உணவு தயார் செய்து வழி அனுப்பி வைத்து விட்டு குளிக்கச் செல்கிறாள். வெளிய வந்தவுடன் தான் ஞாபகம் வருகி-றது அந்த மாதம் கட்ட வேண்டிய பில்கள் பற்றி. உணவு கூட உண் ணாமல் அதன-தன் அலுவலகங்களுக்குச் சென்று பில்களை கட்டி வரும் வழியிலே பள்ளிக்குச் சென்ற பிள்ளையை அழைத்து வந்து, அதனுடன் மல்லுக்கட்டி உணவூட்டி, உறங்க வைத்து தானும் சாப்பிடுகிறாள். பிறகு துணிகளைத் தோய்த்து, குழந்தை எழுந்தவுடன் அதை வீட்டுப் பாடங்கள் எழுத வைத்துக் கொண்டிருக்கும் போதே அலுவலகம் விட்டு கணவர் வந்து விடுகிறார். அவருக்கு கோப்பி கொடுத்து விட்டு இரவு உணவு தயார் செய்கிறாள். அனைவரும் உணவருந்திய பின்பு குழந்தையை தூங்க வைத்து, பாத்திரம் தேய்த்து விட்டு பிழிந்த சக்கையாக கட்டிலில் வந்து படுக்கும் போது கணவரை திருப்திபடுத்த வேண்டிய சூழ்நிலை. இறுதியில் எல்லோரும் உறங்கிய பின்பு கட்டிலுக்கு அடியில் சென்று மீண்டும் கடவுளை வேண்டுகிறான், "சாமி! இப்ப விளங்குது பொம்பிளைகளோட கஷ்டம். மறுபடியும் என்னை ஆம்பிள்ளையாகவே மாற்றிடு, ப்ளீஸ்"என்கிறான். அவன் முன் தோன்றிய கடவுள் சிரித்துக்கொண்டே," மன்னித்து விடுப்பா. இன்னும் பத்து மாசம் நீ பொறுத்து இருக்க வேண்டும். ஏன் என்றால் நீ இப்பொழுது ஒரு குழந்தையை சுமந்து கொண்டு இருக்கிறாய்.

இது ஒரு புனைக் கதையாக இருக்கலாம். ஆனால் அது சொல்ல வரும் கருத்து வலிமையானது. சில பேர்கள் கதையை கதையாக மட்டுமே பார்ப்பார்கள். அவர்களுக்காக ஒரு உண்மைக் கதை.

அவள் ஒரு கிராமத்துப் பைங்கிளி. வழக்கம் போல ஒருவன் காதல் என்கிற போர்வையில் அவளை அணுகி இருக்கிறான். அவளும் பிடிகொடுக்காமலே இருந்த ருக்கிறாள். எப்படியோ அவனும் அவளை தன் வலையில் சிக்க வைத்துவிடுகிறான். அவள் பேரழகி என்றும், அவளைத் தான் சினிமாவில் அறிமுகம் செய்யப் போவதாக வும் ஆசை வார்த்தைகள் சொல்லி சென்னைக்கு அழைத்துச் செல்கிறான். அவளும் வெகுளியாக அவனை நம்பி அவனுடன் சென்னைசெல்கிறாள். ரயிலில் உள்ள கழி-வறை ஒன்றில் அவளை அனுபவித்து முடித்தவுடன், அவளை உறங்க வைத்து நடுழியி லேயே இறங்கிச் சென்று விடுகிறான் அவன். அசதியாக தூங்கி இருந்தவள் சென்னை வந்தவுடன்தான் விழித்து இருக்கிறாள். தன் கிராமத்தை விட்டு வேறு எங்கும் செல்லாத அவள் துக்கத்துடன் ரயில் நிலையத்திலேயே அன்று முழுவதும் இருந்திருக்கிறாள். அவளை வெகு நேரம் கவனித்து வந்த ஒருவர், அவளை நெருங்கி விசாரிக்கிறார். பிறகு அவளுக்கு மயக்க மருந்து கலந்த உணவை வாங்கிக் கொடுத்து தன் பசியை தீர்த்துக் கொள்கிறான். இப்படி அவள் கிட்டத்தட்ட 45 ஆண்களின் பசிக்கு உணவாகி இருக்கிறாள். தன் வேதனையை தன் தந்தை வயதில் இருக்கும் ஒருவனிடம் சொல்லி அழுதிருக்கிறாள். அவனும் அப்படியே. கடைசியில் சுயநிலை மறந்த நிலையில் ஏதோ ஒரு இடுகாட்டில் வந்து தஞ்சம் அடைந்து இருக்கிறாள். அங்கேயே வசித்து வரும் ஒரு ஆண்மகன் தான் அவளை சோறிட்டு காத்திருக்கிறான். சில மாதங்கள் கழித்து அவளும் இந்த பாவப் பட்ட உலகை விட்டு சுதந்திரம் வாங்கிச் சென்று விட்டாள். இந்த சம்பவம் நாடகமாகவும் அரங்கேற்றப்பட்டது.

ஒரு ஆண் தன் காதல் தோல்வி அடைந்தால், தண்ணி அடித்து தன் வேதனை-யை வெளிப்படுத்தி விடுவான். ஆனால் ஒரு பெண் காதல் தோல்வியை எப்படி எதிர் கொள் வாள்? நான் வெகுநாளாய் துரத்திய கேள்வி. பதில் "பூ" படம் மூலமாக கிடைத்தது. என்னை மிகவும் பாதித்த படம். தனக்காக இல்லாவிட்டாலும் தன் குடும்பத்துக்காவது ஒரு பெண் திருமணம் செய்ய வேண்டிய சூழ்நிலையில் தள்ளப்படுகிறாள். தனக்கு விருப்பம் இல்லாவிடினும். "மௌன ராகம்" படம் ஒரு பெண்ணின் பார்வையில் நகர்கிற அற்புதமான படைப்பு. மாப்பிள்ளை நல்லாய் சம்பாதிச்சா போதும் என்று நினைக்கிற நடுத்தர வர்க்க குடும்பம். ஆனால் திருமணம் செய்து கொள்ளும் மன நிலையில் இல்லாத மகள். திருமணம் முடிந்த இரவுப் பொழுதில், வீட்டுக் கொல்லைப் புறத்தில் அமர்ந்து இருக்கிற ரேவதியை அவள் அம்மா மாப்பிள்ளை காத்திருப்பதாக சொல்லும் போது, "அம்மா ப்ளீஸ் மா, இது வேண்டாம் மா. இதே ரெண்டு நாளைக்கு முன்னாடி இதே காரியத்துக்கு வேற யாரோடாவது அனுப்பி இருப்பியா?" என்று சொல்லும் இடம் ஒட்டு மொத்த பெண் வர்க்கத்தின் நியாமும் , இத்தனை ஆண்டுகால அடிமைத்தனத்தின் வலிகளும் ஒரே ஒரு கேள்வியாய்!

ஆனால் ஒரே ஒரு புத்தகம் படிக்க முடியாமல் தவிர்த்து வருகிறேன். அது அஞ்சனா தேவ் எழுதிய விகடன் பதிப்பகத்தின் "கதவுகளுக்கு பின்னே கண்ணீர் பதிவுகள்". இந்தியாமுழுவதுமாக பயணித்து பல பெண்களின் வாழ்க்கைத் தொகுப்பே இந்தப் புத்தகம். என் கற்பனைகளுக்கும் அப்பாற்பட்டதாகவே இருக்கிறது. ஒவ்வொரு சம்பவமும்! கரு கலைப்புச் செய்வதற்காக தன் மனைவியின் வயிற்றில் உட்கார்ந்து குதித்த கணவன் ....... இப்படி பலப்பல அதிர்ச்சிகள். அந்தப் புத்தகம் என் கண்ணில் பட்டாலே ஒருவித மன அழுத்தத்திற்குத் தள்ளப்படுகிறேன். "நெஞ்சைத் தொட்ட நிழல் மனுஷிகள்" என்று இன்னொரு புத்தகம். வெவ்வேறு நாடுகளில் பெண்களை மையமாக வைத்து வெளியான படங்களின் தொகுப்பு. ஏதோ நம் நாட்டில் தான் இப்படி என்றால், அயல் நாடுகளில் பெண்களின் நிலைமை இன்னும் மோசம். ஒரு சின்ன எடுத்துக்காட்டு,

"பெண் ஏன் அடிமை ஆனாள்?" என்ற கருத்தையே ஒரு ஆண் எழுதிய நிலையில் தான் நாம் இருந்திருக்கிறோம். ஆனால், அதே கருத்தை ஒரு பெண் எழுதி இருந்தால் இன்னும் சிறப்புக்குரியதாய் அமைந்து இருக்கும்.

ஒரு மரத்தை நாம் அப்படியே ஏ ற்றுக்கொள்வதே இல்லை. அதை வேலைப் பாடுகள் கொண்ட நாற்காலியாகவோ, மேசையாகவோ இருப்பதைத் தான் விரும்புகிறோம். நாம் ஒரு விஷயத்தை இயல்பாகப் பார்க்கப் பழகவில்லையோ? ஆனால் பெண் என்பவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருமணம் செய்ய ஆண்கள் தயக்கமா?

வாழ்க்கையில் ஒரு கட்டத்தில், பெண்கள் தங்களுக்கேற்ற துணையைத் தேடிப் பாதுகாப்பான வாழ்க்கையை வாழ விரும்புவார்கள். ஆனால் ஆண்கள் அதற்கு எதிர்மறையானவர்கள். நூற்றுக்கு, தொண்ணூறு விழுக்காடு ஆண்களுக்கு விரைவிலேயே திருமணம் செய்யும் எண்ணம் ஏற்படாது.

வாழ்க்கையின் மீதான பயம், சொந்தக் காலில் நிற்பது, சுதந்திரத்தை இழக்க விரும்பாதது, பெண்கள் மீது நாட்டம் இல்லாமல் இருப்பது என்று திருமணத்தை தள்ளிப் போட, அவர்கள் நூற்றுக்கணக்கான காரணங்களை வைத்திருப்பார்கள். திருமணம் ஆகாமல் தனியாக இருப்பதை விட, திருமணம் என்ற பந்தத்திற்குள் நுழைந்தால் தான் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்பதில்லை. ஆனால் வாழ்க்கையில் மனைவி என்ற ஒரு பெண் முக்கியத்துவம் பெறும் ஒருவேளை கண்டிப்பாக வரும். அந்த நிலைக்கு வந்துவிட்ட பின்னும், இன்னமும் கூட உங்களுக்கு தகுந்த பெண்ணை கண்டு பிடிக்க திணறினால், உங்களுக்குள் இருக்கும் பிரச்சினைகளை என்னவென்று ஆராய வேண்டும். சரி, நீங்கள் திருமணம் ஆகாமல் தனியாக இருப்பதற்கான முக்கியமான 10 காரணங்களை இப்போது பார்க்கலாமா....

**சுதந்திரத்தை இழக்க விரும்பமாட்டீர்கள்** - திருமணமாகாத ஆடவராக



இருப்பதிலும் சில நன்மைகள் அடங்கியுள்ளன. நினைத்த நேரத்தில் காலை எழுந்திருக்க முடியும், பிடித்த உணவை சாப்பிட முடியும், நினைத்த இடத்திற்கு நினைத்த நேரத்தில் செல்ல முடியும். இவை அனைத்தையும் குறை சொல்ல யாரும் இருக்கமாட்டார்கள். மேலும் வீட்டில், உங்களுக்கு பிடித்த கிரிகெட் அல்லது கால்பந்து விளையாட்டை தொலைக் காட்சியில் பார்த்து இரசிப்பதற்கு பதிலாக, காதலிக்காக மணிக்கணக்கில் காத்திருக்கவோ அல்லது அவளைக் காண வெளியில் செல்வதற்கு கண்ணாடி முன் பல மணிநேரம் செலவிடவோ பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் வாழ்க்கையில் பெண்கள் வேண்டுமென்றால், கண்டிப்பாக சிலவற்றை தியாகம் செய்யத் தான் வேண்டும். அதற்கு தயாராக இல்லாதவர்கள் தான், திருமணம் புரியாமல் இருப்பார்கள்.

**அலுப்புத் தட்டும் வகையில் உள்ளவரா?**- உங்களுக்கென்று ஒரு உலகம் என்று எப்போதும் ஒரு கோட்டிற்குள்ளேயே வாழ்கிறீர்களா? அந்த உலகத்தை விட்டு வெளிவரவும், உங்கள் மனம் இடம் தரவில்லையா? அப்படியானால் உங்களைச் சுற்றி உள்ளவர்களை, நீங்கள் அலுப்புத் தட்டி தூங்க வைத்து விடுவீர்கள். அவர்களிடம் பேச சில நினைவுகள் மட்டுமே உங்களிடம் இருக்கும். சிறிது காலம் கழித்து சொன்ன கதையையே திரும்ப திரும்ப சொல்ல வேண்டியிருக்கும். இதில் பெரிய கொடுமை என்னவென்றால், அலுப்புத் தட்ட வைக்கும் குணாதிசயம் உடையவர் என்று உங்களுக்கு தெரிந்திருந்தும், அதனை இரகசியமாக வைத்திருக்க மாட்டீர்கள். ஒரு பெண்ணை உங்களால் சிரிக்க வைக்க முடிந்தால், அவளை என்ன வேண்டுமானாலும் செய்ய வைக்கலாம் என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்.

**உங்களையே விரும்புகிறீர்களா?** - நீங்கள் உங்கள் மீதே அதிக காதல் கொண்டவராக உள்ளீர்களா? அதைத் தவிர வேறு எதுவும் உங்களை கவரவில்லையா? அப்படியானால் அதிக கவர்ச்சியுடன் அழகான பெண்ணைக் கண்ட போதிலும் கூட, உங்கள்மனதில்"அவளைவிட நான்தான் அழகு" என்ற எண்ணம் இருக்கும். மற்றவர்களின் மேல் குற்றம் கண்டுபிடிப்பது சுலபம். ஆனால் கடினமானது, நம்மீது உள்ள குறைகளை நாம் உணர்வது. நீங்கள் இந்த வகை ஆணாக இருந்தால், ஏன் இன்னும் திருமண பந்தத்தில் ஈடுபடவில்லை என்று இப்போது புரிந்திருப்பீர்கள்.

**பெண்களை விட விளையாட்டின் மீது மோகம்** - இந்த தலைமுறையைச் சேர்ந்த விளையாட்டு விரும்பிகள், கணிப்பொறி முன் அமர்ந்து விளையாடுவதில் அலாதி காதல் கொண்டுள்ளனர். அவர்களை பொறுத்த வரை ,விளையாட்டில் எதிரிகளை வீழ்த்தி, முதல் இடத்தை அடைந்து, உலக பதிவை உடைத்தெறிந்தால் தான் இடைவேளையே விடுவார்கள். ஆகவே இவ்வகையைச் சேர்ந்தவராக இருந்தால், ஏன் உங்களுக்கு இன்னும் காதலி இல்லை என்பது தெளிவாக புரிந்திருக்கும். அப்படியே ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்தாலும், ஒன்று நீங்கள் மாற வேண்டும் அல்லது அவள் உங்களுக்காக மாற வேண்டும்.

**உறவில் ஈடுபட விருப்பமின்மை** - சுதந்திரமாக இருப்பதை தான் நீங்கள் விரும்புகிறீர்கள் என்றால் வாழ்க்கையில் ஏன் பெண் ஒரு அங்கமாக இல்லை என்பது உங்களுக்கு சொல்லிப் புரிய வைக்க வேண்டியதில்லை. பொதுவாக பெண்களுக்கு ஒரு உறவில் ஈடுபடுவது என்பது ரொம்பவும் முக்கியமான ஒன்றாகும். அவர்களை விட்டுவிட்டு வேறு பெண்ணை நீங்கள் நாடலாம் என்ற பயம் உங்கள் மீது இருக்கலாம். ஆனால் இந்த புதிய உறவு என்பது ஒவ்வொரு உறவு முறையிலும் முக்கியமான ஒன்று. இந்த உறவின் மீது மதிப்பு வைத்துள்ள ஒரு ஆணைத் தான் பெண்கள் விரும்புவார்கள். இதைத் தவிர மற்றவை மீது விருப்பம் காட்டும் ஆணை, எந்தப் பெண்ணுக்கும் பிடிக்காது.

**வேலை இல்லையா?** - அனைத்து பெண்களுக்கும் அன்பளிப்பு மற்றும் பரிசுப் பொருட்களின் மேல் நாட்டம் இருப்பதில்லை. ஆனால் சிலசமயங்களில் வெளியே செல்ல வேண்டும் என்று கண்டிப்பாக ஆசைப்படுவார்கள். வெளியே செல்வதென்றால், சாப்பிட ஏதாவது வாங்கித் தருவது, பயணச் செலவை ஏற்பது, பொழுதுபோக்கு அம்சங்களுக்கு செலவழிப்பது போன்றவைகளாகும். ஆனால் வேலை போய்விட்டதென்றால், இந்தச் செலவை எல்லாம் உங்களால் செய்ய முடியாது. அதனால் கையில் பணம் இல்லாத போது, காதல் போன்றவற்றில் விழமாட்டீர்கள்.

**அமைதியானவரா ?**- அமைதியாக இருந்து, மற்றவர்களுக்கு உதவி புரிந்து அனுசரணையாக நடந்து கொள்பவரைதான் ஒரு பெண் விரும்புவாள் என்று நீங்கள் நினைத்தால், முதலில் உண்மையை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வகை நல்ல குணங்கள் உள்ள ஆண்கள், பெண்களிடம் சகஜமாகப் பழகுவதற்கு அதிக காலம் எடுப்பார்கள். சில நேரம் மிகவும் அதிக நேரம் எடுப்பதால், அந்தப் பெண் அவன் வாழ்க்கையை விட்டே சென்றிருப்பாள். மேலும் பெண்ணின் கண்களுக்கு மிகவும் நல்லவனாக, அமைதியானவனாக காட்சி அளித்தால், உங்களை இளக்காரமாக நினைத்து விடுவாள். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், நீங்கள் ஒரு கால்மிதியைப் போல் பயன்படுத்தப்படுவீர்கள். ஆகவே மற்ற ஆண்களிடம் பழகும் போது, நீங்கள் காட்டும் உங்கள் கடுமையான பக்கத்தைப் பெண்கள் காணச் செய்ய வேண்டும். உங்களை இணங்கச்செய்வது கடினமாக இருந்தாலும், அதில் ஒரு இனிமையை அவர்கள் காண வேண்டும். மேலும் மற்றவர்களை தாக்கி, அவளை காப்பாற்றும் நிலை வரும் போது, நீங்கள் அப்படிச் செய்யவே அவள் விரும்புவாள்.

**அதிக வினைத்திறமைமிக்கவரா?** அடக்கம் என்ற குணத்தால் பெண்கள் ஈர்க்கப்படுவார்கள். ஆனால் அதற்காக எப்போதும் பார்த்தாலும், அதிக அடக்கத்துடன் இருந்தால், அது கொஞ்சம் அதிகம்தான். இப்படிப்பட்டவர்கள் மற்றவர்கள் பேசும் போது, குறுக்கிட்டுக் கொண்டே இருப்பார்கள். சில கடுமையான கருத்துக்கள் மற்றும் நாகரீகமற்ற நகைச்சுவையைச் சொன்னாலும் கூட, யாருக்கும் சிரிக்கத் தோன்றாது. நீங்கள் இப்படிப்பட்டவராக இருந்தால், ஒரு பெண்ணைப் பொறுத்தவரை அவள் நகத்தைத் துளையிடும் துன்பமாக நீங்கள் விளங்குவீர்கள். ஆகவே நீங்கள் ஒரு நல்ல நபராக மாறும் வரை, எந்தப் பெண்ணையும் தொந்தரவு செய்ய வேண்டாம்.

**நண்பர்கள் என்ற பெயரில் ஒரு குரங்குக் கூட்டத்துடன் இருக்கிறீர்களா?** - ஆண்களை, அவர்களின் சேர்க்கையை வைத்தே எடை போடலாம் என்று சொல்வார்கள். அதே போல் பெண்களும் கூட, அவர்களின் சேர்க்கையை வைத்துத் தான் அவர்களை எடை போடுகிறார்கள். இவ்வாறு உங்களைச் சுற்றி நண்பர்கள் என்ற பெயரில் குரங்குக் கூட்டம் ஒன்று எப்போதும் உங்களை விட்டுப் பிரியாமல் இருக்கிறதா? அப்படியானால் கண்டிப்பாக ஒரு பெண்ணும் கிடைக்கப்போவதில்லை. மேலும் பழகும் பெண்ணுடன் சிடுசிடுப்பாகவே நடந்து கொள்வார்கள். எனவே நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள், இதுவா, அதுவா என்று.

**சோம்பேறியா?**- **ஷேவ்விங் செய்யவோ அல்லது குளிக்கவோ பிடிப்பதில்லையா?**




நினைவு தெரிந்த நாள் முதல் தலைமுடியை வெட்டவில்லையா? துணிமணிகளை சரிவர துவைக்காமல், அவைகளை அழுக்குடன் அணிகிறீர்களா? மிச்சமான உணவு அறையெங்கும் சிந்திக் கிடக்கிறதா? அறையில் உள்ள பொருள்களை எங்கே என்று தேட வேண்டியிருக்கிறதா? அப்படியானால் நிச்சயம் காதல் உங்களைத் தேடி வராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



### வாட்டிவதைக்கும்
## நீரிழிவு நோய் ...

இன்று உலகில் பெரும்பாலான மனிதர்களை வாட்டி வதைக்கும் ஒரு வியாதியாக நீரிழிவு நோய் காணப்படுகின்றது. இந்நோயின் தன்மை மட்டும் அதன் பாதிப்பு என்ன என்பது தொடர்பில் நாம் ஒவ்வொருவரும் நன்கு உணர்ந்திருப்பது காலத்தின் கட்டாயமாகின்றது.
நீரிழிவு நோய் உள்ளவர்கள் உணவு மற்றும் தத்தமது அன்றாட செயற்பாடுகளில் அதிக கவனம் செலுத்துவதுபோல தமது கண்களிலும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். காரணம் நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு கண்களில் பாதிப்புகள் ஏற்பட அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன.
பெரும்பாலும் 5 முதல் 10 வருடங்கள் தொடர்ச்சியாக நரிழிவு நோய் இருப்பவர்களுக்கும், 50 வயதுக்கு மேற்பட்ட நீரிழிவு நோயாளர்களுக்கும், இன்சுலின் சார்ந்த நீரிழிவு நோயுள்ளவர்களுக்கும், நீரிழிவுடன் இரத்த அழுத்தம் இருப்பவர்களுக்கும், நீரிழிவு நோயுடன் புகைப்பிடிப்பவர்கள் மற்றும் மதுபானம் அருந்துபவர்கள் போன்றோருக்குத் தான் கண்களில் பாதிப்புகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன.
எனவே நீரிழிவு நோய் உள்ளவர்கள் ஒரு கண் வைத்தியரிடம் உங்களது கண்களை கட்டாயம் பரிசோதித்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.
ஏனென்றால் நீரிழிவு சம்பந்தமான கண் நோய் உருவாவதற்கான வாய்ப்புகள் மிகவும் அதிகமாகவே இருக்கின்றது. அவ்வாறு நீரிழிவு தொடர்பான கண் நோய் ஏற்படுமாயின் அதன் ஆரம்ப நிலையில் எந்தவிதமான அறிகுறிகளையும் அது காட்டாது. அதுபோலவே பார்வைக் குறைவைக் கூட அது ஏற்படுத்தாது. எனவே நீரிழிவு நோயுள்ளவர்களுக்கு அந்நோயுடன் தொடர்புடைய கண் நோய் இருக்கின்றதா? என்பதை சரி யாக உணர்ந்துகொள்ளக் கூட முடியாது.
நீரிழிவு நோய் எவ்வாறு கண்களைப் பாதிக்கின்றது என்று பார்க்கும் போது, நீரிழிவு நோயாளர்களின் கண்களில் காணப்படும் குருதிக் குழாய்களில் அந்நோயானது பல்வேறு வகையான பாதிப்புக்களை உருவாக்குகின்றது. இதனால் விழித்திரை வீக்கமடைவதுடன் குருதிப் பெருக்கமும் ஏற்படுகின்றது. இதனால் கண்களில் இரட்டைப் பார்வை ஏற்படுவதுடன், கண் இமை மற்றும் வெள்ளை தோல் என்பன கிருமி தொற்றுக்குள்ளாகி கண்புரை நோய் உட்பட கண்களில் பல குறைபாடுகளையும் இந்நீரிழிவு நோய் ஏற்படுத்துகின்றது.
சிலவேளைகளில் குருதியில் குளுக்கோசின் அளவு சரியாக இருக்கின்ற பட்சத்திலும் கூட கண்களில் நீரிழிவுடன் தொடர்புடைய பல்வேறு நோய்கள் தொற்றிக் கொள்வதற்கும் நிறையவே வாய்ப்புகள் உள்ளன.
எனவே நீரிழிவு நோய் உள்ளவர்கள் ஆறு மாதத்திற்கு ஒரு தடவையேனும் தங்களது கண்களை ஒரு கண் வைத்தியரிடம் காட்டுவது மிகவும் நல்லது. இல்லையேல் ஆகக்குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு தடவையேனும் கண் வைத்தியரை நாடுவதன் மூலம் கண்களில் நீரிழிவு சம்பந்தமான நோய்கள் உள்ளனவா என்பதை கண்டறிந்து கொள்ளலாம்.
ஆரம்பத்திலேயே இந்நோய் தொடர்பாக அவதானித்து வைத்திய ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தில் கண்களில் ஏற்படப்போகும் பாரிய பாதிப்புகளை தடுத்து நிறுத்திக் கொள்ள முடியும்.
ஆகவே நீரிழிவு சம்பந்தமான கண் நோய் ஒருவருக்கு ஏற்பட்டு நீண்டகாலம் ஆகிவிட்டதென்றால் அதனை சிகிச்சை முறைகளின் மூலம் கூட கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாகும். எனவே நீரிழிவு நோய் உள்ளவர்கள் கட்டாயம் உங்கள் கண்களை ஒரு கண் வைத்தியரிடம் காட்டுவது மிகவும் நல்லது.

## மருத்துவக் குறிப்பு

1. வெந்தயம், சுண்டைக்காய் வத்தல், மிளகு தலா 50 கிராம் எடுத்து வறுத்துப் பொடி செய்து தினமும் வெறும் வயிற்றில் சாப்பிட்டால் உடல் எடை குறையும்.

2. முழு நெல்லிக்காய் 4, பச்சை மிளகாய் 2, வெல்லம் சிறிதளவு மூன்றையும் சேர்த்து நன்றாக அரைத்துச் சாப்பிடுவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளுக்கு தீர்வு காணலாம்.

3. வெற்றிலையுடன் மிளகு மற்றும் பனங்கற்கண்டு சேர்த்து சாப்பிட்டால் தொண்டைப் புண் மற்றும் இருமல் குணமாகும்.

4. வெந்தயக் கீரையுடன் பச்சைமிளகாய், கொத்தமல்லி இரண்டையும் சேர்த்து அரைத்து சட்டினியாக சாப்பிட்டால் மலச்சிக்கல் தீரும்.

5. வில்வ பழத்தின் தோலை சர்க்கரை சேர்த்து சாப்பிட்டு வந்தால் குடல் சுத்தம் ஆகும்.

6. வில்வ மரத்தின் பூக்களை உலர்த்திப் பொடி செய்து தேனில் கலந்து குடித்தால் வயிறு மந்தம் குணமாகும்.

7. வில்வ மரப் பூக்களை புளி சேர்க்காமல் ரசம் வைத்து சாப்பிட்டு வந்தால் ஜீரண மண்டல உறுப்புகள் வலிமை அடையும்.

8. வங்கார வள்ளைக் கீரையுடன் சீரகத்தைச் சேர்த்து கஷாயம் வைத்துக் குடித்தால் பெருவயிறு குணமாகும்.

9. வங்கார வள்ளைக் கீரையை தொடர்ந்து உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் பருமன் குறையும்.

10. மூங்கில் முளைகளை ஊறுகாய் செய்து சாப்பிட்டால் ஜீரண சக்தி அதிகரிக்கும்.

11. முருங்கைக் கீரை சாற்றில் தேன் மற்றும் சுண்ணாம்பைக் குழைத்து தொண்டையில் தடவிக் கொண்டால் இருமல் நிற்கும்.






## மனச்சோர்வும் ஒரு நோய்

இயந்திரமயமான மனித வாழ்க்கையில் மனச்சோர்வும் தவிர்க்க முடியாத ஒரு நோயாகி விட்டது. உலகில் பிறந்த எல்லோரும் ஏதோ ஒருவகையில் மனச் சோர்வுக்கு ஆளாகிய நிலையிலேயே வாழ்கின்றனர். அந்த வகையில் இந்த மனச் சோர்வு நோயின் உச்சக்கட்ட நிலையை தான் மனிக் டிப்ரஷன் (Manic Depression) என்று சொல்கின்றார்கள்.
இந்நோய்க்கு இலக்கானவர்கள் ஒரு நிமிடம் உலகத்தின் உச்சியில் ஏறி நிற்பது போல் மிகவும் உற்சாகமாக இருப்பார்கள், அடுத்த சில நிமிடங்களிலேயே அதள பாதாளத்தில் விழுந்து கிடப்பது போல நடந்து கொள்வார்கள்.
அதிக சந்தோசமும், அளவுக்கு மீறிய சோகமும் இந்நோயாளர்களின் நடத்தைகளில் வந்து போகும். சந்தோஷமான மனோ நிலைமையில் இருக்கும்போது எதையும் செய்ய துணிவார்கள். அத்துடன் அபரிமிதமான சிந்தனைகளை கொண்டவர்களாகவும், உலகத்தைத் தலைகீழாக மாற்றியமைக்கும் யோசனைகளையும், அறிவுரைகளையும் சொல்லும் திறமை கொண்டவர்களாகவும் இருக்கின்ற அதேவேளை தேவைக்கு அதிகமாக செலவழிப்பார்கள். தம்மை முன்னிலைப்படுத்தியே எல்லாச் செயல்களையும் செய்வார்கள்.
அதுபோலவே அதே நபர் அடுத்த நாள் காலையில் சோர்ந்து, உடைந்து, தளர்ந்து போய் மிகவும் மனச்சோர்வுடன் காணப்படுவார். நேற்று ஏன் அப்படி செய்தேன்? ஏன் அப்படி சொன்னேன்? ஏன் அப்படி நடந்து கொண்டேன்? என மனவேதனைக்கும் துயரத்துக்கும் ஆளாகுவார்கள்.
இதனால் மேலும் மனச்சோர்வு அதிகரித்து ஒருவிதமான பரிதாப நிலைக்கு செல்வதுடன், தன்னுடைய வாழ்க்கைக்குத் தேவையான மிக சாதாரணமான வேலைகளை கூட செய்ய முடியாத நிலைக்கு ஆளாகுவார்கள்.
அந்தவகையில் தன்னுடைய உடல் பராமரிப்பைக் கூட செய்ய முடியாத அளவுக்கு சோர்ந்து போவதுடன், வாழ்க்கை தன்னை விட்டு எங்கோ தொலை தூரத்திற்கு சென்றுவிட்டதாக நினைத்துக் கொள்வார்கள்.
இவ்வாறு மனோநிலை பாதிக்கப்பட்டு மனிக்டிப்ரஷன் நிலையை அடையும்போது இவர்களுடைய வாழ்க்கையும் குழம்பிப் போய் விடுகின்றது.
எனவே ஆரோக்கியமான மனோநிலையில் பூமியில் பிறக்கின்ற மனிதனுக்கு மனிக்டிப்ரஷன் நோய் ஏற்படுவதற்கான காரணங்களை எவை என்று பார்க்கும் போது, அதற்கு பல காரணங்கள் பின்னணியாக இருக்கின்றன. அவையெல்லாம் ஒன்றோடொன்று ஒத்துப் போவதும் இல்லை. மனிதனுக்கு மனிதன் வேறுபடும் தன்மை கொண்டது. அந்த வகையில்...
சிக்கலான குடும்ப அமைப்பில் பிறந்து வளர்ந்த குழநதைகள் வளர்ந்து பெரியவர்களானதும் இந்நிலையை அடைவதற்கான சாத்தியங்கள் அதிகம் உண்டு.
ஒரு நபரின் இளமைக்காலத்தில் நடந்த துன்ப நினைவுகளின் தொடர் எதிரொலிகளும் அவற்றையே நினைத்து நினைத்து வருத்தமடைதல்.
இயற்கையான உணர்வுகளை அடக்கி வாழ்தல், அதாவது இளம் வயதில் அடக்கி, அதட்டி வளர்க்கப்பட்ட குழந்தைகள் தம் உணர்வுகளை வெளிப்படுத்த பயப்படுதல். இது அவர்கள் வளர்ந்த பிறகும் தன் உணர்வுகளை ஏனையவர்களிடம் வெளிப்படுத்த பயப்படும் நிலைக்கு வருவதால் எதிர்காலத்தில் மனிக்டிப்ரஷன் நோய்க்கு இலக்காகும் வாய்ப்பு அதிகம்.
வாழ்க்கையில் ஏற்பட்ட கொடிய அனுபவங்கள்.
உள, உடல் அமைப்பும் பரம்பரை ரீதியான சில அம்சங்களும். அதாவது மரபணுக்கள் ரீதியாக தொடர்வது.
போன்ற பல காரணங்கள் தான் மனிக்டிப்ரஷனை ஏற்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் விசித்திரத் திருடன்!





குற்றம் நடந்த இடத்தில் காவல் துறைக்கு முதலில் கிடைக்கும் க்ளூ... கைரேகைகள். காவல் துறை விரல் ரேகைப் பிரிவில்' பணியாற்றி, இப்போது 'சன் டிடெக்டிவ் ஏஜென்ஸி' நடத்தி வரும் வரதராஜன் கைரேகைகள் பற்றிச் சொல்கிறார். "கருவில் இருக்கும் குழந்தையின் ரத்த ஓட்டம் விரல் நுனிகளுக்குச் சென்று, அதற்கு மேலே செல்ல முடியாமல் சுழன்று திரும்புவதால் ரேகைகள் உருவாகின்றன என்கிறார்கள். உலகில் ஒருவரின் விரல் ரேகை இன்னொருவரைப் போல் இருக்காது. அது இரட்டைக் குழந்தையாக இருந்தாலும் சரி! நமது தோற்றம் நாளுக்கு நாள் மாறக்கூடியது. ஆனால், எத்தனை வருடங்கள் ஆனாலும் கைரேகை கொஞ்சம் கூட மாறுவது இல்லை. எனவே, அதை 'கடவுள் கொடுத்த முத்திரை' என்று வர்ணிக்கிறார்கள் விரல் ரேகை நிபுணர்கள்.

கைரேகை பதியக் கூடாது என்பதற்காகக் குற்றவாளிகள் கிளவுஸ் அணிவது உண்டு. கொஞ்ச நேரம் கிளவுஸ் அணிந்தாலும் கை வியர்த்து கழற்றி விட மனம் துடிக்கும். குற்றவாளிகள் இந்த 'அன் ஈஸி' மனநிலைதான் பொலிஸாருக்குப் பல விதங்களில் உதவி செய்திருக்கிறது. பெரும்பாலான குற்றவாளிகள் பூட்டை உடைக்கும் போது கிளவுஸைக் கழற்றி விடுவார்கள். காரணம், கிளவுஸ் அணிந்து அவர்களால் சுத்தியலை பிடிக்க முடியாது. எனவே பூட்டில் இருந்து கைரேகை எடுத்துவிட முடியும். சிலர் கொள்ளையோ, கொலையோ நடத்தி முடித்ததும் கிளவுஸ் கசகசப்பைத் தாங்க முடியாமல் எங்காவது தூக்கி எறிந்து விடுவார்கள். அதை ரிவர்ஸில் எடுத்தால் கைரேகை பளீர். வெளிநாடுகளில் குற்றவாளிகள் அதிகம். கிளவுஸ் அணிவது இயல்பாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்கள் எப்போதும் கிளவுஸ் அணிந்தபடி இருப்பார்கள்.

விரல் நுனிகளில் நுண்ணிய வியர்வைச் சுரப்பிகள் அதிகம். அவை வியர்வையைச் சுரந்து கொண்டே இருக்கின்றன. இந்த வியர்வைதான் நாம் ஒரு பொருளைத் தொடும்போது அதன் மீது ரேகையாகப் பதிகிறது. ஒரு திருட்டோ, கொள்ளையோ நடந்த இடத்துக்கு முதலில் சோதனையிட வருவது காவல் துறையைச் சேர்ந்த விரல்ரேகை நிபுணர்கள் தான். வந்ததுமே 'இங்கே எந்தப் பொருளாவது இடம் மாறியிருக்கிறதா?' என்று கேட்பார்கள். இடம் மாறி இருந்தால் அதன் மீதுள்ள ரேகையைப் பதிவெடுப்பார்கள். டைட்டானியம்டை ஆக்ஸைடு, ஜிங்க் ஆக்ஸைடு போன்ற பல்வேறு ரசாயனப் பொருட்களைத் தேவைக்கு ஏற்ப கலந்து, குறிப்பிட்ட பொருளின் மீது தூவினால், அதில் படிந்திருக்கும் ரேகை (வியர்வை ஈரம்) ஒட்டிக் கொண்டு விடும். பிறகு, ஒரு லென்ஸ் வைத்துப் பார்த்தால், ரேகை அமைப்பு துல்லியமாகத் தெரியும்.

கண்ணாடி போன்ற வழவழப்பான தளம் கொண்ட பொருள்களில் பதியும் ரேகைகள் பல மாதங்கள் இருக்கும். அதுவே, பேப்பரில் பதியும் ரேகை அரை மணி நேரம் கூடத் தாக்குப் பிடிக்காது. மழைக் காலத்தில் வியர்வை அதிகம் சுரக்காது. எனவே அப்போது பதியும் கைரேகை பலவீனமாக இருக்கும். ஒரு பிரதேசத்தில் ஒரு திருட்டுச் சம்பவம். ஒரு வீட்டில், ஒரு குடத்தில் போட்டு வைத்திருந்த நகைகளைக் கொள்ளையடி த்த திருடன், குடத்தில் தன் கைரேகை பதிந்திருக்கும் என்று பயந்து, அதைக் கிணற்றில் போட்டு விட்டான். ஆறு மாதம் கழித்து, கிணற்றுக்குள் இருந்து குடத்தை எடுத்த போது ரேகை துல்லியமாகக் கிடைத்தது. திருடன் பிடிபட்டான்.

பல வீடுகளில் நகைகள், பணம் என்று தினம் தினம் திருட்டுப் போனது. எல்லாமே பகலில் நடந்த திருட்டுக்கள். திருடன் பூட்டை உடைக்கவில்லை. ஜன்னல் கம்பியை வளைக்கவில்லை. காவல் துறைக்குக் குழப்பமான குழப்பம். கைரேகை நிபுணர்களை வைத்து ரேகை எடுத்துப் பார்த்த போது, குழப்பம் கூடிவிட்டது. கிடைத்த ரேகைகள் ஒரு நாலு வயதுக் குழந்தையின் ரேகை போன்று சிறியதாக இருந்தது. குழந்தையைப் பழக்கி திருடுகிறார்களோ? என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டது காவல் துறை.

அங்கே இருந்த கைரேகை நிபுணருக்குத் திடீரென ஒரு சந்தேகம் வந்தது. அந்தத் தெருவில் அவர் ஒரு குரங்காட்டியைப் பார்த்திருந்தார். குரங்குகளுக்கு மனிதர்களைப் போல ரேகைகள் உண்டு. 'அந்தக் குரங்கைப் பிடித்து ரேகை எடுத்துப் பார்த்தால் என்ன? என்று அவருக்குத் தோன்றியது. ரேகை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்ததில் அந்தக் குரங்குக் குட்டிதான் திருடன் என்று கண்டுபிடித்து விட்டார்கள். குரங்கைத் திறமையாக திருடப் பழக்கி இருக்கிறான் அந்தக் குரங்காட்டி. மிருகங்கள் செய்கிற குற்றத்துக்கு நமது சட்டத்தில் தண்டனை கிடையாது. எனவே, அந்தக் குரங்காட்டிக்குத் தண்டனை கிடைத்தது. உலகிலேயே ஒரு குரங்கின் கைரேகையை எடுத்து குற்றவாளியைப் பிடித்த விசித்திரமான கேஸ் தமிழ் நாட்டில்தான் நடந்தது!"

# கணவனுடன் தூங்கினால் ஆயுள் தண்டனை



35 வயதான, ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் இருந்தார். அவருக்கு இந்தியாவில் பஞ்சாபில் மணப் பெண் பார்த்தனர். மணப்பெண், கால் முடமானவர்.

திருமணத்துக்காக, அந்த இளைஞன், இங்கிலாந்தில் இருந்து பஞ்சாபுக்கு கடந்த 2009 ஆம் ஆண்டு அழைத்துச் செல்லப்பட்டார். தாலி கட்டுவதற்கு முன்பு, அவரை அப்பெண் பார்க்கவில்லை. தாலி கட்டிய பிறகுதான், தனது கணவர் இயல்பான மனிதர் அல்ல என்பதை அவர் புரிந்து கொண்டார். இருப்பினும், அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அவருடன் வாழத் தொடங்கினார்.

திருமணத்துக்கு பிறகு, இருவரும் இங்கிலாந்து திரும்பினர். இங்கிலாந்து சட்டப்படி, "உடலுறவுக்கு" சம்மதிக்கவோ, மறுக்கவோ இயலாத நிலையில் உள்ள மனநிலை பாதிக்கப்பட்டவரின் திருமணம் ரத்து செய்யப்படும்.

எனவே, இவர்களது திருமணத்தை ரத்து செய்யுமாறு பர்மிங்காமில் இதற்கென உள்ள விசேட நீதிமன்றத்தில் அரசுத்தரப்பு முறையிட்டது. அந்த இளைஞரை, மனநல மையத்தின் பராமரிப்புக்கு அனுப்பி வைத்தது.

ஆனால், தங்கள் திருமணத்தை ரத்து செய்ய வேண்டாம் என்று அந்த பெண் கேட்டுக் கொண்டார். இந்த வழக்கில் நீதிபதி ஹோல்மன் விசித்திரமான தீர்ப்பு அளித்தார். அந்த வாலிபர், உடலுறவுக்கு உடன்படும் திறன் படைத்தவர் அல்ல என்று நீதிபதி குறிப்பிட்டார்.

எனவே, அவருடன் தூங்கி அவருடைய மனைவி எந்த வகையிலாவது பாலியல் ரீதியாக நெருக்கம் வைத்துக் கொண்டால், அந்த வாலிபர் குற்றச்செயலில் பாதிக்கப்பட்டவராகி விடுவார் என்றும், அதன் அடிப்படையில் அவருடைய மனைவிக்கு ஆயுள் தண்டனை கிடைக்கும் என்றும் நீதிபதி கூறினார்.

அதே சமயத்தில், அந்த பெண்ணின் கோரிக்கையை ஏற்று, திருமணத்தை ரத்து செய்ய மறுத்து விட்டார். தனது துயரமான நிலைமையை மனவலிமை மற்றும் கண்ணியத்துடன் அப்பெண் தாங்கி வருவதாக அவர் பாராட்டு தெரிவித்தார்.

"கணவருடன் தூங்கினால் ஆயுள் தண்டனை" என்று இங்கிலாந்தில் இதுபோன்று ஒரு நீதிபதி தீர்ப்பை அளித்திருப்பது. இதுவே முதல்தடவையாகும்.

ஒரு சமூகத்தில் வாழும் ஒவ்வொருவருக்குள்ளும் சில விடயங்கள் நெருடிக் கொண்டிருக்கும். சிலர் அதை வெளிக்காட்டிக் கொள்வார்கள். பலர் தமக்குள் வைத்துக் கொள்வார்கள். அந்தவகையில் வழமையாக எழுத்துக்களால் விதைக்கப்பட்டவை சில காட்சிகளால் நகைச்சுவையுடன் விபரித்துள்ளது தான் "துலைக்கோ போறியள்" என்ற இக்குறும்படமாகும்.

இத்தலைப்பானது வடக்கில் மிகவும் அருகிப் போய்க் கொண்டிருக்கும் ஒரு பேச்சு மொழியாகும். ஒருவர் போய்க் கொண்டிருக்கும் போது "எங்கே போகிறீர்கள்" என்பது ஒரு அபசகுனமாகக் கருதப்படுவதால் இப்படி அழைத்து வினாவுவார்கள்.

உடுப்பிட்டி நாவலடி, நெல்லியடி, நவிண்டில், வதிரி போன்ற 5 களங்களில் உருவாக்கப்பட்ட 8 காட்சிகளுடன் இக்குறும்படம் உருவாக்கம் பெற்றுள்ளது.

இக்குறும்படத்திற்கான திரைக்கதை, வசனத்தை வலைப்பதிபுனரும் எழுத்தாளருமான ம.தி.சுதா எழுதி இயக்க முக்கிய பாத்திரங்களாக ஜெயதீபன், ஏரம்பு, செல்வம், செல்லா மற்றும் சுதேசினி ஆகியோர் நடித்திருக்கிறார்கள்.

ஒளிப்பதிவை செல்லா மேற்கொள்ள படத் தொகுப்பை கே. செல்வமும் இசையை அற்புதனும் வழங்கியிருக்கிறார்கள். குறும்படத் தயாரிப்பை ரஜிகரன் மேற்கொள்ள படத்திற்கான பட வடிவமைப்புக்களை மதுரன் அமைத்திருக்கிறார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கைகளில்லை கால்களில்லை கவலைகள் இல்லை

"உங்களுக்கு ஒரு பையன் பிறந்திருக்கின்றான்" என நிக்கை (Nick Vujicic) அவனுடைய தந்தையிடம் காட்டிய போது அடி வயிற்றில் குமட்டிக் கொண்டு வர, ஆஸ்பத்திரியை விட்டு வெளியே ஓடி வந்து வாந்தியெடுத்தார் தந்தை !
"இந்தாங்கோ உங்கள் பிள்ளை" என தாயிடம் நீட்டியபோது "ஐயோ.. என் முன்னாலிருந்து கொண்டு போங்கள்" என நான்கு மாதங்கள் அவனைத் தொடாமலேயே அழுது தீர்த்தாள் தாய்.

ஒவ்வொரு நாளும் எண்ணி எண்ணி ஆவலுடன் குழந்தையைக் கொஞ்ச காத்திருந்த அந்த பெற்றோருக்குப் பிறந்ததோ கைகளும் கால்களும் இல்லாத ஒரு குழந்தை ! இரண்டு கைகளும், இரண்டு கால்களும் இல்லாத ஒருவனால் என்ன செய்ய முடியும் பிச்சை எடுப்பதைத் தவிர ? என்று தானே நினைக்கத் தோன்றுகிறது ?
அந்தக் கவலைதான் அந்த ஆஸ்திரேலியப் பெற்றோருக்கும் இருந்தது. ஒரு சின்ன குறை இருந்தாலே சமூகத்தில் தாக்குப் பிடிப்பது மிகவும் கடினம். கைகளும் இல்லாமல், கால்களும் இல்லாமல் இவனெல்லாம் என்ன வாழ்க்கை வாழப்போகிறான்? தொட்டதுக்கெல்லாம் யாரோ ஒருவருடைய உதவியில் தானே இவன் வாழ முடியும் என்பதே பெற்றோரின் தலையாய கவலையாய் ஆகிப் போனது.
"கவலைப்படாதீர்கள். உங்கள் மகன் ஒரு நாள் ஓடுவான், குதிப்பான், நீச்சலடிப்பான், விளையாடுவான், என்றெல்லாம் சொல்லியிருந்தால்" அன்றைக்கே ஒரு கொலை விழுந்தாலும் விழுந்திருக்கும். ஆனால் எல்லாமே ஒரு பரபரப்பான சினிமா போல நிஜமாகியிருக்கிறது.
தற்போது தனது இருபத்து ஆறாவது வயதில் இருக்கும் நிக், இன்றைக்கு மேலே சொன்ன எல்லாவற்றையும் செய்கிறார். கூடவே கோடானு கோடி மக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டும் சின்னமாகவும் உருவெடுத்திருக்கிறார்.
இப்போது மிகவும் உற்சாகமாய் இருக்கும் நிக் கடந்து வந்த ஆரம்ப வாழ்க்கை ரொம்பவே கொடுமையானது. கைகளும் கால்களும் இல்லையென்றாலும் பெற்றோர் அவனை பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டார்கள். பள்ளிக்கூடத்துக்குச் சென்றால் பிள்ளைகள் நிக்கை நெருங்கி வரவே பயப்பட்டார்கள். ஏதோ ஏலியனைப் பார்ப்பது போலத் தான் நிக்கை பாரத்தார்கள். எல்லோரையும் போல சாதாரணமாய் வாழ முடியாத ஏக்கம் நிக்கிற்குள் கனத்தது. மற்றவர்களின் கிண்டலும், கேலியும், அருவருப்புப் பார்வையும் நிக்கை நிலைகுலைய வைத்ததில் ஆச்சரியம் ஏதும் இல்லை. டீன் ஏஜ் வயது வரை நிக் செய்த செபம் என்ன தெரியுமா ? "கடவுளே தலைமுடி வளர்வது போல எனக்கு கைகளும் கால்களும் வளர வேண்டுமே" என்பது தான்.
அப்போதெல்லாம் தொட்டதுக்கெல்லாம் தற்கொலைச் சிநதனைகள் வந்து கொண்டே இருந்தன. எப்படியாவது செத்துப் போக வேண்டும் என்று நினைத்தாலும் அதையும் தனியே செய்ய முடியாத நிலை. "கொஞ்சம் என்னைக் கொல்வீர்களா பிளீஸ்" என யாரிடமாவது கெஞ்ச வேண்டிய நிலையே நிக்கிற்கு. ஒருமுறை தொட்டியில் தண்ணீரை நிரப்பி மூழ்கிச் சாக முனைந்திருக்கிறார். கழுத்து உடையட்டும் செத்து விடலாம் என மேசையில் இருந்து தலைகீழாய் குதித்திருக்கிறார். ! என்ன செய்ய? வாழவேண்டும் எனும் விதி அவருக்கு. எல்லா தற்கொலை முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன.
ஆரம்ப காலத்தில் நிக்கின் உருவத்தைப் பார்த்து அதிர்ச்சியில் உறைந்த பெற்றோர் பின்னர் நிக்கிற்கு தன்னம்பிக்கையை ஊட்டத் துவங்கினர். 18 மாதமாக இருந்தபோதே நீச்சல் பழக்கத் துவக்கிய தந்தை, ஆறு வயதாக இருக்கும் போது கணனி கற்றுக் கொடுத்தார். தாய் பிளாஸ்டிக்கில் ஒரு வளையத்தைச் செய்து அதில் பென்சிலை மாட்டி எழுதக் கற்றுக் கொடுத்தார். இவையெல்லாம் தான் நிக்கிற்கு நிமிர்ந்து நிற்கும் தைரியத்தைக் கொடுத்தது.
நிக்கின் இடது கால் இருக்க வேண்டிய இடத்தில் ஆறாவது விரல் போல நீட்டிக் கொண்டிருக்கும் ஒரு பாகம் தான் அவனுடைய வரப்பிரசாதம். அதுதான் அவனுடைய கை, கால், துடுப்பு, எல்லாமே!. நடப்பது, எழுதுவது, நீந்துவது, விளையாடுவது என சர்வமும் அதன் வழியாகவே. இது மட்டும் இல்லாமலிருந்தால் நான் என்ன செய்திருப்பேனோ தெரியாது என சொல்லி இருக்கிறார் நிக்.
தனது பதின்மூன்றாவது வயதில் ஊனமுற்ற ஒருவரைப் பற்றிய வரலாறு ஒன்றை நிக் படித்தார். அதுதான் அவருடைய வாழ்க்கையையே புரட்டிப் போட்டது. அந்த ஊனமுற்ற மனிதர் கழுத்தையும், நாடியையும் பயன்படுத்தி கோல்ப் விளையாடியதைப் படித்தபோது நிக்கிற்குள் ஒரு மின்னல் அடித்தது. "அடடா தேவையில்லாமல் தற்கொலை செய்யப் பார்த்தேனே" என தன்னையே நொந்து கொண்டவர், "நல்ல வேளை இது வரை சாகவில்லை" என நினைத்துக் கொண்டு வாழ்க்கையை புதிய உத்வேகத்துடன் எதிர்கொள்ள ஆரம்பித்திருக்கிறார். அதுவரை கண்ணாடியைப் பார்க்கும் போது கைகளும், கால்களும் இல்லாத சதுர உடம்பு மட்டுமே தெரிந்த நிக்கிற்கு அதன் பின் தான் தனது அழகிய கண்கள் தெரிந்தன.



அதன் பிறகு கடவுளைப் பழிப்பது, சாக நினைப்பது, அழுவது, கவலை கொள்வது என அனைத்து வேண்டாத விஷயங்களையும் மூட்டை கட்டி தூர எறிந்து விட்டு உற்சாகமாகிவிட்டார் நிக். பிறருக்கு தன்னம்பிக்கை ஊட்டும் பேச்சுகளையும் நடத்தத் துவங்கிவிட்டார்.
அப்படி ஆரம்பித்த அவரது தெம்பூட்டும் பணி, 24 நாடுகளுக்குப் பயணம் செய்து இலட்சக்கணக்கான மக்கள் கூட்டத்தில் உரையாற்றுமளவுக்கு பரந்து விரிந்திருப்பது வியக்க வைக்கிறது !
தற்போது ஊனமுற்றவர்களுக்காக இயங்கும் "லைஃப் வித்தவுட் லிம்ப்ஸ்" எனும் நிறுவனத்தின் இயக்குநராகவும் இருக்கிறார் .
ஆஸ்திரேலியாவிலுள்ள மெல்போர்னில் பிறந்த நிக் இப்போது வசிப்பது அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில். சோர்வுற்றும், சோகமுற்றும் இருப்பவர்களுக்கு இப்போது உற்சாக டொனிக் இவர் தான், இவருடைய பேச்சுகள் தான்.
ஐயோ அது இல்லையே, இது இல்லையே என புலம்பும் மக்கள் எதுவும் இல்லாமல் எல்லாம் இருப்பதை விட மகிழ்ச்சியாய் இருக்கும் நிக்கைப் பார்த்ததும் விளக்கைப் போட்ட இருட்டு அறைபோல சட்டென தெளிவாகி விடுகின்றனராம். குறிப்பாக இளம் வயதினரின் தாழ்வு மனப்பான்மை, தன்னம்பிக்கைக் குறைவு, மன அழுத்தம் இவையெல்லாம் இவரைப் பார்த்ததும் பனிக்கட்டியில் வரைந்த ஓவியமாய் ஈரமாய் ஒழுகி மறைந்துவிடுகிறதாம்.
"கைகள் இல்லை, கால்கள் இல்லை, கவலைகளும் இல்லை" என இருக்கும் நிக் உண்மையிலேயே இந்த நூற்றாண்டின் வியப்புக் குறியீடாய் நிமிர்ந்து நிற்கிறார்.
இத்தனைப் பார்த்து நாம் பலவீனாங்களை தூர தூக்கிப் போட்டுவிட்டு நம்பிக்கையின் உழைப்பில் இறங்குவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை என்பது உற்சாகப் பயணமே

உற்சாகமாக பட்டாம்பூச்சியைப் போல ஓடித் திரியும் பலருக்கு உடலும் மனமும் இளமையாக இருப்பதை நாம் கவனித்திருக்கக் கூடும். கவலைகளற்ற, அல்லது தேவையற்ற கவலைகளை மூட்டைகளைப் போல முதுகில் தூக்கிச் சுமக்காத மனிதர்களுக்கு வாழ்க்கை என்பது உற்சாகப் பயணமே.

வயிறு குலுங்கச் சிரிப்பது இதய நோயையே கொஞ்சம் தள்ளி நிற்கச் சொல்லும் என்கிறது அமெரிக்காவிலுள்ள பால்டி மோர் பல்கலைக்கழக ஆய்வு ஒன்று. மன அழுத்தம் மாரடைப்பின் முதல் காரணி. மன அழுத்தமானது நமது இரத்தக் குழாய்களிலுள்ள எண்டோதெலியத்தை வலுவிழக்கச் செய்து இரத்தக் குழாய்களில் அடைப்புகளை ஏற்படுத்தி மாரடைப்பு நோயை வரவழைத்து விடுகிறது.

மனம் திறந்த சிரிப்பு மன அழுத்தத்தைக் குறைப்பதால் இரத்தக் குழாய்கள் சீராக இயங்க உதவுகின்றன, இதன் மூலம் மாரடைப்பு தவிர்க்கப்படுகிறது என இதற்கு மருத்துவ விளக்கம் அளிக்கிறார் மருத்துவர் மைக்கேல் மில்லர். ஆய்வில் ஈடுபடுத்தப் பட்ட இதய நோயாளிகள் அனைவருமே தினசரி வாழ்க்கையை இலகுவாய் ஆனந்தமாய், சிரிப்புடன் கொண்டாடாதவர்களே. !

மனதை மட்டுமன்றி உடலையும் வலுவாக்குகிறது சிரிப்பு. சிரிக்கும் போது உடலிலுள்ள அனைத்துப் பாகங்களும் இயங்குகின்றன. இரத்த ஓட்டம் அதிகமாகிறது. மூளைக்கு உயிர் வளி அதிகம் செலுத்தப்பட்டு மூளை சுறுசுறுப்படைகிறது. உடல் தசைகள், முக தசைகள் எல்லாம் அதிக இயக்கமடைந்து உற்சாகம் பெறுகின்றன. எல்லாவற்றையும் விட, உடலுக்கு அதிக நோய் எதிர்ப்பு சக்தியை வழங்குகிறது சிரிப்பு என்பது சிறப்புச் செய்தி !

சிரிக்கும் போது உடலில் லிம்ப் திரவம் வேகமாகப் பரவுகிறது. நமது உள் உடல் உறுப்புகளில் தேங்கிக் கிடக்கும் அசுத்த திரவங்களை இது வெளியேற்றி சுத்தமாக்கி விடுகிறது. கூடவே நமது செரிமானக் கோளாறுகளையும் சரி செய்து விடுகின்றன.

சிரிக்கும் போது நமது உடலில் ஏராளம் உயிர்வளியும் பரவுகின்றது. இந்த உயிர் வளி உடலை புத்துணர்ச்சியாக்குகிறது. உடலுக்குள் உயிர் வளி நிரம்பி வழியும்போது பல பக்டீரியாக்கள், மற்றும் உயிரைக் கொல்லும் புற்று நோய் கிருமிகளெல்லாம் வெளியேறத் துவங்குகின்றன. நுரையீரல் தனக்குள் தேங்கிக் கிடக்கும் கரியமில வாயுவை முழுமையாய் வெளியேற்றி உயிர்வளியைக் கொண்டு நிரப்புகிறது. யோகாசனத்தில் பயிற்றுவிக்கப்படும் மூச்சுப் பயிற்சியைப் போல சிரிப்பும் உடலுக்குள் பிராணவாயுவை நிரப்பி உடலை வலுவாக்குகிறது.

அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் மக்கள் உயிர்வளி நிலையங்களுக்குச் சென்று சுத்தமான உயிர்வளியை டொலர்கள் செலுத்தி சுவாசிக்கின்றனர். அந்த உயிர்வளி நிலையங்கள் தரும் பலனை மனம் விட்டு சிரிப்பு தரும் என்பதை அறியும் போது சிரிக்கத் தோன்றுகிறதல்லவா ?

சரி வெறுமனே உடலுக்கு உற்சாகம் தருவது தான் சிரிப்பா என நினைக்கிறீர்களா ? விஷயமே இனிமேல் தான் இருக்கிறது. சிரிக்கும் போது நமது உடலுக்குள் சுரக்கும் அமிலங்களின் பயன்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்த பயோகெமிக்கல்ஸ் செரிமானச் சிக்கல்களை சரிசெய்து, மன அழுத்தத்தை துடைத்தெறிந்து, மூளையை உற்சாகப்படுத்தி, மனதை இலகுவாக்குகிறது. ஒரு முறை மனம் விட்டுச் சிரிக்கும் போது உடலுக்குள் சுரக்கும் அமிலங்களை கடையில் பணம் கொடுத்து வாங்க வேண்டுமானால் எவ்வளவு பணம் தேவைப்படும் தெரியுமா ? சுமார் 5 இலட்சம் ரூபாய்கள் ! இன்னுமா சிரிக்கத் தோன்றவில்லை.

சிலர் வாழ்க்கையில் சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் மனம் விட்டுச் சிரிப்பார்கள். சிலருக்கு சிரிப்பு சுட்டுப் போட்டாலும் வராது. இப்படி சிரிப்பே வராதவர்கள் இப்போதெல்லாம் சிரிப்பு நிலையங்களுக்குச் சென்று செயற்கையாய் சிரித்து வைக்கிறார்கள். ஆனால் இப்படிப்பட்ட செயற்கைச் சிரிப்பினால் அதிக பயன் இல்லை என்பது ஒரு தரப்பினரின் வாதம். ஆனந்தமான சூழல், இலகுவான மனநிலை, இயல்பாக பீறிட்டுக் கிளம்பும் சிரிப்பு, வாழ்க்கையை நேர்மனதுடன் அணுகும் நிலை இவையெல்லாம் கலந்த சிரிப்பே முழுமையானது என்பது அவர்களுடைய விளக்கம்

பத்து நிமிட நேரங்கள் உடற்பயிற்சி கூடத்தில் வியர்க்க விறுவிறுக்க ஓடுவதும், ஒரு நிமிடம் ஆனந்தமாய் சிரிப்பதும் ஒரே பயன் தரக் கூடியது என கூறி வியக்க வைக்கிறார் சிரிப்பு குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள வில்லியம் பிரை என்பவர். மேலை நாடுகளில் பிரபலமாய் இருக்கும் "கிச்சு கிச்சு மூட்டும்" நிகழ்ச்சிகள் தற்போது இந்தியாவிலும் மென்பொருள் துறை உட்பட பல்வேறு துறைகளில் மிகப் பிரபலம். இதற்கென்றே சிறப்புக் குழுக்கள் இயங்குகின்றன. இவர்களுடைய ஒரே வேலை நகைச்சுவைகளை அடுக்கடுக்காய் சொல்லி பார்வையாளர்களைச் வாய்விட்டுச் சிரிக்க வைப்பது தான். இதற்கான கட்டணம் பல ஆயிரம் ரூபாய்கள் !

நமக்கு வரக் கூடிய நோய்களில் 85 விழுக்காடு நோய்களை நமது உடலிலுள்ள சக்தியைத் தூண்டுவதன் மூலமாக குணப்படுத்த முடியும் என அடித்துச் சொல்கிறார் இங்கிலாந்தின் மருத்துவர் பிரான்ஸ் இன்கெல்பிங்கர். அதற்குத் தேவையானதெல்லாம் மருந்துகளோ, ஊசிகளோ அல்ல, மாறாக உற்சாகமான சிந்தனைகள், இலகுவான மனம், அன்பு செலுத்தும் குணம், நம்பிக்கை, நகைச்சுவை, சிரிப்பு, ஆனந்தம் இவையே!

சிரிப்புக்கு வலிகளைக் குறைக்கும் வலிமையும் இருக்கிறது என்கிறார் நார்மன் கசின் என்பவர். இவர் நிரந்தர முதுகெலும்பு வலியினால் பாதிக்கப்பட்டவர். பத்து நிமிடம் வயிறு குலுங்கச் சிரிக்கும் ஒரு நகைச்சுவைப் படத்தைப் பார்த்தால் என்னால் இரண்டு மணி நேரம் நிம்மதியாகத் தூங்க முடிகிறது என்கிறார் அவர். அதன் பின் சிரிப்பு வலியைக் குறைக்கும் என பல்வேறு மருத்துவ அறிக்கைகள், ஆய்வுகள் வெளியாகிவிட்டன. ஜேம்ஸ் வால்சன் எனும் அமெரிக்க மருத்துவர் தனது நூலான " சிரிப்பும் உடல்நலமும்" எனும் நூலில் சிரிப்புக்கு இருக்கும் வலி நீக்கும் குணத்தைப் பற்றி விவரித்திருக்கிறார்.

வலியைக் குறைக்கும் எண்டோர்பின்கள் உடலில் சுரக்க சிரிப்பு உதவும் எனும் நம்பிக்கை சிலருக்கு, இல்லையில்லை சிரிக்கும் போது உடலில் இறுக்கம் குறைவதே வலி குறைய காரணம் என்னும் நம்பிக்கை வேறு சிலருக்கு. எப்படியோ சிரித்தால் வலி குறையும் என்பது மட்டும் பொதுவாகவே மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

உங்களுக்குத் தெரிந்த நண்பர்களில் எப்போதும் உற்சாகமும், சிரிப்புமாய் இருக்கும் நண்பர்கள் நிச்சயம் ஒருவராவது இருப்பார்கள். அவர்களுக்கு கடைசியாய் எப்போது காய்ச்சல் வந்தது என நினைத்துப் பாருங்கள் வியப்படைவீர்கள் என்கின்றனர் மருத்துவர்கள். காரணம் சிரிப்பும், களிப்புமாய் இருக்கும் உற்சாகவாதிகளை இந்த காய்ச்சல் அடிக்கடி தொந்தரவு செய்வதில்லையாம் !

இன்னொரு வியப்பூட்டும் ஆராய்ச்சியும் சிரிப்பைக் குறித்து வெளியாகியிருக்கிறது. அதாவது பாலூட்டும் தாய்மார்கள் உற்சாகமாய் சிரித்துக் கொண்டிருக்கும் மனநிலையில் இருந்தால் அவர்களுடைய குழந்தை நோய்நொடியின்றி ஆரோக்கியமாய் இருக்குமாம். அதிலும் குறிப்பாக தாய்மை நிலையிலிருக்கும்போதே உற்சாகமாய் சிரித்துக் கொண்டிருந்தால் மழலைக்கு இன்னும் அதிக பலனாம். காரணம் உற்சாகமாய் சிரித்து வாழும் தாய்மார்களுக்கு பாலில் இம்யூனோகுளோபுலின் A அதிகமாய் இருப்பது தான் என மருத்துவம் குறித்து வைத்திருக்கிறது.

இன்னோர் மருத்துவ அறிக்கை உயிர்க்கொல்லி நோயான எயிட்ஸைக் கூட சிரிப்பு துரத்தும் எனக் கூறி அசர வைக்கிறது. அதாவது எயிட்ஸ் கிருமிகளுடன் போராடும் டி- அணுக்களை சிரிப்பு வலிமைப் படுத்துகிறதாம் !



மகிழ்ச்சியும், சிரிப்பும் குறித்த விழிப்புணர்வு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. கி.மு எழுநூறுகளில் வாழ்ந்த சாலமோன் மன்னன் தனது நீதி மொழிகளில், "மகிழ்வார்ந்த உள்ளம் நலமளிக்கும் மருந்து வாட்டமுற்ற மனநிலை எலும்பையும் உருக்கிவிடும்" என எழுதியிருப்பதை நினைத்தால் ஆச்சரியம் மேலிடுகிறது. கி.பி பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அறுவை சிகிச்சை மருத்துவர் ஹென்றி டி மோண்டிவிலி, அறுவை சிகிச்சைக் காயத்தை சிரிப்பு விரைவில் குணப்படுத்திவிடும் எனவும், எதிர்மறை உணர்வுகள் காயத்தை அதிகப்படுத்தும் எனவும் கூறியிருப்பதும் கவனிக்கத் தக்கது.

சிரிப்பு குருதி அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும், நுரையீரலை வலிமையாக்கும், இதயத்தைப் பாதுகாக்கும், உடலுக்கும் மனதுக்கும் தேவையான பயிற்சியை அளிக்கும், மன அழுத்தத்தைத் துரத்தும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும், மூளையை வலிமையாக்கும் என மருத்துவ உலகம் சிரிப்பின் பயன்களைப் பட்டியலிடும்போது விழிகள் விரிய, உதடுகள் மலர வியக்க வேண்டியிருக்கிறது.

ஆனால், இன்றைய அழுத்தமான வாழ்க்கை முறை அடுத்த வீட்டு நபரின் பெயரைக் கூட அறிந்து கொள்ளாத மனிதர்களைத் தான் வீதிகள் தோறும் உருவாக்கியிருக்கிறது. அலுவலகங்கள் தங்கள் கண்ணாடி அறைகளை கணினியை விரல்களால் விசாரிக்கும் மனித ரோபோக்களால் நிரப்பியிருக்கின்றன. மனிதர்கள் சிரிக்க மறந்து விட்டார்களோ என ஐயப்படத் தோன்றுகிறது.

சிரிப்பு வரவில்லையேல் நல்ல நகைச்சுவை நூல்கள் வாசிக்கலாம், திரைப்படங்கள் பார்க்கலாம், நண்பர்களுடன் உரையாடலாம் என்றெல்லாம் யோசனைகள் சொல்கின்றனர் மருத்துவர்கள். அப்படியும் சிரிப்பு வரவில்லையா ? அனைத்தையும் மறந்து ஒரு குழந்தையிடம் உங்களை ஒப்படையுங்கள். குழந்தையின் தேசத்துக்குச் சென்று வாருங்கள். சிரிப்பு உங்களை சிறையெடுக்கும்.

அது ஆரோக்கியமான வாழ்க்கை வேண்டுமா நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இது தான், வாழ்க்கையை ஆனந்தத்துடன் அணுகுங்கள், உடற்பயிற்சி செய்யுங்கள், சரியானதை உண்ணுங்கள் கூடவே வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் வஞ்சகம் பாராமல் வாய்விட்டுச் சிரியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அமெரிக்க மிக்ஸிகன் மாநிலத்தில் சென். ஜோசப் நகரிலுள்ள குடும்ப வேடிக்கை தளத்தில் ருவிக்கி என்ற அணில் நீரில் சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டு பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

தற்போது பிரபலங்களுக்குரிய மரியாதையைப் பெற்று விளங்கும் ருவிக்கி தனது நீர்ச்சறுக்கு விளையாட்டு திறமையை வெளிப்படுத்த அமெரிக்காவெங்கும் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளது.

இந்த அணில் டொட்ஜ்போல் ஏ ட்றூ அன்டர்போக் ஸடோறி மற்றும் அன்கர்மான் த லிஜென்ட் ஒப் பர்கன்டி ஆகிய இரு திரைப்படங்களில் நடித்துள்ளமை குறிப்பிடததக்கது





வடமேற்கு இங்கிலாந்திலுள்ள பண்ணையொன்றைச் சேர்ந்த பசுவொன்று ஒரேசமயத்தில் 3 கன்றுக் குட்டிகளை ஈன்றுள்ளது. இவ்வாறு பசுவொன்று ஒரே சமயத்தில் 3 கன்றுக்குட்டிகளை ஈனுவது 700000 க்கு ஒன்று என்ற விகிதத்தில் இடம் பெறும் அபூர்வ நிகழ்வாகும்.

விர்ரல் எனும் இடத்திலுள்ள கிறீன் ஹவுஸ் பண்ணையைச் சேர்ந்த 901 ஆம் இலக்க பசுவே இயற்கையான முறையில் கருத்தரித்து இவ்வாறு 3 (காளை) கன்றுகளை அபூர்வமான முறையில் ஈன்றுள்ளது.

இந்த 3 கன்றுக்குட்டிகளும் வெவ்வேறு மூலவுருக் கலங்களிலிருந்து விருத்தியாகியுள்ளன.



# நெப்போலியன் இறந்தது எப்படி?

நெப்போலியன் போனபார்ட் எப்படி இறந்தார்? ஐரோப்பா பல்லாண்டுகளாக விடை தேடிக் கொண்டு இருக்கும் கேள்வி. ஏனெனில், மைனஸ் 26 டிகிரி குளிரில் குதிரைகளின் ரத்தத்தைக் குடித்து உயிர் வாழ்ந்தவர். தீவுச் சிறையில் இருந்து கடலை நீந்திக் கடந்த மாவீரன் நெப்போலியன். அவர் தானாக நோய்வாய்ப்பட்டு இறந்தார் என்றால், எப்படி நம்புவது? 'தனிமைச் சிறையில் நெப்போலியனுக்கு என்ன நடந்தது?' என்பதை அறிய யாருக்கும் எந்த க்ளூவும் அப்போது கிடைக்கவில்லை.

1816-ம் வருடத்தில் இருந்து 1821-ம் ஆண்டில் அவர் இறக்கும் வரை உதிர்ந்த முடிகள் ஆய்வுக்குக் கிடைத்தன. அப்போதுதான் நெப்போலியனின் முடிகளில் ஆர்சனிக் அமிலம் கலந்திருந்தது முதல் க்ளூவாகக் கண்டுபிடிககப்பட்டது. 'ஆரோக்கியமான ஒரு மனிதரின் முடியில் சோதனையில் வெளிப்படையாகத் தெரியும் அளவுக்கு ஆர்கனிக் இருப்பது இல்லை. எனவே, நெப்போலியன் மரணத்துக்குக் காரணம் விஷமாக இருக்கலாம்' என்று கண்டுபிடித்தார்கள். 'விஷம் கலந்த காற்றை அவர் சுவாசித்ததாலோ, விஷம் கலந்தவற்றை உண்டதாலோ நெப்போலியன் மரணம் அடைந்திருக்கலாம்!' என்று லக்ஸம்பர்க் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ராபர்ட் வென்னிங் அறிவித்தார்.

பின்பு, நெப்போலியனின் அறை பற்றிய ஆய்வுகள் இரண்டு க்ளூக்களை அளித்தன. ஒன்று, அங்கு இருந்த ஓவியம். இரண்டாவது, அந்த அறையின் சுவரை அலங்கரித்த வால் பேப்பர்கள். இவை இரண்டிலுமே 'மெள்ளக் கொல்லும்' ஸ்லோ பாய்சன் பூசப்பட்டு இருந்தது. 'அந்த ஓவியத்தில் பாம்பின் விஷத்தை ஒரு வண்ணமாகப் பயன்படுத்தி இருந்தார்கள். அந்த ஓவியத்தின் அருகிலேயே இருந்ததால், விஷத்தைச் சுவாசித்து அவர் இறந்து விட்டார்!' என்று ஒரு தரப்பு ஆய்வாளர்கள் சொன்னார்கள்.

'வால் பேப்பரை ஒட்டும் பசையில் விஷத்தைக் கலந்திருந்தார்கள். பசி தாங்க முடியாமல் நெப்போலியன் வால் பேப்பரைக் கிழித்துத் தின்றதால் இறந்தார்' என்று இன்னொரு தரப்பு அறிவித்தது. இன்னும் ஊர்ஜிதமான உண்மை வெளிவந்த பாடு இல்லை!

நான்காவது க்ளூவுக்காகக் காத்துக் கொண்டு இருக்கிறது உலகம்!





வாசித்தால் பணம்*
யோசிக்காமல்
நாடுங்கள்




பெயர் : ....................
முகவரி : ....................
தொ.இல : ....................

நிபந்தனைகள் -

01.போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது.


02.10 பேருக்கு மட்டுமே பணப்பரிசு.

03.பத்திரிகை திகதியில் இருந்து 7 நாடகளுக்குள் விண்ணப்பம் கிடைக்க வேண்டும்.

04.பரிசுக்கூப்பன்களை தாபால் முலம் அல்லது பத்திரிகை முகவர் மூலம் அனுப்பவும்.

05.குலுக்கல் மூலம் அதிர்ஸ்டசாலி தெரிவு செய்யபடுவர்.

06.உங்களுக்கான வெற்றித்தொகை காசோலை மூலம் அனுப்பி வைக்கப்படும்.

# பொழிந்த பனி, எழுந்த அச்சு!

தற்செயலாகக் கிடைக்கும் 'க்ளூ'க்கள் தான் உலகின் பெரும் கண்டுபிடிப்புகளுக்குக் காரணம். ஆய்வு மனப்பான்மையும் திடீரெனக் கிடைக்கும் 'க்ளூ'வும் இணைநதால் அட்டகாசக் கண்டுபிடிப்புகள்!

நியூடனின் முன்பு விழுந்த ஆப்பிள் அவருக்குக் கிடைத்த க்ளூ! அதை உலகம் முழுவதற்கும் பொருத்திப் பார்த்தது அவரது ஆய்வு மனப்பான்மை. இதன் விளைவே இன்று ரீஃபில் முதல் ராக்கெட் வரை சாத்தியப்படுத்துகிறது நியூட்டனின் விதிகள். இது போலவே குளிக்கும் போது கிடைத்த க்ளூவை வைத்து ஆர்க்மிடிஸ் நீரைக் கொண்டு தங்கத்தின் அளவைக் கண்டு பிடிக்கும் முறையைக் கண்டு அறிந்தார். ஒவ்வொரு கண்டு பிடிப்பின் பின்னும் ஏதேனும் ஒரு க்ளூ இருக்கும்!

18-ம் நூற்றாண்டில் ஜெர்மனியைச் சேர்ந்த ஜெனிட்டா என்ற சிறுமி தன் பெயரை மரத்தின் வேரில் கத்தியைக் கொண்டு செதுக்க முயற்சி செய்கிறாள். அதனைக் கண்ட ஜெனிட்டாவின் அப்பா அவரே செதுக்கித் தருகிறார். வெட்டப்பட்ட தன் பெயரை பனியால் மூடப்படுவது ஜெனிட்டாவுக்குப் பிடிக்கவில்லை. எனவே, பைபிளை எழுத அவள் அப்பா தயாரித்து வைத்திருந்த காகிதம் ஒன்றை எடுத்து மரத்தின் அந்தப் பகுதியை மூடுகிறாள். அதன் மீது பனி படுகிறது. அடுத்த நாள் அங்கே வந்த ஜெனியின் அப்பா மரத்தில் செதுக்கிய பெயர், தாளில் பதிந்திருப்பதைக் கண்டு, அதை பத்திரப்படுத்துகிறார். பின்னாளில் அந்தத் தாளைக் கண்ட கூட்டன்பர்க் அச்சு முறையைக் கண்டுபிடித்தார்!

லியனார்டோ டாவின்சி தன் நாட்டு அரசில் பல நல்ல பொறுப்புக்களில் இருந்தவர். ஒரு முறை அவரிடம் நாட்டின் இடப் பரப்புகளை அளவிடும் வேலை கொடுக்கப்படுகிறது. 'டேப் போன்றவற்றைக் கொண்டு அளந்தால் வேலை அதிக நாட்கள் பிடிக்கும்' என்று கண்ட டாவின்சி, ஒரு சிறிய வண்டியில் புதுமையான கருவி ஒன்றை அமைக்கிறார். வண்டியின் சக்கரம் சுத்துவதைக் கொண்டு அது எவ்வளவு தூரம் பயணம் செய்தது என்பதை அந்தக் கருவி காட்டும். இந்தக் கருவியின் மூலம் அவர் அளவிடும் வேலைகளை எளிதில் செய்தார்.

பின் நாட்களில் பைக், கார் போன்ற வாகனங்கள் வந்தபோது அவை லிட்டருக்கு எவ்வளவு கிலோ மீட்டர் தருகிறது. எவ்வளவு தூரத்தை ஓடிக் கடந்திருக்கிறது என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது என்ற கேள்வி வர.. டாவின்சி பழைய அமைப்பில் கொடுத்திருந்த 'க்ளூ'க்களின் அடிப்படையில் 'தூரம் கணக்கிடும் கருவி' கண்டு பிடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை #87, பிரதான வீதி,மன்னாரில் [illegible] 19.08.2013 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.